# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32 கதிர் 332 ஐப்பசி 07ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 24 ஒக்ரோபர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048

விலை: 20
பக்கங்கள்: 28


*யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பில்*

## தடுப்பிலுள்ள அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரிப் போராட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.24
தமிழ் அரசியல் கைதிகளின் விடுவிப்பை வலியுறுத்தி யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும், கொழும்பிலும் நேற்றுப் போராட்டங்கள் நடத்தப்பட்டன.



விரிவு பக்கம் 02,03 இல்

கொழும்பு பொறுப்புக்கூறலை தாமதித்தால் வெளிநாடொன்றில் அது நடக்கும்

# ஐ.நா. அறிக்கையாளர் அரசுக்கு எச்சரிக்கை!

*நிலைமாறு கால நீதி என்பது வேட்டையோ, களையெடுப்போ அல்ல என்றும் தெரிவிப்பு*

கொழும்பு, ஒக்ரோபர் 24
இறுதிப் போரில் நடந்தவைகள் குறித்துப் பொறுப்புக்கூறுவதை இலங்கை அரசு தொடர்ந்தும் தாமதித்து வந்தால் அதனை உறுதிப்படுத்துவதற்கு வெளிநாட்டில் உரிய நடவடிக்கை எடுக்கப்படலாம்.
இவ்வாறு அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டிகிரிப்.
"படையினரை நீதிமன்றில் நிறுத்தமாட்டோம் என்று யாரும் கூற முடியாது. நீதிமன்றமே அதனைத் தீர்மானிக்க வேண்டும். படையினரைப் பாதுகாப்பதாகக் கூறுவது சுயாதீன நீதித்துறையின் பண்புகளை மீறுவதைப் போன்றதாகும். பொறுப்புக்கூறல் பொறிமுறையைத் தொடர்ந்தும் தாமதிக்கவேண்டாம். இல்லாவிடின் பொறுப்புக்கூறும் கடப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார் அவர்.
இலங்கைக்கான தனது பயணத்தை முடித்துக்கொண்டு கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்தில் நேற்று மதியம் பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தினார். இந்தச் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
2015ஆம் ஆண்டு நான் வரும்போது இருந்ததைவிட சில மாற்றங்களை நேரடியாகக் கண்டுள்ளேன். கூட்டு அரசு, 100 நாள் வேலைத் திட்டத்திலேயே >> 25

## அரியாலைக் கொலை குறித்து விசாரிக்க 4 பொலிஸ் குழுக்கள்

கொழும்பு, ஒக். 24
யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அரியாலைப் பகுதியில் இளைஞர் ஒருவர் துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு மூன்று சிறப்புப் பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.
வடக்கு மாகாண >> 25

அரியாலைத் துப்பாக்கிச் சூட்டுக் கொலை

## நுரையீரலைத் தாக்கியது குண்டு குருதிப் பெருக்காலேயே சாவு

யாழ்ப்பாணம், ஒக். 24
அரியாலைத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்த இளைஞனின், முதுகுப் பக்கமாக நுழைந்த துப்பாக்கிக் குண்டு நெஞ்சைப் பிரித்து வெளியேறும்போது நுரையீரலைப் பாதித்ததாலும் அதனால் அதிக குருதிப் பெருக்கினாலுமே இளைஞன் உயிரிழந்தான் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்தது.
அரியாலை உதயபு >> 04

அரியாலையில் உயிரிழந்த இளைஞனை

## புலனாய்வாளர்களே சுட்டுக் கொன்றனரா?

யாழ்ப்பாணம், ஒக். 24
அரியாலையில் நேற்றுமுன்தினம் சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞனை அடையாளம் காணப்படாத புலனாய்வு அணி ஒன்றே சுட்டுக்கொன்றதா என்பதைக் கண்டறிவதற்கான விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்று உதயன் அறிந்தான்.
"இந்தச் சம்பவம் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டதா என்பதை ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ மாட்டேன்" >> 25

## ஜயசூரிய மீதான வழக்கால் அரசுக்குப் பிரச்சினை வரும்

கொழும்பு, ஒக். 24
முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜயசூரியவுக்கு எதிராக பிரேசிலில் தொடரப்பட்டுள்ள வழக்கு, மிகப் பெரிய பிரச்சி >> 25

## பாதாள உலக நபர் திவுலப்பிட்டியவில் சுட்டுக் கொலை

கொழும்பு, ஒக். 24
கம்பகா மாவட்டத்தின் திவுலபிட்டியவில் பாதாள உலகக் குழுவினருக்கும், சிறப்புப் பொலிஸ் அதிரடிப் படையினருக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் அலுத்தபொல குரே என்று அறியப்படும் >> 25

## கணித விநாடிவினா: வடக்குக்கு முதலிடம்

யாழ்ப்பாணம், ஒக். 24
தேசியமட்டப் பிரிவினருக்கான (ஜி.சி.ஈ. உயர்தரப் பிரிவு - 2) கணித விநாடி வினாப் போட்டியில் வடக்கு மாகாணம் முதலிடத்தைப் பெற்றுள்ளது என்று வடக்கு மாகாணக் கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
கொழும்பு பாதுக்கையில் மீபே >> 25

## பயங்கரவாதச் சட்டத்தை உடன் நீக்கவேண்டும்

*அரசுக்கு பப்லோ அறிவுரை*

கொழும்பு, ஒக். 24
பயங்கரவாத தடைச் சட்டத்தை உடனடியாக நீக்கவேண்டும். அதற்குப் பதிலாகக் கொண்டு வரப்படும் சட்டம் பன்னாட்டுத் தரங்களைக் கொண்டதாக அமையவேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பான விடயங்களை உடனடியாக மீளாய்வு செய்யவேண்டும். >> 25



>> 25

## 4 கிலோ கஞ்சாவுடன் குடும்ப பெண் கைது

*இயக்கச்சியில் நேற்றுச் சம்பவம்*

முச்சந்தி முரளி



இருக்கிற சொல் பிரச்சினை போதாதென்று இது வேறயா?...

## ஒருமித்த நாடு என்கிற சொல் பொருத்தமற்றது

*அதனை நீக்க சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்து*

கொழும்பு, ஒக். 24
வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையிலிருந்து 'ஒருமித்த நாடு' என்ற சொற்பதம் நீக்கப்படவேண்டும் என்று இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. 'ஏக்கிய ராஜ்ஜிய' என்ற சிங்களச் சொல்லுக்கு ஒருமித்த நாடு என்கிற தமிழ் பொருத்தமானதல்ல என்றும் சங்கம் தெரிவித்துள்ளது.
அரசமைப்புத் தொடர்பில் ஆராய்வதற்கு, சட்டத்தரணிகள் சங்கம் நேற்றுச் சிறப்புக் கூட்டத்தை நடத்தியது. சுமார் >> 25

## மகாநாயக்கர்களைப் பகைத்துக்கொண்டு செயற்படும் அரசினது ஆயுள் நீடிக்காது

*மகிந்த ராஜபக்ச ஆரூடம்*

கொழும்பு, ஒக். 24
புதிய அரசமைப்பைக் கொண்டு வந்து அதிகாரத்தைப் பகிர்வதன் ஊடாக நல்லிணக்கம் ஏற்பட்டுவிடாது. மகாசங்கத்தினரும் இதனையே வலியுறுத்தியுள்ளனர். மகாநாயக்க தேரர்களைப் பகைத்துக்கொண்டு செயற்படும் அரசின் ஆயுள் நீடிக்காது.
இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
நாகொட அமரவங்க தேரரின் சடலத்துக்கு இறுதி அஞ்சலி செலுத்திய பின்னர் >> 25

## திடீர் காய்ச்சலால் குழந்தை இறப்பு

*குருதி மாதிரி சோதனைக்காக கொழும்புக்கு*

யாழ்ப்பாணம், ஒக். 24
பிறந்து 21 நாள்களேயான பெண் குழந்தை 2 நாள்கள் பீடிக்கப்பட்டிருந்த ஒரு வகைக் காய்ச்சலால் நேற்று உயிரிழந்தது. குழந்தையின் குருதி மாதிரி பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. >> 04

## நேரடி விவாதத்துக்கு வருவதற்கு மகிந்தவுக்குத் துணிவிருக்கிறதா?

*சவால் விடுக்கிறார் ஜே.வி.பி. தலைவர்*

கொழும்பு, ஒக். 24
புதிய அரசமைப்பு நாட்டைப் பிரிப்பதாக மகிந்த கூறுகிறார். அவருக்குத் துணிவிருந்தால் அரசமைப்புத் தொடர்பில் என்னுடன் நேரடியாகப் பகிரங்க விவாதத்துக்கு வரவேண்டும்.
இவ்வாறு ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திசாநாயக்க சவால் விடுத்தார்.
அம்பாந்தோட்டையில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
மக்களைக் குழப்பும் >> 25




# தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி யாழ். பல்கலையில் கையெழுத்துப் போராட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.24

அநுராதபுரத்தில் உணவு ஒறுப்பில் ஈடுபட்டு வரும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வலியுறுத்தி யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கையெழுத்துப் போராட்டமொன்றை நேற்று ஆரம்பித்தனர்.

யாழ். பல்கலைக்கழக மாண்வர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், யாழ். பல்கலைக்கழகத்தில் இந்த கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் வட மாகாணம் முழுவதும் மாணவர்களால் முன்னெடுக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களிலும் மாணவர்களால் கையெழுத்துகள் நேற்றுச் சேகரிக்கப்பட்டன.

அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்துள்ள போராட்டத்துக்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரியுள்ளது.

சேகரிக்கப்படும் கையெழுத்துக்கள் மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இந்தக் கையெழுத்துப் போராட்டத்துக்கு அனைத்து மக்களும் ஆதரவை வழங்க வேண்டுமென யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேபோன்று கிழக்கு மாகாணத்திலும் அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக மாணவர்களால் கையெழுத்துப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. (ரி2)



# கந்து வட்டிக் கொடுமையால் இரு குழந்தைகள் உட்பட ஒரு குடும்பமே தீக்குளிப்பு

## தமிழ்நாட்டில் கொடுமை



சென்னை,ஒக்.24

தமிழ்நாட்டில் நெல்லை மாவட்டச் செயலாளர் அலுவலகத்துக் முன்பாக இரு குழந்தைகள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் தீக்குளித்துள்ளனர். இந்தச்சம்பவம் மனிதநேயம் மிக்கவர்களின் நெஞ்சத்தை பதறவைத்துள்ளது.

கந்துவட்டிக்கு பணம் பெற்ற இவர்கள் பணத்தை மீளச் செலுத்த முடியாத நிலையில் பொலிஸார் அச்சுறுத்தியதால் இந்த முடிவை எடுத்துள்ளனர் என கூறப்படுகின்றது.

இது தொடர்பாக மாவட்டச் செயலாளருக்கு கடிதம் ஒன்றை வழங்குவதற்காகச் சென்ற போதே இவர்கள் இந்த விபரீத முடிவை எடுத்துள்ளனர்.

பணத்தை வழங்கியவர்கள் பொலிஸாருக்கு இலஞ்சம் வழங்கினர் எனவும் அதைப் பெற்றுக்கொண்ட பொலிஸார் தங்களை அச்சுறுத்தினர் எனவும் அவர்கள் கூறினர்.

மாவட்டச் செயலாளர் அலுவலகத்துக்கு முன்பாகவைத்து அவர்கள் இரு குழந்தைகள் மீதும் தங்கள் மீதும் மண்ணெண்ணெய் ஊற்றியபோது அங்கு பலபேர் நின்றனர் எனவும் அவர்கள் அதைத் தடுப்பதற்கு முன்வரவில்லை எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்த இடத்தில் நின்றவர்கள் மனித நேயத்துடன் செயற்படாமை குறித்து பலரும் கவலை வெளியிட்டுள்ளனர். உடலில் தீவைத்து தற்கொலைக்கு முயன்றவர்கள் எரிகாயத்தால் அலறிக்கொண்டிருந்தனர். அவர்களை மீட்டவர்கள் அரச வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். (ற)

# தென்கிழக்குப் பல்கலையில் கோவிலுக்கு அடிக்கல்

அம்பாறை,ஒக்.24

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சம்மாந்துறை வளாகத்தில் இந்துக் கோவிலுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த இந்து மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்காக இந்தக் கோவில் அமைக்கப்படவுள்ளது.

பல்கலைக்கழகத்தில் 90 இந்து மாணவர்கள் கற்கும் நிலையில் அவர்களின் வழிபாட்டுக்காக இந்துக்கோவில் அமைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

வீரமுனை பிள்ளையார் கோயிலின் பிரதம குருக்கள் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கணிதவியல் விஞ்ஞானத்துறை தலைவர் மூத்த விரிவுரையாளர் கலாநிதி கே. கோமதிராஜ், விரிவுரையாளர் தசாஜினி நாகேந்திரன் மற்றும் பிரயோக விஞ்ஞான பீடத்தின் இந்து அமைப்பின் பிரதிநிதிகளும் மாணவர்களும் கலந்துகொண்டனர். (ற.ரி4)

# தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்ககோரி கவனவீர்ப்பு



கொழும்பு, ஒக்.24

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுவிக்கக் கோரி கொழும்பிலுள்ள உயர்நீதிமன்றத்துக்கு முன்பாக நேற்று நண்பகல் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

அரசியல் கைதிகளின் விடுதலைக்கான தேசிய இயக்கம் இந்தக் கவனவீர்ப்பை மேற்கொண்டிருந்தது.

அநுராதபுர சிறைச்சாலையில் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளின் கோரிக்கைகளை உடன் நிறைவேற்ற வலியுறுத்தியும், அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிக்க வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

போராட்டத்தின் போது இளைஞர் ஒருவர் முகத்தை மறைத்த வண்ணம் அரை நிர்வாணமாக புத்தகம் ஒன்றுடன் சென்று போராட்டத்தைக் குழப்ப முனைந்தார். பொலிஸார் அந்த இளைஞனை அங்கிருந்து வெளியேற்றினார்கள். (ற)






உலக உணவு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நிகழ்வும் பேரணியும் நேற்றுத் திருகோணமலையில் நடைபெற்றன. பேரணியின் முடிவில் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கான மனு கிழக்கு மாகாண ஆளுநர் ரோகித போகல்லா கம விடம் கையளிக்கப்பட்டது. (ற-ரி4.40)



# அரசியல் கைதிகளின் விடுதலைக்காக கிழக்குப் பல்கலையில் ஆர்ப்பாட்டம்



மட்டக்களப்பு.ஒக்.24

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள், நேற்றுக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு வந்தாறுமூலை வளாக முன்றிலில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த மாணவர்கள் கலந்துகொண்டனர்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க வேண்டும், விசாரணையின்றி சிறைவாசம் அனுபவிக்கும் தமிழ் அரசியல் கைதிகளை நிபந்தனைகளின்றி விடுதலை செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்துப், போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அரசியல் கைதிகள் விடயத்தில் அரசும், தமிழ்த் தலைமைகளும் பாராமுகமாகவே இருந்து வரு கின்றன. இலங்கையின் சிறைகளில் பல அரசியல் கைதிகள் விசாரணைகள் இன்றி நீண்டகாலமாக முடிவின்றித் தடுத்து வைக்கப்பட்டு சிறைவாசம் அனுபவித்து வருகின்றனர்.

இவர்கள் தொடர்பாக எந்த விதமான முன்னேற்றகரமான செயற்பாடுகளையும் கூட்டரசு எடுப்பதாகத் தெரியவில்லை.

இதன் ஒரு செயற்பாடாகவே வவுனியால் இருந்த தமிழ் அரசியல் கைதிகள் மூவரின் வழக்கு அநுராதபுரம் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

இதனை எதிர்த்துத் தமிழ் அரசியல் கைதிகள் மூவரும் உணவு ஒறுப்பை மேற்கொண்டு வருகின்றார்கள். இவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும், என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

அநுராதபுரத்தில் உணவு ஒறுப்பில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றி அவர்களை விடுவிக்க வேண்டுமென வலியுறுத்தி, யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொள்ளும் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் வகையில் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

"நீதி வேண்டும், தமிழன் நீண்டு வாழ", "இத்தனை வருடம் சிறையில் இருந்தும் இரக்கம் வரவில்லையா", "நாமத்தில் மட்டும் நல்லாட்சியா", "அரசியல் கைதிகளின் உரிமையைப் பெற்றுக்கொடு", "நிபந்தனையின்றி தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்", "சட்டமா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடு நியாயமானதா", "அரசியல் கைதிகளின் விடுதலையை துரிதப்படுத்து" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்திய வண்ணம் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(ற-ரி2, 46)

## அதிக இலாபமளிக்கும் நிலக்கடலை உற்பத்தி



மட்டக்களப்பு.ஒக்.24

மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலக்கடலைச் செய்கை தற்போது அதிக இலாபமளிக்கும் உற்பத்தியாக மாறியிருக்கின்றது என்று மட்டக்களப்புவிவசாயத்திணைக்களத்தின் மறுவயற் பயிர் பிரிவுப்பாடவிதான உத்தியோகத்தர் நல்லதம்பி கணேசமூர்த்தி தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது.

சோளச் செய்கைகளைக் காட்டு யானைகள் அழித்து விடுவதால் விவசாயிகள் அதிக இழப்புக்களையும் மனச் சோர்வையும் சந்திக்க வேண்டியிருந்தது. இதனால் சோளச் செய்கையைக் கைவிட்ட விவசாயி கள் நிலக்கடலைச் செய்கைக்கு மாறியிருப்பது அவர்களுக்கு அதிக இலாபத்தை ஈட்டக் கூடியதாகவுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் 500 ஹெக்ரேயரில் மேற்கொள்ளப்பட்ட நிலக்கடலைச் செய்கை தற்போது சுமார் 800 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் மேற்கொள்ள ஊக்கமளிக்கப்பட்டுள்ளது. நிலக்கடலைச் செய்கை மூலம் ஒரு ஏக்கரில் சுமார் 96 ஆயிரம் ரூபாவை விவசாயிகள் நிகர இலாபமாகப் பெறக்கூடியதாகவிருக்கிறது. ஒரு ஏக்கர் நிலத்தில் நிலக்கடலைக்காக ஏற்படும் மொத்த உற்பத்திச் செலவு சுமார் 64 ஆயிரம் ரூபா மட்டுமே.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்தப் பெரும் போகத்தில் விதை நிலக்கட லையை உற்பத்தி செய்யும் நோக்கில் ஆயிரத்து 940 கிலோ விதை நிலக்கடலை வழங்கப்பட்டுள்ளது. இவற்றைக் கொண்டு 50 ஏக்கரில் நிலக்கடலை யைப் பயிரிட்டு ஏக்கருக்கு 800 கிலோ விளைச்சல் என்ற எதிர்பார்ப்புடன் சுமார் 40 ஆயிரம் கிலோ அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நிலக்கடலையை உற்பத்தி செய்ய முடியும். இதைத் தவிர நுகர்வுக் கான நிலக்கடலை உற்பத்திக்கென் 5 ஆயிரத்து 400 கிலோ விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

50 வீதம் விவசாயிகளின் பங்களிப்புடன் இவற்றை நாம் விவசாயிக ளுக்கு வழங்குகின்றோம். தற்போது உள்ளூர் விவசாயிகள் மறுவயற் பயிர் உற்பத்திக்காக ஊக்குவிக்கப்படுவதால் மறுவயற் பயிர் விதைகளுக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவும் தட்டுப்பாடு எதிர்காலத்தில் முழுமையாக நீங்கும் என எதிர்பார்க்கின்றோம் - என்றார். (ற-ரி2, 46)

## துன்னாலை இளைஞன் படுகொலை; பொலிஸாரின் விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம்.ஒக்.24

வடமராட்சி கிழக்குப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பொலிஸார் இருவரினதும் விளக்கமறியல் நேற்று நீடிக்கப்பட்டது.

இந்த வழக்கு நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, எதிர்வரும் 27 ஆம் திகதிவரை சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த ஜூலை 9 ஆம் திகதி 6ஆம் கட்டை மணற்காட்டுப் பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் துன்னாலையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

பொலிஸாரின் சைகையைமீறி பயணித்த ஹன்ரர் வாகனத்தின் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது என்றும் அதில் இளைஞர் உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ரி2, 26)

## பாதுகாப்புப் பிரதானிமீது தாக்குதல்; கைதாகிய இருவருக்கு விளக்கமறியல்

கொழும்பு.ஒக்.24

அரச தலைவர் பாதுகாப்புப் பிரிவின் பிரதானி மீது தாக்குதல் நடத்தினர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் நேற்று உத்தரவிட்டார் கொழும்பு மல்லசேகர மாவத்தையில் அமைந்துள்ள அரச தலைவர் செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற விருந்து உபசாரமொன்றின் போது, அரச தலைவர் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி மீது தாக்குதல் நடத்தப்பட்டது என கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் அரச தலைவர் பாதுகாப்புப் பிரிவின் உத்தியோகத்தர் ஒருவரும், கடற்படை உத்தியோகத்தர் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

இருவரையும் எதிர்வரும் நவம்பர் 6ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் லால் ரணசிங்க பண்டார, நேற்று உத்தரவிட்டார்.

அரச தலைவர் செயலகத்தில் கடந்த 7ஆம் திகதி நடைபெற்ற விருந்து உபசாரமொன்றின் போது, சந்தேக நபர்கள் மதுபோதையில் பாடல் பாடிக் கொண்டிருந்தனர் எனவும், அரசதலைவர் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பாடல் பாடுவதை நிறுத்துமாறு கோரியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் போது ஆத்திரமடைந்த இருவரும் கதிரை ஒன்றை எடுத்து அரச தலைவர் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியைத் தாக்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஆசிரி நுவான் செனவிரட்ன மற்றும் கடற்படை உத்தியோகத்தர் என். முத்துநாயக்க ஆகியோரே இவ்வாறு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

(ரி2)

## பாடசாலைகள் தரமுயர்த்தப்பட்டால் மாணவர்கள் சாதனையாளராகலாம்

*மக்கள் அமைப்பின் தவிசாளர் தெரிவிப்பு*

மட்டக்களப்பு.ஒக்.24



படுவான்கரையில் உள்ள பாடசாலைகள் தரமுயர்த்தப்படுவதுடன் சிறந்த கல்வியும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என இராசமாணிக்கம் மக்கள் அமைப்பின் தவிசாளர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

வறுமைக்கோட்டின் கீழ் கல்வி பயிலும் 5 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளை வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

படுவான்கரை பிரதேசம் போரால் பாதிக்கப்பட்டமையால் இந்தப்பகுதியில் உள்ள பாடசாலைகள் அபிவிருத்தி குறைவாக உள்ளது. தற்போதுள்ள கூட்டரசு அபிவிருத்தியை புறக்கணிப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

சிறந்த கல்வி உறுதிப்படுத்தப்படுமாக இருந்தால் கல்வி கற்பதற்கு மாணவர்கள் நகர்ப் புறப்பாடசாலைகளைத் தேர்ந்தெடுக்கும் தேவையிருக்காது. பிரத்தியேக வகுப்புகளுக்கு மாணவிகள் தனியாகச் செல்லும் போது பல அசம்பாவிதங்கள் நடைபெறவும் வாய்ப்புண்டு. பாடசாலைகள் சிறந்த ஆளணி மற்றும் பௌதீக வளங்களைக் கொண்டு அமையுமாக இருந்தால் ஒவ்வொரு மாணவரும் சாதனையாளராக சமூகத்தில் அந்தஸ்தைப் பெறுவார்கள்-என்றார். (ற-ரி5,46)

## யாழ். பல்கலைக்கழகத்துக்கு புதிய வாகனங்கள் கையளிப்பு

கிளிநொச்சி.ஒக்.24

வாகனங்கள் மற்றும் உபகரணத் தொகுதிகள் என்பன யாழ் பல்கலைகழகத்தின் கிளிநொச்சி விவசாய மற்றும் பொறியியல் பீடங்களுக்கு வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்று கிளிநொச்சி அறிவியல் நகர் விவசாய பீடத்தில் இடம்பெற்றது. இந்திய அரசின் 90 மில்லியன் ரூபா பெறுமதியில் 48 மில்லியன் ரூபாவுக்கு இரண்டு அதி சொகுசுப் பேருந்துகள், டபிள்கப் வாகனம், மற்றும் உழவு இயந்திரம் என்பன பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டன.

ஏனைய தொகுதி வாகனங்களும், உபகரணங்களும் விரைவில் கையளிக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. யாழ். இந்திய துணைத்தூதரக கொன்சியூலர் ஆர். நடராஜன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இவற்றைக் கையளித்தார்.

யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் இ. விக்கினேஸ்வரன், மற்றும் பொறியியல், விவசாய பீடங்கள் உள்ளிட்ட பீடங்களின் பீடாதிபதி கள் விரிவுரையாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், மாணவர்கள் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(ரி2, 35)



# சைட்டம் தொடர்பான அரசின் முடிவு பின்தள்ளிப்போகிறது

கொழும்பு, ஒக். 24
அரச தலைவர் மைத்திரிபாலவால் சைட்டம் தொடர்பில் நேற்று இறுதித் தீர்மானம் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தபோதும், அது இன்னும் சில தினங்களிலேயே தெரிவிக்கப்படும் என்று அரச தலைவர் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக் கிழமை நடைபெற்ற விவாதத்தில், சைட்டம் தொடர்பில் இறுதித் தீர்வை அரச தலைவர் மைத்திரிபால எதிர்வரும் திங்கட் கிழமை முன்வைப்பார் என்று உயர் கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்திருந்தார். அரச தலைவர் ஊடகப் பிரிவாலும் அதே அறிவித்தல் முன்வைக்கப்பட்டிருந்தது.

அரச தலைவர் ஊடகப் பிரிவால் நேற்று மாலை பத்திரிகைச் செய்திக் குறிப்பு அனுப்பப்பட்டது. அதில், அண்மைய தினங்களில் சைட்டம் மருத்துவக் கல்லூரி தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பிரச்சினைக்கு அரசு எவ்வாறான தீர்வை வழங்கவுள்ளது என்பதை எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிடுகின்றனர். சைட்டம் பிரச்சினை தொடர்பாக இன்றும் (நேற்று) நாம் கலந்துரையாடியுள்ளோம். இந்த வார இறுதிக்குள் அதாவது அடுத்த இரண்டு அல்லது மூன்று தினங்களுக்குள் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வொன்றை பெற்றுக்கொடுப்பதற்குத் தயாராகவுள்ளோம் என்று அரச தலைவர் மைத்திரிபால நிகழ்வொன்றில் உரையாற்றியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5,31)

# புதிய அரசமைப்புக்கு எதிராக தலதா மாளிகையில் வழிபாடு!

## நாளை நடத்துகின்றது மகிந்த அணி

கொழும்பு, ஒக். 24
புதிய அரசமைப்பை உருவாக்கும் தேசிய அரசின் முயற்சியைத் தோற்கடிப்பதற்காகத் தீவிர பரப்புரையை முன்னெடுத்து வரும் மகிந்த அணி, புதிய அரசமைப்புக்கு எதிராக வழிபாடுகளையும் நடத்தவுள்ளது.

இதன் ஆரம்பகட்டமாக நாளை புதன்கிழமை கண்டி தலதா மாளிகையில் சிறப்பு வழிபாடு நடத்தப் படவுள்ளது.

முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் தலதா மாளிகையின் கெப்படிபொல மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் வழிபாடுகளில் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கவுள்ளனர்.

பெங்கமுவே நாலக தேரர் வழிபாடுகளை நடத்தவுள்ளார். அதன்பின்னர், புதிய அரசமைப்பு எமது நாட்டுக்குவேண்டாம், என்று வலியுறுத்தும் மாநாடும் தலதா மாளிகையின் கெப்படிபொல மண்டபத்தில் நாளை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. (5)

# மக்களை ஏமாற்றுகிறார் தலைமை அமைச்சர் ரணில்

## சொல்கிறார் திஸ்ஸ விதாரண

கொழும்பு, ஒக். 24
2020ஆம் ஆண்டுநாட்டின் பொருளாதாரத்தை நிலையானதெருநிலைக்கு கொண்டுவரவும், 2025ஆம் ஆண்டு வறுமையை ஒழிக்கும் நாடாகவும் மாற்ற தலைமை அமைச்சர் முன்மொழிந்த பொருளாதாரப் பிரகடனம் மக்களை ஏமாற்றும் செயல். இவ்வாறு முன்னாள் அமைச்சரும், லங்கா சமசமாஜ கட்சியின் தலைவருமான திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.



கொழும்பில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரசு அதிகாரத்துக்கு வந்து இரண்டரை ஆண்டுகள் கடந்தும் பொருளாதார அபிவிருத்தி வேகம் இருந்ததை விடக் குறைவாகவே பதிவாகியுள்ளது. மகிந்த காலத்தில் பொருளாதார அபிவிருத்தி வேகம் 7.8ஆக இருந்தது. தற்போதைய அரசின் பொருளாதார அபிவிருத்தி வேகம் 4.3ஆக குறைவ்டைந்துள்ளது.

அரசின் முறையற்ற நடவடிக்கையால் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளது. பன்னாட்டுச் சமூகத்திடமிருந்து கடன் பெற்றுள்ளதால் மக்களின் நிவாரணங்கள் குறைக்கப்படுகின்றன. கடனை அடைப்பதற்கு நாட்டின் வளங்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

இவ்வாறான நிலையில் 2025ஆம் ஆண்டு நாட்டின் வறுமையை ஒழித்துச் செல்வந்த நாடாக மாற்றும் தலைமை அமைச்சரின் பொருளாதாரக் கொள்கை மக்களை ஏமாற்றும் நடவடிக்கையாகும். 2025 இல் தனி நபர் வருமானம் 5 ஆயிரம் டொலர்வரை அதிகரிக்கச் செய்வதாகவும் தலைமை அமைச்சர் தெரிவித்துள்ளார். ரணில் பொறுப்பில்லாமலே இவ்வாறு தெரிவித்துள்ளார். தனி நபர் வருமானத்தை 5 ஆயிரம் டொலர் வரை அதிகரிப்பதென்றால் நாட்டின் அபிவிருத்தி 9.3ஆக இருக்க வேண்டும் என்று பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

அரசிடம் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான முறையான எந்த வேலைத்திட்டமும் இல்லாமல் 2025ஆம் ஆண்டாகும் போது நாட்டின் வறுமையை ஒழித்து செல்வந்த நாடாக மாற்றுவதற்கு எதிர்பார்ப்பதாக தலைமை அமைச்சர் தெரிவித்திருப்பதானது மக்களை ஏமாற்றும் நடவடிக்கையாகும். பொறுப்புவாய்ந்த தலைமை அமைச்சர் பொறுப்பற்ற முறையில் மக்களுக்கு வாக்குறுதியளிப்பதானது மோசமான செயலாகும்'- என்றார். (5,31)

### உள்ளூராட்சித் தேர்தல் குழப்பம்

# அலரிமாளிகையில் தலைவர்களுடன் தலைமை அமைச்சர் இன்று சந்திப்பு

கொழும்பு, ஒக். 24
உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக எழுந்துள்ள குழப்பநிலை சம்பந்தமாக கட்சித் தலைவர்களுடன் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இன்று சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபாவும் கலந்து கொள்ளவுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்துவதற்கு தேவையான அனைத்துச் சட்டத்தத் திருத்தங்களும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு விட்டன. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தச் சட்டங்கள் இதுவரை வர்த்தமானியில் அறிவிக்கப்படாமையின் காரணமாக தேர்தல் தொடர்ந்தும் தாமதம் செய்யப்பட்டு வருகின்றது.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா நாடாளுமன்றத்தில் முன்வைத்திருந்த ஆங்கில மொழி மூலமான திருத்தத்திற்கும் சிங்கள மொழி மூலமான சட்டவரைவிலும் பல்வேறு வேறுபாடுகள் இருப்பதாக மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியிருந்தது.

நுவரெலிய, அம்பமுவ பிரதேச சபைகளின் எண்ணிக்கை அதிகரிப்பது தொடர்பாக அமைச்சர் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு முன்னணிக்கும் அமைச்சர் பைசர் முஸ்தபாவுக்கும் இடையில் ஏற்கனவே இணக்கம் ஏற்பட்டிருந்த நிலையில் குறித்த கோரிக்கைகள் உள்வாங்கப்படாதது முக்கிய பிரச்சினையாக மாறியுள்ளது. கல்முனை தொடர்பாகவும் பிரச்சினைகள் காணப்படுகின்றன. இவற்றினால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவில்லை.

இந்த நிலையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முகமாக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மலையகப் பிரதிநிதிகளையும் கட்சித் தலைவர்களையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். இந்தச் சந்திப்பு அலரி மாளிகையில் இன்று நடத்தப்படவுள்ளது. (5,31)

# தொடருந்து மோதி இந்தியர் சாவு

## பம்பலப்பிட்டியில் நேற்றுச் சம்பவம்

கொழும்பு, ஒக். 24
இந்தியாவில் இருந்து வர்த்தக மெய்வல்லுநர் சங்கப் போட்டிகளில் பங்கேற்க இலங்கை வந்திருந்த குழுவுடன் வருகைதந்த இந்தியர் பம்பலப்பிட்டிப் பொலிஸ் பிரிவில் தொடருந்து மோதி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2. மணியளவில் பதிவாகியுள்ளது. 64 வயதுடைய ராஜேந்திரன் பனிடாய் எனும் இந்தியரே இவ்வாறு உயிரிழந்ததாக பம்பலபிட்டிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கையில் இடம்பெற்ற வர்த்தக மெய்வல்லுநர் சங்க மெய்வல்லுநர் போட்டிகளில் பங்கேற்க குழுவொன்றுடன் இலங்கை வந்துள்ள நிலையில், பம்பலப்பிட்டிப் பகுதிக்கு நேற்றுச் சென்றுள்ளார். தொடருந்துப் பாதையில் நின்றவாறு கடலை ரசித்துக் கொண்டிருந்துள்ளார். களுத்துறையில் இருந்து மருதானை நோக்கிப் பயணித்த தொடருந்துடன் அவர் மோதுண்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். (5,31)

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

## நுரையீரலை...

ரத்தை சேர்ந்த டொன்போஸ்கோ டெஸ்மன் (வயது 25) என்ற இளைஞனே நேற்றுமுன்தினம் கொல்லப்பட்டார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சடலம் நேற்று உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அதன் பின்னர் வைத்தியசாலையின் சட்ட மருத்துவ நிபுணர் உ.மயூரதன் இறப்புக்கான காரணத்தைத் தெரிவித்தார். இளைஞனின் சடலம் நேற்று மாலையில் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இறுதிக் கிரியைகள் நாளை இடம்பெறவுள்ளது என்று உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் நேற்றிரவு வரையில் எவரும் கைதுசெய்யப்படவில்லை. விசாரணை தொடர்கிறது என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர். (உ-4,101)

## திடீர்...

கலைவாணி வீதி வடலியடைப்பைச் சேர்ந்த சுமன் அபிஷா என்ற குழந்தையே உயிரிழந்தது.

குழந்தைக்குக் கடந்த 21 ஆம் திகதி சனிக்கிழமை இரவு காய்ச்சல் ஏற்பட்டுள்ளது.

குழந்தையின் உடலை ஈரத் துணியால் துடைத்துள்ளனர் (ஒத்தடம்). மீண்டும் குழந்தைக்குக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் காலையில் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெறப்பட்டது.

அன்றிரவு குழந்தைக்குப் பாலூட்டிய பின்னர் குழந்தையைத் தாய் உறங்க வைத்தார்.

நேற்றுக் காலை பால் கொடுப்பதற்காகக் குழந்தையை எழுப்பியபோது குழந்தை உணர்ச்சியற்ற நிலையில் காணப்பட்டது. குழந்தையை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டோடினர். குழந்தை ஏற்கனவே இறந்து விட்டதாகப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது.

குழந்தைக்கு ஏற்பட்டது என்ன வகைக் காய்ச்சல் என்பது தெரியவரவில்லை. அதனாலேயே குழந்தையின் குருதி மாதிரி பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளது. போதனா வைத்தியசாலையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டார். குழந்தையின் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (உ-4,8,ரி1)

# அரசமைப்பைத் திருத்தலாம் அதற்கு நாங்கள் ஆதரவு

## மகிந்த அணியின் உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 24
புதிய அரசமைப்பு உருவாக்கப்படத் தேவையில்லை. தற்போதைய அரசமைப்பைத் திருத்தலாம். அதற்கு நாங்கள் ஆதரவளிப்போம். இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
வழிநடத்தல் குழுவால் தயாரிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையில் அரசியல் கட்சிகளினதும், சிவில் அமைப்புக்களினதும், பொது மக்களதும் கருத்துக்களே இருக்கின்றன. நாடாளுமன்றத்தில் அந்த அறிக்கையை விவாதிக்கும்போது ஒவ்வொரு கட்சிகளும் தமது நிலைப்பாட்டை ஆதரித்தே உரையாற்றுவார்கள். இடைக்கால அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்துவதில் பிரயோசனமில்லை.

இடைக்கால அறிக்கைக்குப் பின்னிணைப்பாக வழங்கப்பட்டுள்ள அறிக்கையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டுக்கும் மகிந்த அணியான எங்களின் நிலைப்பாட்டுக்கும் இடையில் பெரிய வேறுபாடு இல்லை. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் யோசனை தோற்கடிக்கப்படலாம்.

புதிய அரசமைப்புக் கொண்டுவருவது தவறான தீர்மானம். அரசமைப்பில் தேவைக்கு ஏற்ப திருத்தங்களைக் கொண்டு வரலாம். நிறைவேற்று அரச தலைவர் முறைமை நீக்கப்படத்தான் வேண்டும் - என்றார். (5,31)



# 42 மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கல்

சாவகச்சேரி ஒக். 24
கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலையில் கல்வி பயிலும் 42 மாணவர்களுக்கு அண்மையில் பாதணிகள் வழங்கப் பட்டன. சாவகச்சேரி வர்த்தகர் அமரர் கார்த்திகேசு சுப்பிரமணியம் அறக்கட்டளை நிதியத்தினர் இந்தப் பாதணி களை வழங்கினர். பாடசாலை மண்டபத்தில் வைத்து அறக் கட்டளையின் சார்பில் அன்னாரது மகனான சுப்பிரமணியம் ஜெயரூபன் மாணவர்களுக்குப் பாதணிகளை வழங்கினார் என பாடசாலை அதிபர் ஆ.தங்கவேலு தெரிவித்தார். (ரி2-9)

### பொருளாதார விவகார அமைச்சின் நிதியில்

# 15 வேலைத் திட்டங்கள் வலி. கிழக்கில் நிறைவு

யாழ்ப்பாணம், ஒக்.24
தேசிய கொள்கைகள் மற் றும் பொருளாதார விவகார அமைச்சால் ஒதுக்கீடு செய் யப்பட்ட நிதியில் யாழ்ப்பா ணம், வலி.கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் மேற் கொள்ளப்பட்ட உட்கட்ட மைப்புவேலைத்திட்டங்கள் நிறைவு பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.
15 வேலைத் திட்டங்கள் நிறைவு பெற்றுள்ளன. 1.5 மில்லியன் ரூபா நிதியில் வாதரவத்தை இளைஞர் கழக கட்டடம் அமைப்பு, புத் தூர் வடக்கு கிந்துப்பிட்டி இந்து மயான அபிவிருத்தி, புத்தூர் மேற்கு சோமஸ்கந் தன் விளையாட்டுக் கழக மைதான அபிவிருத்தி, புத் தூர் கிழக்கு அறிவொளி வீதிச் சீரமைப்பு, அச்சுவேலி வடக்கில் 10 விவசாயக் கிண றுகள் திருத்தம், அச்சுவேலி மேற்கு ஆதவன்மின் வீதிச் சீரமைப்பு, கோப்பாய் வடக்கு வரக்கம்பாரை வீதிச் சீரமைப்பு, அச்சுவேலி தெற்கு மீனாட்சி அம்மன் ஆலய சுற்றுமதில் சீர மைப்பு, அச்செழுவில் 10 விவசாயக் கிணறுகள் திருத் தம், உரும்பிராய் கிழக்கு சிவன் வீதி முதலாம் ஒழுங்கை சீரமைப்பு, இரு பாலை தெற்கு தெங்கு சிங் கராயர் வீதிச் சீரமைப்பு, பத்தமேனி விநாயகர் வீதிச் சீரமைப்பு ஆகிய வேலைத் திட்டங்களே மேற்கொள் ளப்பட்டன என்று தெரிவிக் கப்பட்டது.
தலா ஒரு மில்லியன் ரூபா செலவில் புத்தூர் மேற்கு மாளிகை வீதிச் சீரமைப்பு, நீர்வேலி மேற்கில் 10 விவ சாயக் கிணறுகள் திருத்தம் ஆகிய வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன என்றும் தெரிவிக் கப்பட்டது. (ற-ரி)

### டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்த

# காணிகளிலுள்ள பற்றைகளை உடன் துப்புரவாக்க அறிவுறுத்து

தென்மராட்சி, ஒக்.24
பற்றைக்காடாகக் காணப்படும் இடங்களில் நீர் ஏந்தக் கூடிய பாத்திரங்களை இனந்தெரி யாதவர்கள் வீசிச் செல்கின்றனர். அவற்றால் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய ஏது நிலை உருவாகின்றது. அவற்றைத் துப்புரவு செய்து டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்த மக்கள் முன்வர வேண்டும்.
இவ்வாறு சாவகச்சேரிச் சுகாதாரப் பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
அவர்கள் தெரிவித்ததாவது:
கடந்த மாதம் டெங்குத் தொற்றுக்குள்ளான வர்களின் எண்ணிக்கை 26ஆகக் காணப் பட்டது. இந்த மாதம் 18ஆம் திகதிவரையில் டெங்குத் தொற்றுக்குள்ளானவர்களின் எண் ணிக்கை 42ஆக அதிகரித்துள்ளது. அது தொடர்பாக ஆய்வு செய்தபோது தொற்றுக் குள்ளானவர்கள் உள்ள பகுதியில் காணப்ப டும் பற்றைக் காடுகளில் நுளம்பு அதிகம் உற்பத்தியாவது கண்டறியப்பட்டது.
பிரதேசத்தில் காணப்படும் பற்றைக்காடு களை மக்கள் உடனடியாகத் துப்புரவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறும் பட் சத்தில் காணி உரிமையாளர் அல்லது அதைப் பராமரிப்பவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். என்றனர். (ற-9)



தென்மராட்சி கல்வி வலய மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியால யத்தின் 2017ஆம் ஆண்டுக்கான மாணவர் நாடாளுமன்ற அமர்வு அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.
வித்தியாலய அதிபரும் மாணவர் நாடாளுமன்றச் செயலாளர் நாய கமுமான க.உதயகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அமைச்சர்கள் பதவியேற்பும் கன்னி அமர்வும் இடம்பெற்றது. (21-9)

### நீதிமன்றில் மோட்டார் சைக்கிள்களை அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்க

யாழ்ப்பாணம் ஒக் 24
யாழ்ப்பாண பருத்தித் துறை நீதிமன்றில் பொலிஸாரினால் பாரப்படுத்தப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள் களை அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள் ளுமாறு பதிவாளர் அறி வித்துள்ளார். NP MB 2986, NP HC 3555, NP WJ 8052, NP GQ 2314, NP GP 4473, No Numbered TVS, 5001272, NP WL 1446, NP UP 8175, NP XY 2181, 1058593, NP JS 8269, No Numbered HERO HONDA, NP WS 1171, BBV 4958 ஆகிய இலக் கமுடைய மோட்டார் சைக்கிள்களே நீதிமன் றில் பாரப்படுத்தப்பட் டுள்ளன. உரிமையா ளர்கள் அதற்குரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து பருத்தித் துறை நீதிமன்றத்தில் பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறு தவறின் 2 மாதங்களுக்குப் பின் அவை அரசுடைமை ஆக்கப்படும் என, பதி வாளர் மேலும் தெரி வித்துள்ளார். (21)

# குட முழுக்கு

யாழ்ப்பாணம், ஒக்.24
யாழ்ப்பாணம், கட்டுவன் மேற்கு அருள்மிகு தெல்லிப்பழை நாச்சிமார் அம்பாள் தேவஸ்த்தான குட முழுக்கு எதிர்வரும் 1ஆம் திகதி இடம் பெறவுள்ளது என அறிவிக்கப்பட்டது.
குடமுழுக்கை முன்னிட்டு நாளை மறுதினம் பின்னிரவு முதல் கிரியைகள் ஆரம்பமும், 31ஆம் திகதி பக்தர்கள் பக்திப்பூர்வமான எண்ணைக்காப்புச் சார்த்தும் நிகழ்வும் இடம் பெற வுள்ளது. 1ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிமுதல் 9.30 மணி வரை குடமுழுக்கு இடம் பெற வுள்ளது. (21)

### கிராம, மகளிர் அபிவிருத்தி சங்கங்கள்

# சேமிப்பு கணக்கையே பயன்படுத்த வேண்டும்


### பிரதேச செயலர்கள் ஊடாக அறிவுறுத்து

அச்சுவேலி, ஒக்.24
கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தலா ஒரு வங்கிக் கணக் கையே பேண வேண்டும். அது சேமிப்புக் கணக் காக இருக்க வேண்டும்.
நடைமுறைக் கணக்குகள் அனைத்தும் உடனடி யாக மூடப்பட வேண்டும் என பிரதேச செயலர்கள் ஊடாக கிராம மற்றும் மகளிர் அபிவிருத்திச் சங்கங் களுக்கு கடிதம் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.
கிராம மற்றும் மகளிர் அபிவிருத்திச் சங்கங்களின் கணக்குகள் வருடாந்தம் கணக்குப் பரிசோதகர் கள் மூலம் எண்பார்வை செய்யப்படுகின்றன.
அனைத்துச் சங்கங்களும் ஒரே மாதிரியான நடை முறையில் கணக்குப் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக 9 வகையான கணக்குப் பதிவேடுகள் கிராம அபிவிருத்தித் திணைக்களத் தால் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.
எண்பார்வையின்போது ஒரு சங்கத்துக்கு ஒன் றுக்கு மேற்பட்ட வங்கிக் கணக்குகள் இருப்பதும், நடைமுறைக் கணக்குள், சேமிப்புக் கணக்குகள் இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. அதனால் ஏற் படும் வழுக்களைக் கருத்தில் கொண்டு ஒரு சேமிப் புக் கணக்கை மட்டுமே பயன்படுத்த அறிவுத்தப் பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-11)

### ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தல் நிகழ்வு

சாவகச்சேரி ஒக்.24
சாவகச்சேரி நகர் புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையச் சிறார்களின் ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தல் நிகழ்வு நாளை புதன்கிழமை மு.ப.10 மணிக்கு நிலைய மண்டபத்தில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது.
நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெறும் நிகழ் வுக்கு முதன்மை விருந்தினராகத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் கலந்து கொள்வார் என மேலும் அறிவிக்கப் பட்டுள்ளது. (21-9)

# கிராம செயலகத்துக்கு புதிய கட்டடம் அமைப்பு



தென்மராட்சி, ஒக்.24
தென்மராட்சி, அல்லாரைக் கிராம அலுவலர் பிரிவில் கிராம செயலகத்துக்கான புதிய கட்டட கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கிராம அலுவலர், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர், பொருளாதார அபிவிருத்தி அலுவலர், குடும்ப நல சேவையாளர் ஆகியோருக்கு தனித்தனி அலுவலகங்களை ஒரே கட்டடத்தில் அமைக் கும் வகையில் கிராமச் செயலகம் அமைக்கப்ப டுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

## விபத்தில் ஒருவர் காயம்

சாவகச்சேரி ஒக். 24
மோட்டார் சைக்கிளில் கட்டிச் செல்லப்பட்ட 'ஆலங்குழைக் கட்டு' வீதியில் நடந்து சென்றவரை இடித்ததால் வீழ்ந்த குடும்பத்தலைவர் காயமடைந்தார். அவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் கைதடி நுணாவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் சிதம்பரப்பிள்ளை வீரசிங்கம் (வயது- 53) என்பவரே காயமடைந்தவராவார்.
கடையில் பொருள்கள் வாங்கிக் கொண்டு வீதியோரமாக நடந்து சென்ற வீரசிங்கத்தை மோட்டார் சைக்கிளில் கட்டியிருந்த குழைக் கட்டு மோதியது. இதனையறியாத மோட்டார் சைக்கிளோட்டி அங்கிருந்து சென்றுவிட்டார். அவ்வழியே சென்றவர்கள் காயமடைந்த நிலையில் காணப்பட்ட அவரை மருத்துவமனையில் சேர்த்தனர் என காயமடைந்த வீரசிங்கம் தெரிவித்தார். (9)

# விதை நெல்லுக்கு பெரும்தட்டுப்பாடு

## யாழ். மாவட்ட விவசாயிகள் கவலை

அச்சுவேலி, ஒக்.24
யாழ்ப்பாண மாவட்டத்தில் விதை நெல்லுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தற்போது நெல் விதைப்பு நடைபெறும் நிலையில் என்ன விலை கொடுத்தும் விதை நெல்லைப் பெற முடியாதுள்ளது.
இவ்வாறு நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.
மழையை நம்பி மானாவாரியாக மேற்கொள்ளும் நெற்செய்கைக்கான விதைப்பு தற்போது ஆரம்பித்துள்ளது.
யாழ்ப்பாண மாவட்ட விதை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தால் இந்த ஆண்டு சுத்திகரிக்கப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்ட 3 ஆயிரத்து 500 புசல் விதை நெல் நியாய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. பி.ஜி. 406, ஏ. ரி.362 ஆகிய நெல்லினங்களே வழங்கப்பட்டன. ஹேலீஸ் நிறுவனமும் அங்கீகரிக்கப்பட்ட விதை நெல்லினங்களை விவசாயிகளுக்கு வழங்கியது.
கடந்த ஆண்டு செய்கை செய்யப்படாதிருந்த வயல்கள் இம்முறை செய்கை பண்ணப்படுகின்றன. அதனால் விதை நெல்லுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. விவசாயிகள் மரபு வழியாகத் தமக்கான விதை நெல்லைத் தயார் செய்ய முடியாமல் போனமையும் விதை நெல் தட்டுப்பாட்டுக்குக் காரணம் என்றும் கூறப்படுகின்றது.
தனியார், விதை நெல் ஒரு புசல் 2 ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்பனை செய்கின்றனர். இருந்த போதும் தேவையான அளவு அவற்றைப் பெற முடிய வில்லை என்று விவசாயிகள் தெரிவித்தனர். (ற-11)



பன்னாட்டு கை கழுவுதல் தினத்தை முன்னிட்டு "வேள்ட்விஷன்" நிறுவனத்தின் ஏற்பாட்டில் சுகாதாரம் சார்ந்த தெருவெளி ஆற்றுகை நிகழ்வு நேற்று முன்தினம் வலிமேற்கில் உள்ள மூன்று பிரதேசங்களில் நடைபெற்றன. புத்தாக்க அரங்க இயக்கத்தின் தயாரிப்பில் எஸ்.ரி.குமரன், எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோரின் எழுத்துருவாக்கம் மற்றும் நெறியாள்கையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வலிமேற்கு பிரதேச செயலாளர் , கிராம அலுவலர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் , மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (21-ரி)

### நல்லூர் ஆலயச் சூழலின்

## பருத்தித்துறை-யாழ்ப்பாணம் வீதி இன்றும் நாளையும் மூடப்படும்

### மாற்றுப் பாதை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், ஒக். 24
பருத்தித்துறை நல்லூர் ஊடாக யாழ்ப்பாணம் செல்லும் முதன்மைச் சாலை நல்லூர் ஆலயச் சூழல் வீதி இன்றும் நாளையும் மூடப்படும் என யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் பொ. வாகீசன் தெரிவித்துள்ளார்.
நல்லூர், கந்தசுவாமி கோவிலில் இடம்பெறும் கந்தசஷ்டி திருவிழா காரணமாகவே வீதி தடை செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.
கந்தசஷ்டி விரத நாளின் இறுதி இருநாள்களும் நல்லூரில் நடைபெறவுள்ள சுவாமி வீதி உலா மற்றும் சூரசங்கார நிகழ்வுகளை முன்னிட்டு ஆலயச் சூழலினூடாக வாகனப் போக்கு வரத்து தடை செய்யப்பட்டுள்ளது. இன்று பி.ப 2 மணி தொடக்கம் 6 மணி வரையும், நாளை மதியம் 12 மணி தொடக்கம் இரவு 7 மணி வரையும் இது நடைமுறையில் இருக்கும். பருத்தித்துறை யாழ்ப்பாணம் வீதியால் பயணிக்கும் வாகனங்கள் மாற்றுப் பாதையைப் பயன்படுத்துமாறும் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (21)

# சுன்னாகம் விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒக். 24
விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பயனளிக்காது சில மணிநேரங்களிலேயே உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
சுன்னாகம் கந்தரோடையில் நேற்றுமுன்தினம் மோட்டார் சைக்கிளும் தனியார் பேருந்தும் மோதியதில் விபத்து இடம்பெற்றது. ஹற்றன் பகுதியைச் சேர்ந்த ராஜமாணிக்கம் பிரபாகரன் (வயது-35) என்பவரே உயிரிழந்துள்ளார்.
விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் படுகாயமடைந்தனர். மேலதிக சிகிச்சைக்காக இருவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். வைத்தியசாலையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேமகுமார் விசாரணை நடத்தி சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தார். (4-8-ரி1)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 90 | 60 | 90 | 80 | 60 |
| கத்தரி | 120 | 140 | 80 | 120 | 1260 |
| மரவள்ளி | 80 | 50 | 50 | 60 | 50 |
| பயிற்றை | 160 | 150 | 160 | 120 | 140 |
| பாகல் | 300 | 300 | 280 | 300 | 100 |
| க.கிழங்கு | 80 | 80 | 60 | 100 | 80 |
| பெ.வெங்காயம் | 120 | 140 | 140 | 150 | 100 |
| சி.வெங்காயம் | 250 | 250 | 260 | 260 | 220 |
| பூசணி | 50 | 60 | 50 | 50 | 40 |
| தக்காளி | 200 | 200 | 180 | 180 | 180 |
| வாழைக்காய் | 80 | 80 | 90 | 80 | 60 |
| கீரை | 30 | 40 | 30 | 15 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 | 30 | 30 |
| ப.மிளகாய் | 350 | 500 | 380 | 500 | 450 |
| புடோல் | 80 | 100 | 100 | 120 | 80 |
| கோவா | 120 | 120 | 120 | 140 | 140 |
| வெண்டி | 80 | 100 | 100 | 120 | 120 |
| போஞ்சி | 120 | 200 | 180 | 180 | 100 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 200 | 200 |
| தேங்காய் | 75 | 90 | 80 | 100 | 70 |
| உ.கிழங்கு | 100 | 110 | 110 | 110 | 120 |
| தேசிக்காய் | 300 | 300 | 300 | 150 | 240 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 15 | 15 |
| கறிமிளகாய் | 300 | 150 | 280 | 200 | 280 |
| கரட் | 100 | 160 | 90 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 350 | 400 | 400 | 120 | 360 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 1000 | 800 |
| நண்டு | 400 | 400 | 500 | 300 |
| கணவாய் | 800 | 600 | 800 | 300 |
| பாரை | 600 | 500 | 500 | 500 |
| சுறா | 600 | 700 | 700 | 900 |
| சீலா | 400 | 400 | 400 | 400 |
| விளை | 600 | 400 | 400 | 300 |
| முரல் | 350 | 350 | 300 | 300 |
| கும்பிளா | 350 | 300 | 400 | 400 |
| கிளாக்கன் | 800 | — | 400 | — |
| ஒரா | 350 | 300 | 500 | 300 |
| திரளி | 250 | 200 | 200 | 200 |
| நகரை | 250 | 150 | 400 | 150 |
| சூடை | 150 | 100 | 160 | 50 |
| ஒட்டி | 200 | 200 | 300 | 200 |
| திருக்கை | 350 | 200 | 400 | 200 |
| மதனம் | 250 | 150 | 250 | 300 |
| கொய் | 150 | 70 | 50 | 50 |
| பாலை | 150 | 200 | 400 | 300 |
| வாளை | 150 | 200 | 300 | 200 |



சுன்னாகம், கந்தரோடை ,ஸ்கந்தாவுக்கு 75 ஆயிரம் ரூபா பெறுமதியான பிளாஸ்ரிக் கதிரைகளை வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் வழங்கினார். 2017ஆம் ஆண்டுக்கான வடக்கு மாகாணசபையின் தனது நிதி ஒதுக்கீட்டின் மூலமே அவர் அந்தக் கதிரைகளை வழங்கினார். கடந்த வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் நிகழ்வு இடம்பெற்றது. பாடசாலை அதிபர் செல்வஸ்தான் நிகழ்வுக்குத் தலைமை வகித்தார். , (21)




பெண்களுக்கான புதிய காலணிகள் சந்தையில் அறிமுகமாகியுள்ளன. இவை ஆயிரத்து 400 முதல் ஆயிரத்து 00 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.

## வடக்கு ஆளுநரின் சுயேச்சை நிதியத்தின் நிதி கூ. கி. வங்கிகளின் ஊடாகப் பயனாளிகளுக்கு

யாழ்ப்பாணம்.ஒக் 24

வடக்கு மாகாண ஆளுநர் சுயேச்சை நிதியத்திலிருந்து கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்துக்கு விடுவிக்கப்பட்ட நிதி, கூட்டுறவு கிராமிய வங்கிகளின் ஊடாகப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது என கூட்டுறவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்தத்திணைக்களம்மேலும் தெரிவித்ததாவது: கடந்த காலங்களில் ஆளுநர் நிதியத்தின் ஊடாக அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளுவதற்கு.144 மில்லியன் வரையில் கூட்டுறவு திணைக்களம் உட்பட பல்வேறு திணைக்களங்களில் நிதி பெறப்பட்டது. இவ்வாறு பெறப்பட்ட நிதி முறைமை தவறானது என்று பல்வேறு தரப்பினராலும் கடந்த காலங்களில் சுட்டிக்காட்டப்பட்டது.இதனைக் கருத்தில் கொண்டு மக்களின் நன்மை கருதி கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்திடம் இருந்து பெறப்பட்ட நிதியை ஈடுசெய்வதற்கு ஆளுநர் செயலக பொது வைப்புக் கணக்கு, மற்றும் ஆளுநர் சுயேச்சை நிதியத்திலிருந்து 32 மில்லியன் ரூபா நிதி அண்மையில் விடுவிக்கப்பட்டது. இந்த நிதியை, மாகாணக் கூட்டுறவு திணைக்களத்தால் , சிபாரிசு செய்யப்பட்ட 21 கூட்டுறவு சங்கங்களின் கிராமிய வங்கிகள் மூலம் மக்கள் பயன்படும் வகையில் பயன்படுத்த வடக்கு மாகாணசபையின் 54 ஆவது அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது. அத்துடன் இதற்குரிய பயனாளிகள் தெரிவுசெய்யப்படும் போது கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களாகவும், போரினால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களாகவும் இருக்க வேண்டும் என்றும் அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் 54 கூட்டுறவு கிராமிய வங்கிகள் உள்ளன. இவற்றில் வாழ்வாதார ரீதியாகப் பெரிதும் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு , வவுனியா.மன்னார் ஆகியமாவட்டங்களில் உள்ள கூட்டுறவு கிராமிய வங்கிகளின் ஊடாக இந்தக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்வதற்கு, தொழில் முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளவர்களுக்கு, வருடத்துக்கு நான்கு வீத வட்டியுடன் 50 ஆயிரம் ரூபா வீதம் இந்தக் கடன் தொகைகள் வழங்கப்பட்டுவருகின்றன என்றது. (21-ரி)

## கணவனை இழந்த பெண்போல குறைகூறுகிறார் மஸ்தான் எம்.பி

### இர்ஷாக் ரகுமார் எம்.பி கிண்டல்

வவுனியா, ஒக்.24

நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தான், கணவனை இழந்த பெண்களைப் போன்று எதற்கும் குறை கூறிக்கொண்டிருக்கின்றார். இவ்வாறு கணவனை இழந்த பெண்களே எதற்கும் குறை கூறுவார் கள். என அனுராதபுரத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் இர்ஷாக் ரகுமார் தெரிவித்தார்.

வவுனியாவில் ஊடகக் கற்கை நெறியினை முழுமைப்படுத்திய மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்குதல் மற்றும் சமூக சேவையாளர்களைக் கௌரவித்தல் நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியாயில் இடம்பெற்ற போது அதில்விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னதாக நிகழ்வில் உரையாற்றிய வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கே.மஸ்தான்;

"ஊடக நிறுவனங்களாயினும் ஊடகக் கற்கை நிறுவனங்களாக இருந்தாலும் அரசியல் கலப்பின்றி இருத்தல் வேண்டும். இந்த நிகழ்வுக்குக் கூட வவுனியாவில் இருந்து தமிழ் தேசியக்கூட்டமைப்பு மற்றும் ஏனைய கட்சி அரசியல்வாதிகளை அழைத்துள்ளபோதிலும் வேறு மாவட்டங்களில் இருந்து வேறுவேறு கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதிகள் அழைக்கப்படவில்லை, இவ்வாறான செயலால் உங்களது ஊடக நிறுவனம் அரசியல் சார்ந்து பார்க்கப்பட்டுவிடும்.

எனவே அரசியலாளர்களை அழைக்கும் போது அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்தவர்களையும் அழைத்து நிகழ்வுகளை நடத்துங்கள். அது சிறப்பாக இருக்கும்" என்றார். இதனையடுத்து உரையாற்றிய அனுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இர்ஷாக் ரகுமான் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தான், கணவனை இழந்த பெண்களைப் போன்று எதற்கும் குறை கூறிக்கொண்டிருக்கின்றார். இவ்வாறு கணவனை இழந்த பெண்களே எதற்கும் குறை கூறுவார் கள். மஸ்தான், ரிசாட் பதியுதீன் போன்று அமைச்சராக வருவதற்கு முயற்சிக்கின்றார். அவருக்கு இறைவன் நாட்டம் செலுத்தினால் இது கிடைக்கும். எனினும் அவருக்கு அரசியல் முதிர்ச்சி இன்மையே இவ்வாறு குறை கூறுவதற்குக் காரணமாக உள்ளது.

நானும் வர்த்தக துறையில் இருந்து அரசியலுக்கு வந்தவனே. எனினும் எனக்கு இரண்டு வருடத்தில் அரசியல் தெளிவு கிடைத்துள்ளது. மஸ்தானுக்கு அது கிடைக்கவில்லை. அவரும் அரசியல் முதிர்ச்சியை அடைந்த பின்னர் கணவனை இழந்த பெண்கள் குறை கூறுவதைப்போன்று குறை கூறமாட்டார் என்றார். (21-402)

# மற்றைய இனத்தை எப்படி வீழ்த்துவது? இதுதான் எல்லா இனத்தினதும் சிந்தனை

## இவ்வாறு அமைச்சர் ரிசாத் கருத்து



மன்னார், ஒக்.24

தமிழர்களும் முஸ்லிம்களும் சிங்களவர்களும் தமக்குள் ஒருவரோடொருவர் முட்டி மோதிக்கொண்டு அடுத்த இனத்தை எவ்வாறு வீழ்த்த முடியும்?, அடுத்த சமூகத்தின் முன்னேற்றத்தை எவ்வாறு நசுக்க முடியும்? என்ற சிந்தனையில் செயற்பட்டுக் கொண்டிருப்பது துரதிஷ்டமான, துர்ப்பாக்கியமான நிலையாகும். தற்போதும் சில அரசியல்வாதிகள் மக்கள் மத்தியில் ஒன்றையும் நாடாளுமன்றில் வேறொன்றையும் வெளிநாட்டு ராஜதந்திரிகளிடம் மற்றொன்றையும் பேசி வருகின்றனர்.

இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

வவுனியாவில் ஊடகக் கற்கை நெறியினை முழுமைப்படுத்திய மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்குதல் மற்றும் சமூக சேவையாளர்களைக் கௌரவித்தல் நிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற்ற போது அதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர்களும் முஸ்லிம்களும் சிங்களவர்களும் தமக்குள் ஒருவரோடொருவர் முட்டி மோதிக்கொண்டு அடுத்த இனத்தை எவ்வாறு வீழ்த்த முடியும்?, அடுத்த சமூகத்தின் முன்னேற்றத்தை எவ்வாறு நசுக்க முடியும்? என்ற சிந்தனையில் செயற்பட்டுக் கொண்டிருப்பது துரதிஷ்டமான, துர்ப்பாக்கியமான நிலையாகும். பெரும்பான்மையின அரசியல் தலைமைகள் விட்ட தவறுகளும் அவர்களின் செயற்பாடுகளுமே இந்த நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சீரழிவுகளுக்கும் பிரச்சினைகளுக்கும் முக்கிய காரணம். பெரும்பான்மையினத் தலைவர்கள் சொந்த அரசியல் இலாபம் மற்றும் ஆணவச்செருக்கு ஆகியவற்றின் காரணமாக சிறுபான்மை மக்கள் மீது தேவையற்ற ஆதிக்கம் செலுத்தினர். மொழிக் கொள்கை, தரப்படுத்தல் போன்ற பாரபட்ச நடைமுறைகளை அவர்கள் கொண்டு வந்ததனாலேயே தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்த நிர்ப்பந்திக்கப்பட்டனர். புலிகளின் தலைவர் பிரபாகரன் தனித் தமிழீழம் கோரி பாரிய எழுச்சிப் போராட்டத்தை நடத்தும் அளவுக்கு நிலைமை மாறி இருந்தது. அதன் பின்னர் முஸ்லிம்களுக்கென தனிக்கட்சி அமைத்து மர்ஹிம் அஷ்ரப் தமது சமூக உரிமையைக் காக்கப் போராடினார். இவைகள் கடந்த கால வரலாறு. பொருளாதார எழுச்சியை நோக்கி வீறு நடை போட்ட இந்த நாட்டை, அரசியல் தலைவர்களின் பிழையான நடவடிக்கைகளே குட்டிச்சுவராக மாற்றியது. ஆனால் மேற்குலக நாடுகள் முன்னேறிச் செல்வதற்கான திட்டங்களை வகுத்துச் செயற்பட்டு வருகின்றன. அரசியல்வாதிகள் தமது சுயநலம், சொந்த அரசியல் ஆதாயம், அரசியல் இருப்பு ஆகியவற்றைத் தக்க வைத்துக் கொள்வதற்காக இவர்கள் இவ்வாறு செயற்படுவது வேதனையானது. அரசியல்வாதிகளும் சிந்தனையாளர் களும் உள்ளத்தால் பேச வேண்டும். எம்மைப் பொறுத்த வரையில் நாம் உள்ளத்தால் பேசுவதனால்தான் எதிரிகளாகவும், குற்றவாளிகளாகவும் பிறரால் பார்க்கப்படுகின்றோம். இனங்களுக்கிடையேயும் மதங்களுக்கிடையேயும் ஏற்பட்ட பிரச்சினைகளும் சந்தேகங்களுமே இன்று நமது நாடு அகதிகளைச் சுமக்கும் நாடாக, அகதிகளை உருவாக்கும் நாடாக, அகதிகளை ஏற்றுமதி செய்யும் நாடாக, துன்ப துயரங்களைச் சுமந்து வேதனையில் தத்தளிக்கும் நாடாக மாறியமைக்கு முதன்மைக் காரணம். இதனால்தான் காணாமல் போனோரின் உறவினர்கள் வீதிகளில் காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடிக் கண்ணீருடன் அலைந்து திரியும் காட்சியும், சிறைக்கைதி களை விடுவிக்குமாறு நடக்கும் ஜனநாயகப் போராட்டங்களும் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இவ்வாறானவற்றுக்கு நாங்கள் முடிவு கட்ட வேண்டாமா? இந்த நாட்டில் அனைத்து இனங்களும் நிம்மதியாக வாழ வேண்டாமா? நமது நாட்டிலே சமாதானமும் நல்லுறவும் தழைக்க ஊடகவியலாளர்களின் பங்கே காத்திரமாக அமைகின்றது என்றார். (21-56)

## வட்டக்கச்சி மருத்துவமனைக்கு புதிய கட்டடம்; பொருத்தமற்ற இடத்தில், பொருத்தமற்ற திட்டம்

### மாகாண அரசு அதிக நிதி செலவு பிரதேச மக்கள் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, ஒக்.24

ஒரு மருத்துவர் கூடக் கடமையில் இல்லாத வட்டக்கச்சி மருத்துவமனைக்கு 100 அடி நீளத்தில் மேலும் ஒரு புதிய கட்டடம் கட்டப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது, மாகாண அரசு பொருத்தமற்ற இடத்தில் பொருத்தமற்ற திட்டத்துக்கு அதிக செலவு செய்துள்ளது என அந்தப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பில் அந்த மக்கள் தெரிவித்ததாவது: கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் ஒரு புதிய மருத்துவமனை அமைக்கத் திட்டமிடப்பட்டது. இதன் போதே வட்டக்கச்சிச் சந்தையை அண்டிய பகுதியிலேயே அதிக மக்கள் வாழ்கின்றனர் அங்கேயே புதிய கட்டடத்தினை அமையுங்கள் எனக் கூறப்பட்டது. எனினும் அது கவனத்தில் எடுக்கப்படவில்லை. அங்கிருந்து 2 கிலோ மீற்றர் தொலைவில் வைத்தியசாலை அமைக்கப்பட்டது. அந்த இடத்தில் சில நூறு குடும்பங்களே தற்போது உள்ளனர். ஆனால் வட்டக்கச்சி சந்தையை அண்டி பல ஆயிரம் குடும்பங்கள் வாழ்கின்றனர். சந்தையை அண்டி வாழும் அத்தனை மக்களும் வட்டக்கச்சி வைத்தியசாலைக்கு வருவதானால் 2 மைல் தூரம் பேரூந்திலேயே பயணம் செய்ய வேண்டும். அவ்வாறு பயணம் செய்து அங்கு மருத்துவர் இல்லை என்றால் அது பெரும் சிரமமாகவே இருக்கும். அதனாலேயே அதிக மக்கள் வாழும் சந்தையை அண்டிய பகுதியில் மருத்துவமனையை அமையுங்கள் என்று கூறப்பட்டது. ஒரு மருத்துவர் கூட கடமையில் இல்லாத அந்த மருத்துவமனைக்கு மேலும் புதிய கட்டம் தற்போது 100 அடி நீளத்தில் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. அந்தக் கட்டடத்தில் இயங்கும் வைத்தியசாலைக்கு இன்றுவரை ஒரு நிரந்தர மருத்துவர் கிடையாது. மருத்துவர் இருந்தாலும் நோயாளர்கள் இந்த வைத்தியசாலையை நாடுவதும் கிடையாது. மருத்துவர் உள்ளாரா? இல்லையா என்று தெரியாத நிலையில் பேரூந்தில் ஏறுபவர்கள் நேராக கிளிநொச்சிக்கே பயணிக்கின்றனர். இவ்வாறு ஒரு பொருத்தமற்ற ஓர் இடத்தில் பொருத்தமற்ற திட்டத்துக்காகப் பெருந்தொகைப் பணம் செலவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு செலவு செய்யப்பட்டு அமைக்கப்பட்ட கட்டடத்தில் இயங்கும் வைத்தியசாலைக்கு மருத்துவர்களை நியமித்தாலே அதன் திட்டம் வெற்றிகரமானதாக அமையும். உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்

"வடக்கு மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டில் 25 மில்லியன் ரூபா செலவில் குறித்த மருத்துவமனை கட்டி முடிக்கப்பட்டது. இருப்பினும் அந்த இடம் பொருத்தமற்றது எனத் தெரிவித்த விடயம் எனக்குத் தெரியாது. அவ்வாறானால் ஆராய்ந்து பார்க்க வேண்டும். வட்டக்கச்சி மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவர்கள் எவரும் இல்லை என்பது உண்மையான விடயம். இருப்பினும் ஓய்வு பெற்ற ஆர்.எம்.பி ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் அங்கு நியமிக்கப்பட்டுள்ளார் என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் குணசீலன் தெரிவித்தார். (21-101)

## 1 கிலோ கேரளக் கஞ்சா ஆனையிறவில் மீட்பு

### இருவர் விளக்க மறியலில்

கிளிநொச்சி, ஒக். 24

கிளிநொச்சி, ஆனையிறவு தட்டுவன்கொட்டிப் பகுதியில் நேற்று முன்தினம் ஒரு கிலோ கஞ்சா மீட்கப்பட்டது, கஞ்சா வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பிரதிப் பொலிஸ்மா அதிபரின் உடனடி விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி ஜசிந்தன் தெரிவித்தார்.

தட்டுவன்கொட்டிப் பகுதியில் உள்ள பேருந்து தரிப்பு நிலையத்தில் கஞ்சா மீட்கப்பட்டது. ஒருவரிடம் 450 கிராம் கஞ்சாவும், மற்றைய நபரிடம் 600 கிராம் கஞ்சாவும் மீட்கப்பட்டன. கைது செய்யப்பட்ட நபர்கள் மேலதிக விசாரணைக்காகவும் நீதிமன்ற நடவடிக்கைக்காகவும் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் முற்படுத்தியபோது அவர்களை எதிர்வரும் 2ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க கிளிநொச்சி நீதிவான் மன்று உத்தரவிட்டுள்ளது என பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார். (21-6)

### சிங்கள தேசம் எமது சமாதான கரங்களை எட்டி உதைத்தால்

# தமிழர்கள் தனியாக நிற்கும் சூழல் மீண்டும் உருவாகும்

## சிவமோகன் எம்.பி. எச்சரிக்கை

முல்லைத்தீவு, ஒக்.24
சிங்கள தேசம் எமது சமாதானக் கரங்களை எட்டி உதைக்குமேயானால் நிச்சயமாக நாம் மீண்டெழுந்து மீண்டும் தனியாக நிற்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும் என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு சிலாவத்தை இளம்பறவை விளையாட்டுக் கழகம் நடத்திய மின்னொளியிலான கால்பந்தாட்டத் தொடர் அண்மையில் குறிந்த கழக மைதானத்தில் இடம்பெற்றது. அதில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முள்ளிவாய்க்கால் பேரவலத்திலிருந்து மீண்டெழுவோமா? என்று நாமே சந்தேகப்பட்ட காலம் இருந்தது. ஆனால் இன்றோ, எமது இனம் அதிலிருந்து மீண்டு சமாதானமான சூழலில் வாழ்வதற்குரிய அரசமைப்பு தயார் செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறது. அதிலே எமக்குத் தேவையான காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள், எமக்கான வடக்கு கிழக்கு இணைந்த பூர்வீக பிரதேசம் இவை அனைத்தையும் ஒன்றிணைத்த தீர்வு எமக்குத் தீர்வாகக் கிடைக்குமா? இல்லையா? என்ற ஓர் இக்கட்டான நிலையில் இன்று நாம் உள்ளோம். நாம் எதிர்பார்த்துக் காத்திருக்கும் அவை கிடைக்காது போனால் நிச்சயமாக நாம் மீண்டெழுந்து தனியாக நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்பது நிதர்சனம்.



எந்தவொரு இனமும் தன்னைத் தக்கவைத்துக்கொள்வதற்காக எதிர்த்து நிற்கும். அதேபோல் உரிமைகோரி எதிர்த்து நின்ற எமது இனமும் அடக்கப்பட்டது.

அந்த அடக்குமுறைக்கு எதிராகப் போரைப் புரிந்து எமது மாவீரர்கள் தங்களது இன்னுயிர்களை ஈர்ந்தனர்.

இன்று அவர்கள், தமிழர்களை விடுதலையை வேண்டி நிற்கும் ஓர் இனமாக உலகத்துக்கு அடையாளம் காட்டியுள்ளனர். எனவே அவர்களின் இழப்புகள் ஒருநாளும் வீண்போகாது எனத் திண்ணமாக நம்புகிறேன்- என்றார். (21)



# “ஏக்கிய ராஜிய” என்னும் பதம் சந்தேகத்தையே ஏற்படுத்துகின்றது

## கிளிநொச்சி விவசாயிகள் கருத்து

கிளிநொச்சி, ஒக்.24
“இலங்கையில் வரவிருக்கும் புதிய அரசமைப்புக்கான திட்ட வரை வாகக் கொள்ளப்படும் தற்போது வெளியிடப்பட்டுள்ள இடைக்கால அறிக்கையானது இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களது சுயாட்சியை ஏற்றுக்கொண்டதாக அமையவில்லை. அவ் அறிக்கையில் முன்னுக்குப்பின் முரணான உறுப்புரைகள் காணப்படுகின்றன.

இதில் காணப்படும் ஏக்கிய ராஜிய என்னும் பதம் சந்தேகத்தையே ஏற்படுத்துகின்றது” என கிளிநொச்சி விவசாயி கள் தெரிவித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் ஏற்பாட்டில் இலங்கையின் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக வெளிவந்துள்ள இடைக்கால அறிக்கை தொடர்பில் மக்கள் கருத்தறியும் செயற்பாடுகள் கிளிசொச்சியில் இடம்பெற்று வருகின்றன. நேற்று முன்தினம் காலை 9மணிக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்டக் காரியாலயமான அறிவகத்தில் கிளிநொச்சியைச் சேர்ந்த விவசாயிகளைச் சந்தித்து, அவர்களுடன் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. இதன் போதே அந்த விவசாயிகள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் சிங்கள பௌத்த மேலாதிக்கவாதம் மேலோங்கி ஏனைய இனத்தவர்களை அடிமைப்படுத்தியமையே கடந்த 70 ஆண்டுகளாகத் தொடர்ந்து வரும் இனப்பிரச்சினைக்கு முதன்மைக் காரணமாகக் காணப்படுகின்றது என்பதே வெளிப்படை. இந்த நிலையில் புதிய அரசியலமைப்புக்கான இடைக்கால அறிக்கையிலும் பௌத்தத்திற்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. இதன் விளைவுகள் சிறுபான்மை இனத்தவர்களுக்கு காலப்போக்கில் பெரும் ஆபத்தையே தோற்றுவிக்கும்.

இலங்கையின் வடக்குக் கிழக்கு இணைந்த தமிழர் தாயகம் என்பதை அங்கீகரித்து தமிழ் மக்களும் நின்மதியாக வாழக்கூடிய வகையில், அதிகாரங்கள் முழுமையாகப் பகிர்ந்தளிக்கப்பட்ட சுயாட்சியை ஏற்றுக்கொண்ட சமஸ்டி அடிப்படையிலான அரசியலமைப்பே இந்த நாட்டு மக்கள் அனைவரும் சாந்தியுடனும் சமாதானத்துடனும் வாழ வழிவகுக்கும்-என்றனர். கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன்,

வடக்கு மாகாணசபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் அணித் தலைவர் சு.சுரேன் ஆகியோரும் விளக்கக் கருத்துரைகளை வழங்கியிருந்தனர். (21-426)

### உணவு ஒறுத்திருக்கும் அரசியல் கைதிகளுக்காக

## இன்று இடம்பெறும் போராட்டத்துக்கு சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பும் ஆதரவு

யாழ்ப்பாணம், ஒக்.24
அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்து யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள கவனவீர்ப்புப் போராட்டத்துக்குச் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு ஆதரவு தெரிவிக்கின்றது.

உணவு ஒறுப்புப் போராட்டத்தை மேற்கொள்ளும் அரசியல் கைதிகளின் நியாயமான கோரிக்கையை அரசு உடனடியாக நிறைவேற்றவேண்டும் என்பதை வலியுறுத்தி இன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதன் தலைவர் க. ஆனந்தக்குமாரசுவாமி, இணைச் செயலாளர்கள் ச. தனுஜன், அ. சீவரத்தினம் ஆகியோரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தங்களின் வழக்குகளை அனுராதபுரத்துக்கு மாற்றியதைக் கண்டித்தும், மீண்டும் வவுனியாவுக்கு மாற்ற வலியுறுத்தியும் 28 நாள்களையும் தாண்டி அனுராதபுரம் சிறைச்சாலையில் உணவு ஒறுத்திருக்கின்ற ம. சுலக் ஷன், க. தர்சன், இ. திருவருள் ஆகிய மூன்று பேரினதும் நியாயமான கோரிக்கையை அரசு உடனடியாக நிறைவேற்றுவதன் மூலம் அவர்களின் உயிரைக் காப்பாற்றவேண்டும் எனச் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு கோரிக்கை விடுக்கின்றது.

அத்துடன், அனைத்து அரசியல் கைதிகளையும் நிபந்தனையற்ற வகையில் உடனடியாக விடுவிக்குமாறும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை விலக்கிக்கொள்ள கோரியும் கடந்த சில நாள்களாகப் பல்வேறு வெகுஜனப் போராட்டங்களின் ஊடாகவும் ஏனைய அமைப்புக்களுடன் இணைந்து தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற நாம் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்துக்கு முன்பாக புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு எமது முழுமையான ஆதரவினை வழங்குவதுடன், அனைத்து மக்களையும் இந்தக் கவனவீர்ப்பில் கலந்துகொண்டு உணவொறுத்திருக்கின்றவர்களின் கோரிக்கைக்கு ஆதரவாகவும், அரசியல் கைதிகள் என்ற பெயரில் சிறையில் அடைக்கப்பட்டு வாழ்வுரிமை மறுக்கப்படுகின்ற சமூக அநீதிக்கு எதிராகவும் தொடர்ச்சியாகக் குரல்கொடுக்க வேண்டியுள்ள நிர்ப்பந்தச் சூழலை உணர்ந்து அணிதிரளுமாறு அழைத்துநிற்கின்றோம் என்றுள்ளது. (21)

# இலவச மருத்துவ ஆலோசனை யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஒக்.24
லண்டனில் இருந்து வருகை தந்த மருத்துவ ஆலோசகர் திருமதி. இராஜேஸ்வரி ஈஸ்வரஞானம், யாழ்ப்பாணத்தில் இலவச மருத்துவ ஆலோசனையை வழங்குகின்றார். நேற்று முதல் அவரது ஆலோசனைகள் நாவலர் வீதியில் உள்ள 166/3 , இலக்க இல்லத்தில் இடம்பெறுகின்றது. நாளை மறுதினம் இது நிறைவடையும் என தெரிவிக்கப்பட்டது. இந்த இலவச மருத்துவத்தினைப் பெறுவதற்கோ அல்லது குறித்த பயிற்சியை பழகுவதற்கு விரும்புபவர்களோ குறித்த முகவரியில் நேரடியாகவோ அல்லது 0764108415 என்ற அலைபேசி இலக்கத்துடனோ தொடர்புகொண்டோ பதிவு செய்யலாம். (21-101)

# காவலூர் ஏ.எஸ்.பி மீது குற்றச்சாட்டு; மூடி மறைப்பதற்குப் பெரும் முயற்சி

### வாக்குமூலமளித்தவர்களின் பணம் மீண்டும் அவர்களுக்கு வழங்கப்படுகிறது என தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.24
ஊர்காவற்றுறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை மூடிமறைக்கும் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. வாக்குமூலமளித்தவர்களுடைய பணம் மீண்டும் அவர்களுக்கு வழங்கப்படுகிறது என தெரிவிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறைப் பகுதியில் நீண்டகாலமாகப் பணியாற்றிய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அங்குள்ள சிலரிடம் கையூட்டல்களைப் பெற்றதோடு ஊர்காவற்றுறைப் பகுதியில் இருந்து பலரைக் கண்டிக்கு அழைத்துச் சென்று அங்கு தனக்கு வீடு கட்டினார் என்று அவர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. சக பொலிஸ் அதிகாரிகளினாலும் அந்தக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. எனினும் அவருக்கு எதிராக எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படாது, அவர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக அதே பிரதேசத்தில் பணியாற்றிமை தொடர்பில் விசனமும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த விடயம் பத்திரிகைகள் வாயிலாக பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இது தொடர்பில் ஆராயப்படும் என தெரிவித்த பொலிஸ் மா அதிபர் 3 மாதங்களின் பின்னர் அந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஆராய்வதற்கு அதிகாரிகளை நியமித்தார். அதன் அடிப்படையில் கடந்த15ஆம் திகதி கொழும்பில் இருந்து ஊர்காவற்றுறைக்கு வந்த அதிகாரிகள் பொலிஸ் அத்தியட்சகர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகளில் ஈடுபட்டிருந்தனர்.

பொலிஸ் அத்தியட்சகருக்கு கையூட்டல்களை வழங்கினார்கள் என்று தெரிவிக்கப்பட்ட ஐவரிடம் இருந்து அவர்கள் வாக்குமூலங்களைப் பெற்றனர். இரகசியமான முறையில் வாக்குமூலங்கள் பெறப்பட்டிருந்தன. இந்த நிலையில் வாக்குமூலமளித்தவர்களில் இருவருக்கு நேற்றுமுன்தினம் மாலை அவர்களுடைய பணம் மீண்டும் கொடுக்கப்பட்டுள்ளது. ஏனையவர்களுடைய கொடுப்பனவு தொடர்பிலும் கணக்குகள் திரட்டப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு பணம் வழங்கப்படுவதன் மூலம் குறித்த மோசடியை மூடிமறைக்க முற்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டு அங்கு முன்வைக்கப்பட்டுள்ளன. (21-101)

# புதிய அரசமைப்பை நிறைவேற்ற முயற்சித்தால் நாடாளுமன்றுக்கு குண்டு போட்டாவது தடுப்போம்

## விமல் வீரவன்ச கொக்கரிப்பு

கொழும்பு, ஒக். 24

ஒற்றையாட்சிக்கு அச்சுறுத்தலாக அமையும் புதிய அரசமைப்பைத் தோற்கடிப்பதற்குரிய சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும். முடியாத பட்சத்தில் நாடாளுமன்றத்துக்குக் குண்டு போட்டாவது அதைத் தடுத்து நிறுத்துவோம். இவ்வாறு சூளுரைத்துள்ளார் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான விமல் வீரவன்ஸ.



சிறையிலிருந்தபோது விமல் வீரவன்ஸவால் எழுதப்பட்ட புத்தகத்தின் இரண்டாம் பாகம் கொழும்பில் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

இங்கு விமல் வீரவன்ச மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் தலைவிதியை நிர்ணயிக்கவேண்டிய காலகட்டம் வந்துள்ளது. பிரிவினைவாத அரசியல் நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் நிறை வேற்றப்பட்டால் அது ஆபத்தாக அமைந்துவிடும்.

இவ்வாறானதொரு பயங்கரத் திட்டத்துக்கு எதிர்ப்பை வெளியிடுவதற்கு 76 உறுப்பினர்கள் இல்லாவிட்டால் நாடாளுமன்றம் எதற்கு? எது எப்படியோ எதைச் செய்தாவது புதிய அரசமைப்பு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதைத் தடுத்து நிறுத்துவோம். அப்படி முடியாவிட்டால் மறுநாள் நாடாளுமன்றத்துக்கு குண்டைப் போட்டு கதையை முடித்துவிடலாம் - என்றார். (5)

# நாட்டில் தமிழ் மக்களுக்கு என்ன பிரச்சினை இருக்கிறது?

## கமால் குணரத்ன கேள்வி எழுப்புகிறார்



கொழும்பு, ஒக். 24

நாட்டில் எங்களுக்குக்கிடைத்ததில் தமிழ் மக்களுக்கு எது கிடைக்கவில்லை. நாடாளுமன்றத்தின் எதிர்க் கட்சித் தலைவராக சம்பந்தன் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். நாட்டின் நீதியரசராக சிறிபவன் பணியாற்றினார். கடற்படைத் தளபதியாக ட்ராவிஸ் சின்னையா இருக்கின்றார். அப்படியாயின் நாட்டில் தமிழ் மக்களுக்கு என்ன பிரச்சினை இருக்கின்றது. இவ்வாறு நந்திக் கடலுக்கான பாதை என்ற நூலை எழுதிய மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன கேள்வி எழுப்பினார்.

கம்பகாப் பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் புதிய அரசமைப்புக் கொண்டு வரப்படவேண்டும் என்று அரசு கூறிவருகின்றது. ஆனால் நாட்டில் தற்போது தமிழ் மக்களுக்குப் பிரச்சினை இருப்பதாகத் தெரியவில்லை. நாட்டில் எங்களுக்குக் கிடைத்ததில் தமிழ் மக்களுக்கு எது கிடைக்கவில்லை. நாடாளுமன்றத்தின் எதிர்க் கட்சித் தலைவராக சம்பந்தன் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். நாட்டின் நீதியரசராக சிறிபவன் பணியாற்றினார். கடற்படைத் தளபதியாக ட்ராவிஸ் சின்னையா இருக்கின்றார். அப்படியாயின் நாட்டில் தமிழ் மக்களுக்கு என்ன பிரச்சினை இருக்கின்றது. அரசு எங்களுக்கு எதிராகச் செயற்படும் பன்னாட்டுச் சமூகத்தின் தேவைக்கே புதிய அரசமைப்பைக் கொண்டுவர முயற்சிக்கின்றது - என்றார். (5.31)

# இனப் பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வு ஒருபோதும் தீர்வல்ல

## இப்படிச் சொல்கிறார் கோத்தபாய

கொழும்பு, ஒக். 24

அதிகாரப் பகிர்வின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு கண்ட நாடு எதுவும் உலகில் இல்லை என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.



கம்பகா பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போரின் மூலம் பயங்கரவாதத்தை தோற்கடிக்க முடியாது என்றவர்கள் தற்போது புதிய அரசமைப்பைக் கொண்டுவருவதற்கு முயற்சிக்கின்றனர். இது சாதாரண தமிழ் மக்களின் தேவைகளுக்காக அல்ல. தமிழ் அரசியல்வாதிகளின் தேவைகளுக்காகவே உருவாக்கப்படுகின்றது.

அதிகாரப் பகிர்வின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது. அவ்வாறு தீர்வுகண்ட நாடுகள் உலகில் இல்லை. இந்தியா மூன்றாகப் பிரிந்துள்ளது. ஆனால் பிரச்சினை தீரவில்லை.

பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டதுடன் சிறுபான்மை மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கப்பெற்றது. அன்று பயங்கரவாதிகளாக இருந்த சுமார் 13 ஆயிரம் பேருக்கு மறுவாழ்வளித்து அவர்களை வெற்றிகரமாக சமூகத்துடன் இணைத்தோம். இவைதான் நல்லிணக்கத்துக்காக மேற்கொள்ளப்படவேண்டிய விடயமாகும்.

இவ்வாறான வேலைத்திட்டங்களை விட்டு அரசு நல்லிணக்கம் என்ற பெயரில் எதனையோ செய்து கொண்டிருக்கின்றது. நல்லிணக்கத்துக்காக நாங்கள் செய்த ஒரு வேலைத்திட்டத்தைக்கூட இந்த அரசு இதுவரை செய்யவில்லை.

போர்க் காலத்தில் பயங்கரவாதிகளுக்காக வெளிநாடுகளில் நிதி சேகரித்தவர்களும் ஆயுதங்கள் சேகரித்து அனுப்பியவர்களுமே இன்று புதிய அரசமைப்புக்காக முன்னின்று செயற்படுகின்றனர்.

அவ்வாறானவர்களின் தேவைக்காக மேற்கொள்ளப்படும் அரசமைப்பில் எவ்வாறான விடயங்கள் உள்வாங்கப்படும் என்பதை அனைவரும் புரிந்து கொள்ளலாம் - என்றார். (5)



# புதிய அரசமைப்பு அவசியமேயில்லை கோட்டை சங்கமகா சபையும் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 24

புதிய அரசமைப்பு நாட்டுக்கு அவசியமில்லை என்று கோட்டை சங்க சபையும் தீர்மானித்துள்ளது.

கோட்டை சங்கமகா சபையின் கூட்டம் நேற்றுமுன்தினம் காலை ரஜமஹா விகாரையில் நடைபெற்றது. இதன்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டுக்குப் புதியதொரு அரசமைப்போ அல்லது அரசமைப்பு மறுசீரமைப்போ அவசியமில்லையென மல்வத்த, அஸ்கிரிய பீடங்களின் சங்க சபைகள் அறிவித்துள்ள நிலையிலேயே அந்த முடிவுக்கு ஆதரவைத் தெரிவிக்கும்வகையில் கோட்டை சங்க மகாசபையும் இந்த முடிவை எடுத்துள்ளது. (5)

### மகாசங்கத்தைப் புறக்கணிக்கவேண்டாம்

மகா சங்கத்தினரின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும், அரசு கருத்தில் கொண்டே செயற்பட வேண்டும். இவ்வாறு மல்வத்த பீட சங்க சபையின் போசகர் நியங்கொட விஜிதசிறி தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்புத் தொடர்பில் மகாசங்கத்தினரின் கருத்துக்களை அரசு உள்வாங்கிச் செயற்படவேண்டும். அவ்வாறில்லாமல் செயற்பட முனைந்தால் அது பிரச்சினையையே ஏற்படுத்தும். நாட்டின் வரலாற்றில் எந்தவொரு நடவடிக்கையும் மகா சங்கத்தினரின் ஆலோசனையுடன் முன்னெடுக்கப்படுவதே சம்பிரதாயமாகும் - என்றார். (5,3)

# ஐ.எஸ்ஸில் இலங்கை மருத்துவர்களா ?

## காணொலியால் புதிய சர்ச்சை

கொழும்பு, ஒக். 24

ஐ.எஸ். எனப்படும் இஸ்லாமிய தேசம் தீவிரவாதிகளுடன் இணைந்து இலங்கையைச் சேர்ந்த மருத்துவர்களும் பணியாற்றுவதாக, ஐ.எஸ். அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள காணொலியில் தகவல் வெளியாகியுள்ளது.

ஐ.எஸ். தீவிரவாதிகளின் மருத்துவ வசதிகள் பற்றிய சுமார் 15 நிமிடக் காணொலி ஒன்று அந்த அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தக் காணொலியில் இந்தியாவைச் சேர்ந்தவர் என்று சந்தேகிக்கப்படும் மருத்துவரான, அபு அல் முகாதில் ஐ.எஸ் அமைப்பின் மருத்துவ வசதிகள் தொடர்பாக உரையாற்றியுள்ளார்.

இலங்கை, ஆஸ்திரேலியா, ரஷ்யா உள்ளிட்ட பல நாடுகளின் மருத்துவர்கள் தமது மருத்துவ நிலையத்தில் பணியாற்றுவதாக, இந்திய மருத்துவர் காணொலியில் குறிப்பிட்டுள்ளார்.

உலகெங்கும் உள்ள மருத்துவ நிபுணர்களை இஸ்லாமிய அமைப்புடன் இணைந்து பணியாற்ற முன்வருமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

குறிப்பிட்ட இந்திய மருத்துவர் தென்மாநிலத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்று இந்தியப் புலனாய்வு அமைப்புகள் சந்தேகம் வெளியிட்டுள்ளதாக, இந்திய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (5)

# தமிழர்கள் ஆயுதமேந்தியதன் விளைவை அனுபவிக்கின்றனர்

## மீண்டும் தனிநாடு கோரமாட்டார்கள் என்கின்றது மக்கள் விடுதலை முன்னணி

சம்பந்தனோ வடக்கு - கிழக்கு மக்களோ தனி நாட்டையும் விரும்பவில்லை பிரிவினைவாதத்தையும் விரும்பவில்லை என்று மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் லக்ஸ்மன் நிபுணாராய்ச்சி தெரிவித்ததாவது:

வடக்கு - கிழக்கில் பிரிவினைவாதம் என்ற ஒன்று இப்போது இல்லை. அவர்கள் அதை விரும்பவில்லை. ஆனால், அங்குள்ள அரசியல்வாதிகள் இதைப் பயன்படுத்தாமல் அரசியல் செய்ய முடியாது. உண்மையில் சம்பந்தனோ அங்குள்ள மக்களோ தனி நாட்டை விரும்பவில்லை. அவர்கள் ஆயுதத்தின் ஊடாகத் தனி நாட்டை உருவாக்குவதற்கு அப்போது முயற்சி செய்தது உண்மைதான். அது தோல்வியில் முடிவடைந்தது. அதன் விளைவை அவர்கள் அனுபவித்துள்ளனர். அதனால் அவர்கள் மீண்டும் அதை விரும்பவில்லை. அதற்கான முயற்சியை அவர்கள் செய்யவில்லை. இருந்தாலும், தனி நாடு என்ற அந்த மனோநிலையில் இருந்து அவர்கள் விடுபடவில்லை. இந்த அரசியல்வாதிகளின் பிழையான செயற்பாடே மக்களின் மனோநிலை தொடர்ந்தும் இருப்பதற்கு காரணம். அந்த மனோநிலையை அடியோடு அழிப்பதற்கு இவர்கள் முயற்சி செய்யவில்லை.

இதனால் வடக்கு அரசியல்வாதிகள் அந்த மனோநிலையைப் பயன்படுத்தி அரசியல் செய்கின்றனர். மாகாண சபைக்குக் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் இருக்கின்றபோதிலும், அந்த அதிகாரங்களை ஒருபோதும் அவர்களால் பெறமுடியாது. அவ்வாறு பெற முடியாது என்று அவர்களுக்கும் தெரியும் - என்றார். (5,3)

# பௌத்த அமைப்புகளிடையே மூண்டது அதிகாரப் போர்

கொழும்பு, ஒக். 24

இனங்களுக்கிடையே முறுகலை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் கடும்போக்குடைய பௌத்த அமைப்புகளுக்கிடையே அதிகாரப் போட்டி தீவிரமடைந்துள்ளதால் பெரும் குழப்பநிலை உருவாகியுள்ளது.

சிங்கள, பௌத்த மக்கள் மத்தியில் தமக்கான இருப்பிடத்தை தக்கவைத்துக் கொள்ளும் முயற்சியில் மேற்படி அமைப்புகள் மும்முரமாக இறங்கியுள்ளன.

பொதுபலசேனா, ராவணா பலய, சிங்கலே, சிங்கலே அபி, சிங்கலே ஜாதிக பெரமுன, சிங்கலே ஜாதிக பலவேக உள்ளிட்ட அமைப்புகளுக்கிடையே தான் இவ்வாறு நீயா? நானா? என்ற அதிகாரப்போர் மூண்டுள்ளது.

பொதுபலசேனா அமைப்பே கடந்த காலங்களில் இலங்கையில் பேசப்பட்ட அமைப்பாக விளங்கியது. இனவாத ஆயுதத்தைக் கையிலெடுத்து ஏனைய மதங்களுக்கு எதிராகப் பரப்புரை மேற்கொண்டதால் பன்னாட்டுச் சமூகமும் அவ்வமைப்புமீது கண்டனக் கணைகளைத் தொடுத்திருந்தன.

> சர்ச்சைக்குரிய செயற்பாடுகளில் இறங்கினால் தான் பிரபல்யமடையலாம் என்ற நினைப்பிலேயே அவ்வமைப்பு சில நடவடிக்கைகளை முன்னெடுத்தது.

சர்ச்சைக்குரிய செயற்பாடுகளில் இறங்கினால்தான் பிரபல்யமடையலாம் என்ற நினைப்பிலேயே அவ்வமைப்பு சில நடவடிக்கைகளை முன்னெடுத்தது. இதற்காக சமூக வலைத்தளங்களையும் அவ்வமைப்பு பயன்படுத்தியது.

இனவாத் சிந்தனை கொண்டோர் மத்தியில் அவ்வமைப்பு பிரபல்யமடைந்தது. அதன்பின்னர் ராவண பலய, சிங்கலே உள்ளிட்ட அமைப்புகளும் இதே பாணியில் செயற்பட ஆரம்பித்தன.

ரோஹிங்ய முஸ்லிம்கள் விவகாரத்தை சிங்கலே ஜாதிக பலவேக என்ற அமைப்பு கையிலெடுத்திருந்தது. புதிய அரசமைப்புக்கு எதிராக சில புதிய அமைப்புகள் பரப்புரை மேற்கொண்டு வருகின்றன.

'நீதிமன்றத் தடை உத்தரவை மீறி போராட்டம் நடத்துதல், கைதாகிச் சிறைச்சாலைக்குச் செல்லுதல், சர்ச்சைக்குரிய விடயங்களைக் கையில் எடுத்தல் ஆகிய நடவடிக்கையில் இறங்கினால் இலகுவில் பிரபல்யம் அடைந்துவிடலாம் என்ற மாயை நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த யுக்தியையே சில அமைப்புகள் கடைப்பிடித்து வருகின்றன. இந்த நிலைமை மாறவேண்டும். சட்டத்தை கேலிக்கூத்தாக்குவதற்கு இடமளிக்கக்கூடாது' என்று அரசியல் விமர்சகர் சுட்டிக்காட்டினார். (5)

# அரசமைப்பில் திருத்தங்கள் செய்தாலே போதும்

## விமலரத்ன தேரர்

கொழும்பு, ஒக். 24

அரசமைப்பில் திருத்தங்கள் மாத்திரம் செய்தாலே போதுமானது. இவ்வாறு சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பெல்லன்வில விமலரத்ன தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமக்குப் புதிதாக அரசமைப்பு உருவாக்கப்படத் தேவையில்லை. மாறாக அரசமைப்பில் திருத்தங்கள் செய்யப்படவேண்டும். புதிய அரசமைப்பு உருவாக்கினால் அதற்குப் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டியது அவசியமாகின்றது.



புதிய அரசமைப்புக் குறித்த யோசனைத் திட்டமே உருவாக்கப்பட்டுள்ளது என்பதனைப் பௌத்த மாநாயக்க தேரர்கள் அறிவார்கள். இதில் திருத்தங்களைச் செய்து புதிய யோசனைத் திட்டமொன்றை அரசு முன்வைக்க முடியும். அரசமைப்பை புதிதாக உருவாக்காது திருத்தங்களைச் செய்ய முடியும் - என்றார். (5)


**Possible Green Private Limited. Kilinochchi.**

**நாவல் விதைகள் தேவை**

கிளிநொச்சியில் தயாரிக்கப்பட்டு உலகம் முழுவதும் விற்பனையாகும் ஆரோக்கிய வாழ்விற்கான தேயிலை உற்பத்தி நிறுவனத்திற்கு சுத்திகரிக்கப்பட்ட நாவல் விதைகள் தேவைப்படுகின்றன.

தொடர்புகளுக்கு: **021 228 3369**
(திங்கள் - வெள்ளி வரை முற்பகல் 9.30 மணி - 4.30 மணி வரை)
**076 938 6017**


## அறிவித்தல்

## வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபை

எமது சபையின் நெல்லியடி உப அலுவலகத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் 2017.10.25 ஆம் திகதி முதல் ஆதன மீள் மதிப்பீடு நடைபெறவிருப்பதால் அந் நடவடிக்கை முடியும் வரை ஆதனங்களுக்கான பெயர்மாற்ற செய்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் தங்களது குடியிருப்புக்களுக்கு விலைமதிப்பீட்டுத் திணைக்கள குழுவினர் மீள் மதிப்பீட்டுக்காக வருகை தரவிருப்பதால் அவர்களுக்கு மீள்மதிப்பீடு செய்வதற்குரிய ஒத்துழைப்பினை வழங்கியுதவுமாறு வரியிறுப்பாளர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**அ.வினோராஜ்,**
**செயலாளர்,**
**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி.**


**POSSIBLE GREEN PRIVATE LIMITED KILINOCHCHI**

**பதவி நிலை வெற்றிடம்**

**கிளிநொச்சியில் தயாரிக்கப்பட்டு உலகம் முழுவதும் விற்பனையாகும் ஆரோக்கிய வாழ்விற்கான தேயிலை உற்பத்தி நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.**

1. சந்தைப்படுத்தல் இயக்குநர் (Marketing Director)
   குறித்த துறையில் குறைந்த பட்சம் 2 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்
   ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல் அவசியம். சிங்களம் சிறப்புத் தகைமையாகக் கருதப்படும்.
2. கிராபிக் டிசைனர் (Graphic Designer)
   குறித்த துறையில் குறைந்த பட்சம் ஒரு வருட அனுபவம் இருத்தல் வேண்டும். பின்வரும் மென்பொருள் பிரயோகித்தலில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருத்தல் அவசியம்.
   1. Photoshop (advanced Version)
   2. Coral draw
   3. Page Maker
   4. Ms Office Packages
3. எமது உற்பத்திப் பொருள்களுக்கான சில்லறை மற்றும் மொத்த விற்பனை யாளர்கள் வேண்டப்படுகின்றனர்.

**பொருத்தமான தகைமையுள்ளவர்கள் தொடர்புகொள்ள:**

மின்னஞ்சல்: sk vany@possiblegreen.com
தொலைபேசி: 021 228 3369 / 076 938 6017


## DISTRICT SECRETARIAT JAFFNA

## INVITATION FOR BIDS

**The Chairman, Procurement Committee, District Secretariat, Jaffna on behalf of the Government Agent/ District Secretary, Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for the **CONSTRUCTION OF ELEVATOR DUCT & INSTALLATION OF ELEVATOR AT DISTRICT SECRETARIAT, JAFFNA,** As described below the schedule.

1. Bidding will be conducted through National Competitive Bidding, however limited to the bidders who registered within the administrative boundary of the Northern Province.
2. To be eligible for contract award, the successful bidder shall not have been black listed and shall be registered in the field of building construction on the Institute for Construction Training and Development (ICTAD), valid until the date of closing of the bids. Further the registration should be valid at the date of award.
3. Interested bidders may obtain further information from the **Administration Branch, District Secretariat, Jaffna.** And inspect the Bidding Documents at the same address on any working day from **9.00 hrs to 3.00 hrs** from **24.10.2017**
   Contact numbers are: phone; 021 222 2771
4. A Complete set of Bidding Documents in English language could be purchased by interested bidders on the submission of a written application to the **Administration Branch, District Secretariat, Jaffna** from **24.10.2017** until **06.11.2017** from **9.00 am** to **2.00 pm** upon payment of a non- refundable fee of Rupees three thousand and five hundred (Rs 3500/-).
5. Sealed bids shall be sent by registered post addressed to the **Chairman, Procurement Committee, District Secretariat, Jaffna** or deposited in the Tender Box available at the **Government Agent Office, District Secretariat, Jaffna** on or before **2.30 pm on 08.11.2017.** Late bids will be rejected, Bidders should write the job description and bid No. on the top left hand corner of the envelope. Bids will be opened at **3.00 pm at same day** in the presence of the bidders or bidders 'representatives who choose to attend. Original and duplicate should be submitted separately.
6. Procurement Committee will keep the right to make final decision in regard to accept or reject Bids will be the final regarding the bids.
7. Bid shall be valid for a period of **90 days** from the last date fixed for receiving of Bids or any extended period & bid security should valid **120 days** from the bid opening.
8. Prebid meeting will be held on **02.11.2017** at **10.00am**
9. The detail of the bid is given below.

| Bid No | Description of work | Estimated amount (million) (Excluding Vat) | Contract Period (months) | Minimum Grade of ICTAD Building) | Bids Security (RS) | Non refundable fee (Rs) |
|---|---|---|---|---|---|---|
| JF/ADM/Con.Work/Lift/11/13/ 2017 | CONSTRUCTION OF ELEVATOR DUCT & INSTALLATION OF ELEVATOR AT DISTRICT SECRETARIAT, JAFFNA.- | 5.88 | 04 | C7 | 117,000.00 | 3500/- |

**N.Vethanayahan,**
Government Agent/ District Secretary,
Jaffna District



# பொதுவாக்கெடுப்புக்கு முன்னர் உள்ளூராட்சி தேர்தல் நடக்கும்

*நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர்*

கொழும்பு, ஒக். 24

புதிய அரசமைப்பு மீதான பொது வாக்கெடுப்புக்கு முன் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் நடத்தப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய அரசமைப்பை உருவாக்கும் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை மீதான இரண்டு நாள் விவாதம் மாத இறுதியில் நடத்தப்படும். நாடாளுமன்றில் இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையில் ஐக்கிய தேசியக் கட்சியின் யோசனை உள்ளடக்கப்படவில்லை. பெரும்பான்மையான கட்சிகள் முன்வைக்கும் யோசனைகளுடன் நாம் இணங்கிப் போவது என்ற நிலைப்பாட்டை எடுத்ததாலேயே நாம் யோசனைகளை முன்வைக்க வில்லை. வழிநடத்தல் குழுவுக்கு நாம் இதை ஏற்கனவே அறிவித்துள்ளோம்.

அதேபோல், இந்த அறிக்கைக்குச் சில அரசியல் கட்சிகள் யோசனைகளைச் சமர்ப்பித்துள்ள போதிலும் சில கட்சிகள் சமர்ப்பிக்கவில்லை. இந்த இடைக்கால அறிக்கை மீதான மூன்று நாள் விவாதம் இந்த மாதம் இறுதியில் நடத்தப்படும்.

லால் விஜயநாயக்கக் குழு தொடர்ச்சியாக மக்களின் கருத்துக்களைத் திரட்டி வருகின்றது. இறுதிஅறிக்கைக்குள்மக்களின்யோசனைகள்உள்ளடக்கப்படும். நாடாளுமன்றில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் இறுதி அறிக்கை நிறைவேற்றப்பட்டதும் அதன்மீது பொது வாக்கெடுப்பு நடத்தப்படும். அதன் பின்பே முழுமையான அரசமைப்பாக அது மாற்றமடையும்.

அரசமைப்புத்தொடர்பாகமுன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் எவையும் உண்மையில்லை. குறுகிய அரசியல் இலாபத்துக்காக சில கட்சிகள் இதை எதிர்க்கின்றன. நாடு பிளவுபடப் போகின்றது என்றும் தமி ழீழம் உருவாகப்போகின் றது என்றும் பரப்புரை மேற்கொண்டு வருகின்றன. இந்தப் போலிப் பரப்புரைகள் அனைத்தையும் முறியடித்து நாம் புதிய அரசமைப்பைக் கொண்டு வருவோம். புதிய அரசமைப்பு மீதான பொது வாக்கெ டுப்புக்கு முன் உள்ளூ ராட்சிச் சபைத் தேர்தல் நடத்தப்படும்- என்றார். (5.3)

## தவறிவிட்டது

சுபோகரன் எகேஸ்கிவன் என்பவருடைய அடையாள அட்டை (200029000659) கோப்பாய் சந்திக்கும். நீர்வேலி கந்தசாமி கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**071 845 3546**

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

17.09.2017 அச்சுவேலி மினிபஸ் சேவையின்போது (அச்சுவேலி- யாழ்) உரிய பஸ்சுக்குள் கண்டெடுக்கப்பட்ட தங்க ஆபரணம் ஒன்று அச்சுவேலி மினிபஸ் சங்க காரியாலயத்தில் உள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

**மினிபஸ் சங்கம், பஸ்நிலையம்,**
**அச்சுவேலி 752/1**



## ஜெபம்

என்கையில் ஏற்பட்ட கட்டியை குணமாக்கி உம் கையில் உலகை ஏந்தும் குழந்தை யேசுவே எங்கள் மேலே இரக்கமாயிரும்.

**அடியார்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையில் விசேட கல்வி ஆசிரியராகக் கடமை யாற்றி தரம்III அதிபராகப் பதவி உயர்வுபெற்று **யா/ வரணி மத்திய கல்லூரியில் உப அதிபராகக்** கடமையேற்றிருக்கும்

**கிருஸ்ணசாமி ராகுலன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர் மேலும் பட்டங்கள் பதவியுயர்வுகளைப் பெற்று நீடூழி வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்,**
**யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ஆ.பா.**
**கொடிகாமம்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய அதிபர்**

**நடேசு தயாளன்**

அவர்கள் இவ்வருடத்துக்கான கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட சிறந்த அதிபருக்கான

**“ பிரதீபா பிரபா ”**

விருதினை 2017.10.23 பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்.**

## ஸ்ரீ கருமாரி அம்மன் ஜோதிட நிலையம்



**பண்டித் முனியாண்டி**

**துல்லியமாக கணித்து பார்க்கப்படும் விடயங்கள்**



கைரேகை, நாமநட்சத்திரம், ஜாதகம், கல்வி, தொழில், வெளிநாடு, லொட்டரி, கை சாஸ்த்திரம், வியாபாரம் விருத்தியடைதல், லக்சஷ்மி வசீகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, காதல் பிரச்சினை, பயணஎதிரிகள், கண் திருஷ்டி, கஷ்ட நஷ்டங்கள், நீதி மன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண்பிள்ளைகள் பெற்றோருடன் குடும்பத்தில் ஒற்றுமையாக நிலைத்திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல் இவை அனைத்தும் துல்லியமாகக் கணித்து கூறப்படும்.

பேசும் மொழிகள் : தமிழ், ஆங்கிலம், இந்தி

ALL RELIGIONS ARE WELCOME

**100% உத்தரவாதம்**

**Mobile: 076 887 8382**
**077 036 1707** நேரம் : காலை 8.00 - மாலை 8.00 வரை (7 நாள்கள்)

**நாதன் இன்**
**394, 1/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.**
(வெலிங்டன் சந்தியிலிருந்து 100m பெருமாள் கோயில் போகும் வீதியில்)

## நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம்

### பெறுகைக்கான அழைப்பு

**நந்தவனம் பாதுகாப்பு இல்லம் கிளிநொச்சிக்கான புதிய உலர் உணவுப் பொருள்கள் விநியோகமும் தொற்று நீக்கிப் பொருட்கள் விநியோகமும் - 2017/2018**

1. வடமாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் பெறுகை குழுத்தலைவர் தகுதியான, தகைமை வாய்ந்த புதிய உலர் உணவுப் பொருட்கள், சமைத்த உணவு மற்றும் தொற்று நீக்கிப் பொருட்கள் விநியோகத்தர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை பின்வரும் நிறுவனங்களுக்குக் கோருகின்றார்.

| தொடர் இல | பெறுகை இல. | நிறுவனங்கள் | உத்தரவாத வைப்புப்பணம் ரூபா. |
|---|---|---|---|
| 01. | NP/30/02/Acc-05/Food/-2016-03 | நந்தவனம் பாதுகாப்பு இல்லம் கிளிநொச்சி | 50,000 |

2. கேள்வி மனு பெறுகைப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளும்
காலம் :- 25.10.2017 தொடக்கம் 08.11.2017
நேரம் :- மு.ப 09.00 – பி.ப 15.00

3. விலைக் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 10.11.2017 மு.ப10.30 மணி

4. தகதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக் கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ் காட்டப்பட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

**தி.விஸ்வரூபன்**
**தலைவர், திணைக்கள பெறுகைகள் குழு,**
**நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் வ.மா,**
**மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி :- 021-222 8321, 021-205-7102 தொலைநகல் 021-205-7103**

## VACANCY

**RESTAURANT WAITERS தேவை.**

**முன் அனுபவம் மற்றும் ஆங்கில அறிவு விரும்பத்தக்கது.**

கீழ்க்காணும் முகவரிக்கு உங்கள் சுயவிவரக்கோவையை அனுப்பவும்.

hr@thethinnai.com

**The Thinnai Hotel**

86, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

077 924 3491
021 203 0400

## புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல்- 2016

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2013.01.01 ஆம் திகதி முதல் புதுக்குடியிருப்பு பிரதேசசபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி விபரங்களுக்கமையவும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 2016.05.03 ஆம் திகதிய NP/ 05/01/ US/ Poon.PS/20 ஆம் இலக்க கடிதத்திற்கமைவாகவும் தகைமையுடையவர்களிடமிருந்து 2016/07/08 ஆம் திகதிய உதயன் பத்திரிகை விளம்பரத்தின் மூலம் 04 (நான்கு) பதவியினர்க்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அவற்றுள் **“சுகாதாரத் தொழிலாளி - தரம் III ” பதவிக்கு 04 (நான்கு)** வெற்றிடம் உள்ளதெனக் குறிப்பிட்டு விண்ணப்பங் கள் கோரப்பட்டன. அதற்கிணங்க **“சுகாதாரத் தொழிலாளி – தரம் III”** பதவிக்கு விண்ணப்பிக்க தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கு ஏற்ப விண்ணப்பப் படிவத்தினை எமது அலுவலகத்தில் ரூபா.100/= செலுத்தி பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் விண்ணப்பங்களை எதிர்வரும் 2017.11.06 ஆம் திகதிக்கு முன் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும் என்பதுடன் குறிக்கப்படும் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

குறித்த பதவிக்காக ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க தேவையில்லை என்பதுடன் 2016.07.08 ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்தினை தேவை ஏற்படின் விண்ணப்பப் படிவத்துடன் அதற்கான பிரதியினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**ந.ஜெயராஜா,**
**செயலாளர்,**
**பிரதேசசபை,புதுக்குடியிருப்பு.**

## மனவளர்ச்சி குன்றியிருப்பினும் தொழிற்திறன் பயிற்சி பெற்று சமூகத்தில் உயர இளைஞர், யுவதிகளுக்கு ஓர் அரியவாய்ப்பு

- **மன்னார் திருக்கேதீச்சரம் பகுதியில் விடுதி வசதிகளுடன் கூடிய தொழிற்பயிற்சி நிலையம் விரைவில்!**
- **தங்குமிடம், உணவு, தொழில்பயிற்சி முதலான சகலமும் இலவசம்!**
- திருக்கேதீச்சரம் ஆலயத்துக்கான விபூதி, கற்பூரம், சந்தனம் போன்ற மங்கள பொருள்களை உற்பத்தி செய்வதில் பயிற்சிகள்.
- பயிற்சியின் நிறைவில் உற்பத்திப் பொருள்களை ஆலயத்துக்கு சந்தைப்படுத்தும் வருமானத்தில் பங்கு.
- 15 தொடக்கம் 35 வயதுக்கிடைப்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கு முன்னுரிமை.
- வடமாகாணத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 05 பேர்கள் மட்டுமே தெரிவு செய்யப்படுவதால் முதலில் விண்ணப்பிப்போருக்கு முன்னுரிமை.
- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- மனவளர்ச்சி குன்றியோர் அல்லாதோர் விண்ணப்பிக்க முடியாது.
- விண்ணப்பிக்க கடைசித் திகதி 30.11.2017
- மனவளர்ச்சி குன்றியவரின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் பயிற்சி பெற இருப்பவரின் விவரங்களுடன் தமது சம்மதத்தையும் தெரிவித்து பின்வரும் முகவரிக்கு கடிதம் ஒன்றை எழுதுதல் விண்ணப்பிக்கப் போதுமானது.

**தலைவர்,**
**வவுனியா மாவட்ட வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் (ஓஹான்),**
**இரண்டாம் ஒழுங்கை, பாலவினாயகர் வீதி,**
**தவசிக்குளம், வவுனியா.**

- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் மட்டும் பெற்றோர் அல்லது பாதுகாவலருடன் நேர்முகத் தெரிவுக்கு அழைக்கப்படுவர்.
- மேலதிக விவரங்கள் தேவைப்படுவோர் பின்வரும் தொலைபேசிகள் ஒன்றின் ஊடாக திங்கள் தொடக்கம் வெள்ளிவரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை தொடர்பு கொள்ள முடியும்.

**077 734 3531, 024 324 4074, 024 205 1204**

# ஒற்றையாட்சியைப் பாதுகாப்பதற்கு நிறைவேற்று அதிகாரத்தை தொடர்க

## சு.க. இளைஞர் அணித் தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 24
மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிரப்படும்போது ஒற்றையாட்சியைப் பாதுகாப்பதற்காக நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறைமை இருந்தே ஆக வேண்டும் என்ற சுத்ந்திரக் கட்சியின் நிலைப்பாட்டில் எதுவித மாற்றமுமில்லை. இவ்வாறு அந்தக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இளைஞர் அணித் தலைவருமான சாந்த பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறைமை தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அதன் நிலைப் பாட்டை மிகத் தெளிவாக வெளியிட்டுள்ளது. நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறைமையின் வடிவம் மாற வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

இப்போதிருக்கின்ற அதிகாரத்தை விட அதிகமான அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவதற்கு முடிவெடுத்தால் ஒற்றை ஆட்சி பாதுகாக்கப்பட வேண்டும். அவ்வாறான பாதுகாப்பை வழங்குவதற்கு நிறை வேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறைமையால் மாத்திரமே முடியும். அதற்காகத்தான் நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறைமை இருக்க வேண்டும் என்று நாம் கூறுகின்றோம்.

1978ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட நிறைவேற்று அதிகாரத்தின் அதிகமானவை இப்போது நாடாளுமன்றிற்கு வழங்கப்பட்டுள்ளது. இன்னும் பல நிறைவேற்று அதிகாரங்கள் அரச தலைவரிடம் உள்ளன. அந்த அதிகாரங்களுள் சில திருத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை சிறிலங்கா சுதந்திரக் கட்சி எடுத்துள்ளது.

மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்படும்போது ஒற்றையாட்சியைப் பாதுகாப்பதற்கு நிறை வேற்று அதிகாரமிக்க அரச தலைவர் இருந்தே ஆக வேண்டும் என்பதும் அவர் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டவராகவே இருக்க வேண்டும் என்பதும் சுதந்திரக் கட்சியின் உறுதியான நிலைப்பாடாகும்.

இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி வேறு நிலைப்பாட்டில் உள்ளது. நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறைமை முற்றாக நீக்கப்பட வேண்டும் என்பதே அவர்களின் நிலைப்பாடாகும். இது சம்பந்தமாக இரு கட்சிகளும் கூடிப் பேசி இறுதி முடிவை எடுப்போம் - என்றார். (5)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்னம்மா தர்மலிங்கம்



காரைநகர், களபூமி, பொன்னாவளையைப் பிறப்பிடமாகவும், திக்கரையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா தர்மலிங்கம் 21.10.2017 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி (ஆசிரியர்) - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னக்குட்டி தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்றவரான தர்மலிங்கம் (ஆங்கில ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், இந்திரா (காரைநகர்), சிவயோகம் (லண்டன்), அம்பிகைபாகன் (லண்டன்), திருச்செல்வம் (கனடா), தவயோகம் (காரைநகர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாலேந்திரா, ஜெயசீலன், பாலேஸ்வரி, திருமகள், கணேசராசா ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, நேசம்மா, கதிரவேற்பிள்ளை, ஆலாலசுந்தரம், தியாகராசா மற்றும் இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி, செல்லையா, கனகசபை, பொன்னம்மா, செல்லம்மா மற்றும் பாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், துசிந்தன், சுகிந்தன், துவாரகன், கரிசன், சஜீவன், ஸ்ரீராம், சக்திராம், ஹரிராம், வினோத், ராம், மோகனதாசன், குலமதி, சிவராஜினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26.10.2017 வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் தில்லை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**திக்கரை, களபூமி,**
**காரைநகர்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**



தோற்றம்
06 . 12 . 1930

மறைவு
22 . 10 . 2017

### திருமதி சரஸ்வதி நாகராசா

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி நாகராசா 22.10.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நாகராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற விமலாதேவி மற்றும் சிவஞானபூபதி, செல்வராணி காலஞ்சென்ற பொன்ராசா மற்றும் ஆனந்தராசா, சிவராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் பவா, சரோசா, ஜெயா ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2017) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கைதீவு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

**உயரப்புலம்,**
**ஆனைக்கோட்டை.**

# புதிய அரசமைப்புத் தேவையேயில்லை

## ஞானசார தேரர் கூறுகிறார்



கொழும்பு, ஒக். 24
அரச சார்பற்ற அமைப்புக்களின் தேவைக்கு ஏற்றாற் போல் இந்த நாட்டுக்குப் புதிய அரசமைப்பைக் கொண்டு வரும் நடவடிக்கைக்கு இடமளிக்கக் கூடாது. அந்தச் சிந்தனையையும் நடவடிக்கையையும் விரட்டியடிக்கப் பட வேண்டும். இவ்வாறு பொதுபல சேனாவின் பொதுச் செயலர் கலகொட அத்தேஞானசார தேரர் அறிவித்துள்ளார்.

'அரசமைப்புத் தொடர்பிலான தலைப்பு அரசியல் மேடைக்குப் பேசு பொருளாக வருவதற்குப் பிரதான காரணம் நாட்டிலுள்ள ஏனைய பிரச்சினைகளை மூடிமறைப்பதற்கே யாகும். இந்த நாட்டில் புதிய அரசமைப்பு எந்தக் காரணம் கொண்டும் நிறைவேற்ற இடமளிக்கக் கூடாது' எனவும் தேரர் குறிப்பிட்டுள்ளார். (5)

# படை பட்டாளத்தோடு 3ஆம் திகதி மகிந்த – மைத்திரி நேரில் பேச்சு



கொழும்பு, ஒக். 24
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான மகிந்த அணிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான சந்திப்பொன்று எதிர் வரும் 3ஆம் திகதி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் அவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெறவுள்ளது.

புதிய அரசமைப்பு, உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் மற்றும் இரு கட்சிகளுக்கு இடையிலான பொது இணக்கப்பாட்டை எட்டுவது தொடர்பில் கலந்துரையாடும் இறுதிச் சந்திப்பாக இது அமையவுள்ளதால் முக்கியத்துவமிக்க சந்திப்பாகக் கருதப்படுகின்றது.

இந்தச் சந்திப்புக்காக மகிந்த அணியினதும், சுதந்திரக் கட்சியினதும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இன்றைய தினம் கடிதம் மூலம் உத்தியோகபூர்வ அழைப்பு சுதந்திரக் கட்சியின் செயற்குழுவால் விடுக்கப்படவுள்ளது.

முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் அரசியல் பரப்புரையை நாடு முழுவதும் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச முன்னெடுத்து வருகின்றார்.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் தேர்விலும் பொதுஜன பெரமுன இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

இந்த நிலையில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வாக்குகள் கணிசமாக வீழ்ச்சியடையும் என்பதாலேயே மீண்டும் மகிந்த அணியுடன் இணக்கப் பேச்சுகளுக்கு சுதந்திரக் கட்சி களமிறங்கியுள்ளது. மைத்திரியின் தலைமைத்துவத்தில் மகிந்த ராஜபக்ச மீண்டும் தமது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க மாட்டார் என்பது பொதுவான கருத்தாகப் பேசப்படுகிறது.

எதிர்வரும் 3ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு இடம்பெறவுள்ள தீர்க்கமான சந்திப்பின் பின்னர் பல அறிவிப்புகள் இருதரப்பிலும் இருந்து வெளியாகும் எனவும் அறியமுடிகின்றது. (5)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை திருமதி ம.சசிகரன்
அவர்களின் தந்தை
**நாகலிங்கம் நாகராஜா**
18.10.2017 அன்று காலமானார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**
**ஆசிரியர் வட்டம்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**அமரர்**
**படைவீரசிங்கம் சேனாதிராசா**
(உரிமையாளர் – ராஜா மருந்துக்கடை, சுன்னாகம்)



அன்னை மடியில்
10.03.1951

வைரவர் அடியில்
24.09.2017

**புன்னகையும் இன்முகமும் புதிராய்ப் போனதுவே**
**மலர்ந்த முகம் மறைந்து மனையாளும் தவித்திடவே!**
**கனவான் நீங்கள் எங்கு சென்றீர்?**
**காத்திருக்க உறவெல்லாம்.**

**விழிசிட்டி, தெல்லிப்பழை.** **மனைவி**

# ஆசிரியையின் கோபத்தால் தீக்கிரையானது புத்தகங்கள்

## அநுராதபுரத்தில் சம்பவம்

கொழும்பு, ஒக். 24
தரம் ஐந்தில் கல்வி பயிலும் மாணவனின் பாடப் புத்தகங்களை பாடசாலையில் வைத்து ஆசிரியை ஒருவர் தீக்கிரையாக்கியுள்ளார்.

வடமத்திய மாகாணத்தின் அநுராதபுரம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

புதிய வகுப்பறைக்கு இடம் மாறிச் சென்ற தினத்தில், மாணவன் பாடசாலைக்கு சமூகமளிக்கவில்லை. ஆசிரியை மாணவன் பாடசாலையில் விட்டுச் சென்ற புத்தகங்களைத் தீயிட்டுக் கொளுத்தியுள்ளார்.

மேற்படி ஆசிரியை நடத்திய தனியார் புலமைப்பரிசில் வகுப்பிற்கு மாணவன் சமூகமளிக்காத கோபத்தினால் ஆசிரியை இவ்வாறு செய்துள்ளதாக, மாணவனின் பெற்றோர் குற்றஞ் சுமத்தியுள்ளனர்.

ஆசிரியையின் தனியார் வகுப்பில் கல்வி கற்காத 21 மாணவர்களைப் பல்வேறு வழிகளில் இந்த ஆசிரியை துன்புறுத்தியுள்ளதாகவும் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது. (5)

# அதிகரிக்கின்றது டெங்குத் தொற்று

## அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி எச்சரிக்கை

அம்பாறை.ஒக்.24
கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டில் டெங்கு தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 64 சதவீதமாக அதிகரித்துள்ளது. இந்த ஆண்டு ஜனவரி தொடக்கம் இது வரை 59 ஆயிரத்து 760 நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர். 300 பேர் உயிரிழந்துள்ளனர்.
இவ்வாறு சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எல். அலாவுதீன் தெரிவித்தார்.
டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்றது. அதில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். அதில் கருத்துத் தெரிவித்த போதே சுகாதார வைத்திய அதிகாரி இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
கொழும்பு , கம்பகா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய மேல் மாகாணத்திலே 47 சதவீதமானோர் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். 23 ஆயிரத்து 460 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.
டெங்குத் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்புக் காரணமாக உயிரிழப்புக்களும் அதிகரித்துள்ளன. சென்ற ஆண்டு 12 மாதங்களிலும் மொத்தம் 55 ஆயிரத்து 150 டெங்குத் தொற்றுக்குள்ளானோர் இனங் காணப்பட்டுள்ளனர். 97 உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளன. இந்த ஆண்டு நிறைவடைவதற்குள் 59 ஆயிரத்து 760 தொற்றுக்குள்ளானோர் இனங்காணப்பட்டனர். 300 உயிரிழப்புக்கள் இடம்பெற்றுள்ளன என்று தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு கூறுகின்றது.
மலேரியா மற்றும் யானைக்கால் நோய் அற்ற நாடு என உலக சுகாதார அமைப்பால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழை பெற்றுள்ள எமது நாடு, டெங்கு நோய் அற்ற சான்றிதழையும் பெற்றுக்கொள்ளவேண்டும். அதற்கான சகல முயற்சிகளையும் சுகாதார அமைச்சும் சுகாதாரப் பிரிவும் முன்னெடுத்து வருகின்றன. விழிப்புணர்வு நிகழ்வுகள் தேசிய ரீதியாக முன்னெடுக்கப்படுகின்றன. அவற்றின் முக்கிய பங்குதாரர்களாக பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும் உள்ளனர்.
டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்துவதாக இருந்தால் பாடசாலை மட்டத்தில் செயற்பட வேண்டும். அதிபர்கள், ஆசிரியர்கள் ஊடாக மாணவர்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டும் - என்றார்.
(ற,ரி4)

## தூதுவர்கள் நியமனம்

கொழும்பு.ஒக்.24
பன்னாடுகளின் ஐந்து தூதுவர்கள் தமது நியமனக் கடிதங்களை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்றுக் கையளித்தனர்.
அரசதலைவர் செயலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அரசதலைவரின் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ அயலுறவுச் செயலர் பிரசாத் காரியவசம் ஆகியோர் கலந்துகொண்டனர்.
கனடா, ரஷ்யா, மாலைதீவு, பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மற்றும் எகிப்து ஆகிய நாடுகளின் தூதுவர்களே நியமனக் கடிதங்களைக் கையளித்தனர்.
இலங்கைக்கும் புதிய தூதுவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடுகளுக்குமிடையிலான நெருங்கிய இருதரப்பு உறவுகளை நினைவுகூர்ந்த அரசதலைவர், வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலாத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு கூட்டுறவை மேலும் பலப்படுத்த புதிய தூதுவர்கள் அர்ப்பணிப்புடன் உழைப்பார்கள் என நம்பிக்கை வெளியிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.
(ற,ரி4)

## வாகன விபத்தில் ஒருவர் காயம்



வவுனியா.ஒக்.24
வவுனியா ஓமந்தை இறம்பைக்குளத்தில் நேற்று இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.
ஏ-9 வீதியூடாக வவுனியா நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனம் ஓமந்தை இறம்பைக்குளம் பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து பனை மரத்துடன் மோதி தடம்புரண்டது. விபத்தில் சாரதி காயமடைந்தார்.
விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஓமந்தைப் பொலிஸார் மேற்கொண்டனர்.
(ற,ரி4)

## யால சரணாலயத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஒக்.24
யால சரணாலயத்தில் சுற்றுலாப் பயணிகளுக்குப் போக்குவரத்து வசதிகளை வழங்கும் ஜீப் வண்டி உரிமையாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
கடந்த செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் இந்தச் சரணாலயம் மூடப்பட்டுள்ளது. அதைத் திறக்கக் கோரியே இந்தப் போராட்டத்தை நடத்தினர் எனத் தெரிவிக்கப்பட்டது.
சபாரி ஜீப் வண்டி உரிமையாளர்கள் 300 பேர் அளவில் வாகனங்களுடன் நின்று சரணாலய பிரதான நுழைவாயில் அருகிலேயே ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
போராட்டத்தையடுத்து மூடப்பட்டிருந்த சரணாலயம் மீண்டும் திறக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ற ரி5)


## புதையல் தோண்டியவர்கள் நீதிமன்றில் முன்னிலை

மட்டக்களப்பு.ஒக்.24
ஏறாவூர் தலவாய்ப் பகுதியில் புதையல் தேடும் நோக்கில், நிலத்தைத் தோண்டினர் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட ஐவர் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப் பட்டனர்.
ஏறாவூர் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய மேர்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
புதையல் தோண்டப் பயன்படுத்திய உபகரணங்கள், மற்றும் கப்ரக வாகனம் ஒன்றும் பொலிஸாரால் மீட்கப்பட்டன. கைதுசெய்யப்பட்டவர்கள் ஊறணி, கடுவலை, மொனராகலை, ஹேம்மாதகம ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என கூறப்படுகின்றது.
சம்பவம்தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.
(ற-ரி5)

## மருத்துவபீட மாணவன் ஜெயலத் நேற்றுப் பிணையில் விடுதலை

கொழும்பு.ஒக்.24
மருத்துவ பீட மாணவர் செயற்பாட்டுக்குக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் ரயன் ஜயலத் பிணையில் விடுவிக்கப்பட்டார்.
அவர் நேற்று கொழும்பு மேல் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.
கடந்த ஜீன் மாதம் 21ஆம் திகதி சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக சுகாதார அமைச்சுக்கு முன் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. சுகாதார அமைச்சுக்குள் அத்துமீறி நுழைந்து அங்குள்ள சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தார் என ஜெயலத் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.
இவர் சட்டத்தரணியின் ஊடாக ஆகஸ்ட் மாதம் 18ஆம் திகதி நீதிமன்றில் சரணடைந்த போது கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.
(ற-ரி5)

## வீதியைச் சீரமைக்கக் கோரி கண்டியில் கதவடைப்பு



கண்டி.ஒக்.24
கண்டி புஸ்ஸல்லாவ நகரில் வீதியைச் சீரமைக்கக் கோரி நேற்றுக் கதவடைப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
கொத்மலை பிரதேச சபைக்குட்பட்ட பெரட்டாசித் தோட்டத்துக்குச் செல்லும் பாதை 30 வருடங்களாக சீரமைக்கப்படவில்லை என்று அதற்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.
இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக, நுவரெலியா கண்டி வீதிப் போக்குவரத்துப் பாதிப்புக்குள்ளானது எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி4)


## பிரசன்னவுக்கு பிணை

களுத்துறை.ஒக்.24
மேல் மாகாண சபை உறுப்பினர் பிரசன்ன சஞ்ஜீவ நேற்றுப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். களுத்துறை நீதிவான் நீதிமன்றம் நேற்றுப் பிணையில்செல்வதற்கான உத்தரவைப் பிறப்பித்தது எனத் தெரிவிக்கப்பட்டது.
மருத்துவர்களின் கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்திய சம்பவம் தொடர்பில் இவர் கடந்த 21 ஆம் திகதி அளுத்கமப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.
மின்சாரத் தாக்குதலுக்கு இலக்கான இளைஞர் ஒருவரை வைத்தியசாலைக்கு அழைத்து வந்த வேளை, அவருக்கு சிகிச்சை அளிக்கவில்லை எனக் கூறி, மாகாண சபை உறுப்பினர் உள்ளிட்ட குழுவினர் மருத்துவர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்தனர் எனக் கூறப்படுகின்றது. (ற-ரி5)

## யாழ்ப்பாணத்துக்கான தொடருந்து நாவற்குளியுடன் இடைநிறுத்தம்

கொழும்பு.ஒக்.24
கொழும்பு காங்கேசன்துறை வரையான தொடருந்து சேவை நேற்று முதல் நாவற்குளி தொடருந்து நிலையத்துடன் இடைநிறுத்தப்பட்டது என தொடருந்துத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.
நாவற்குளியில் உள்ள தொடருந்துப் பாலத்தில் உள்ள திருத்தப் பணிகள் இடம்பெறுவதாலேயே காங்கேசன்துறைக்கான தொடருந்து சேவை நாவற்குளியுடன் இடை நிறுத்தப் பட்டது.
தொடருந்து சேவை நேற்று முதல் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை, 5 நாள்கள், இடைநிறுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.
இந்தத் தினங்களில் தொடருந்து முற்பதிவு செய்த பயணிகள் சிறப்பு பேருந்து மூலமாக நாவற்குளி தொடருந்து நிலையத்துக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என யாழ். தொடருந்துத் திணைக்கள உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.
இந்தக்காலப்பகுதியில் கொழும்பில் இருந்து நாவற்குழி வரை மாத்திரமேதொடருந்து சேவை இடம்பெறும் எனவும் தொடருந்துசேவைக் கண்காணிப்பாளர் தெரிவித்தார். (ற-ரி5)


வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
ஜூன் மற்றும் ஜூலை
மாதங்களில் அபிவிருத்தி லொத்தர் உருவாக்கிய
அதிர்ஷ்டத்தின்
வெற்றியாளர்கள்
SATURDAY FORTUNE
சனிக்கிழமை அதிர்ஷ்டம் 2899
ரூ. 69,645,532/-
டீ.ஆர். ராஜதுரை
லுணுவில
சனிக்கிழமை அதிர்ஷ்டம் 2893
ரூ. 1,000,000/-
திரு. ஆர்.எஸ்.சத்துரங்க
திவுலப்பிட்டிய
சனிக்கிழமை அதிர்ஷ்டம் 2894
ரூ. 1,000,000/-
திருமதி. எம்.எம்.சுனேத்திரா
கலேவல
சனிக்கிழமை அதிர்ஷ்டம் 2896
ரூ. 1,000,000/-
திரு. யு.ஜி.எஸ்.புஸ்பகுமார
அக்மீமன
சனிக்கிழமை அதிர்ஷ்டம் 2897
ரூ. 1,000,000/-
திரு. பீ.கே.எஸ். குமார
தொம்பே
சனிக்கிழமை அதிர்ஷ்டம் 2898
ரூ. 1,000,000/-
திரு. கே. ரட்ணசிறி
பரகஸ்தொட்ட
சனிக்கிழமை அதிர்ஷ்டம் 2902
ரூ. 1,000,000/-
திரு. ஜே.கே.எச்.என்.ஜயசுந்தர
கடவத்தை
சனிக்கிழமை அதிர்ஷ்டம் 2903
ரூ. 1,000,000/-
திருமதி. டபிள்யு.ஏ.ஐ.லொக்குமெனிக்கே
மாத்தளை
சனிக்கிழமை அதிர்ஷ்டம் 2904
ரூ. 1,000,000/-
திருமதி. ஈ.கே.சோமலதா
ஹம்பாந்தோட்ட
சனிக்கிழமை அதிர்ஷ்டம் 2905
ரூ. 1,000,000/-
திரு. கே.ஜி.ஜி.திலகரட்ண
கேகாலை
சனிக்கிழமை அதிர்ஷ்டம் 2907
ரூ. 1,000,000/-
திரு. எம்.ஜி.எஸ்.நிரோஷன்
காலி
சனிக்கிழமை அதிர்ஷ்டம் 2908
ரூ. 1,000,000/-
திருமதி. எம்.ஈ.ஏ.குமாரி
படபொல
சனிக்கிழமை அதிர்ஷ்டம் 2909
ரூ. 1,000,000/-
திரு. பி.கே. மெண்டிஸ்
தலவத்துகொட
சனிக்கிழமை அதிர்ஷ்டம் 2911
ரூ. 1,000,000/-
திரு. ஜி.எம்.சமிந்த
மாத்தறை
சனிக்கிழமை அதிர்ஷ்டம் 2914
ரூ. 1,000,000/-
திரு. கே.ஏ.குமாரசிறி
அத்துருகிரிய
SUPER BALL
சுப்பர் போல்
சுப்பர் போல் 632
ரூ. 55,123,691/-
திரு. பீ.ஜி.ஆர்.என். ஜயசிங்ஹ
வரல்கம
சுப்பர் போல் 642
ரூ. 1,000,000/-
திருமதி. ஐ.சீ.பீரிஸ்
பாணந்துறை
சுப்பர் போல் 658
ரூ. 1,000,000/-
திரு. ஆர்.ஏ.கே.குமார
புளூல்வெல்ல
சுப்பர் போல் 663
ரூ. 1,000,000/-
திரு. டபிள்யு.எம்.பீ.கே.விக்கிரமசிங்ஹ
கொலபிஸ்ஸ
சுப்பர் போல் 667
ரூ. 1,000,000/-
திரு. பீ.டி.பி.வீரசிங்ஹ
தொடங்கஸ்லந்த
சுப்பர் போல் 668
ரூ. 1,000,000/-
திரு. கே.டபிள்யு.பெர்னாண்டோ
பாணந்துறை
சுப்பர் போல் 669
ரூ. 1,000,000/-
திரு. பி.ஏ.ஆரியவன்ஸ
திஸ்ஸமஹராம
சுப்பர் போல் 670
ரூ. 1,000,000/-
திரு. எஸ்.சிவபாக்கியம்
கான்தவெலை
சுப்பர் போல் 671
ரூ. 1,000,000/-
திரு. எல்.டி.எல்.லகிரு
பொல்கஸ்ஸோவிற்ற
சுப்பர் போல் 673
ரூ. 1,000,000/-
திருமதி. டி.எச்.டி.மல்காந்தி
நாகோல்லாகம
சுப்பர் போல் 674
ரூ. 1,000,000/-
திரு. கே.ஜி.ஆர்.டபிள்யு.கமகே
அத்திலிவெவ
சுப்பர் போல் 675
ரூ. 1,000,000/-
திரு. பி.தத்தீஸன்
கல்முனை
சுப்பர் போல் 676
ரூ. 1,000,000/-
திரு. டபிள்யு.எம்.ஜி.பண்டார
கண்டி
சுப்பர் போல் 679
ரூ. 1,000,000/-
திரு. டபிள்யு.ஜி.சோமதிலக
அவிசாவளை
சுப்பர் போல் 680
ரூ. 1,000,000/-
திரு. ஏ.எஸ்.பெர்னாண்டோ
கணேமுல்ல
சுப்பர் போல் 681
ரூ. 1,000,000/-
திரு. எஸ்.ரமேஷ்
உந்துகொட
சுப்பர் போல் 683
ரூ. 1,000,000/-
திரு. டி.ஜி.ஏ.சி.குமார
இமதுவ
சுப்பர் போல் 687
ரூ. 1,000,000/-
திரு. டபிள்யு.டி.ஓ.பெரேரா
மொனராகல
ஜயோதா 1352
ரூ. 20,088,367/-
திரு. ஈ.எம்.கே.ஏக்கநாயக்க
கெலிஓயா
ஜயோதா 1381
ரூ. 1,000,000/-
திரு. ஆர்.ஆனந்தகுமார்
கொழும்பு 14
சுப்பர் பரிசு




HOLMES POLLARD & STOTT

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# ஆபத்தான அமைதி!

யாழ்ப்பாணத்தில் மீண்டும் ஒரு கொலை நிகழ்ந்துள்ளது. துப்பாக்கியால் சுட்டு இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். ஏற்கனவே இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுக் கொலைகள் தீர்க்கப்படாமல் இருக்கும் நிலையில் மற்றொரு கொலை இடம்பெற்றுள்ளது.

இந்தக் கொலையை யார் செய்தார்கள் என்ற மர்மம் நேற்று இரவு வரையில் துலங்கவில்லை. போதைக் கடத்தல், சட்டத்துக்குப் புறம்பான செயல்கள் என்பவற்றுடன் தொடர்புபடுத்தி பல்வேறு ஊகங்களும் வதந்திகளும் உலாவுகின்றன. ஆனால், சம்பவத்துக்கான காரணமோ குற்றவாளிகள் தொடர்பான தகவல்களோ திட்டவட்டமாக வெளிவரவில்லை.

படைகளின் புலனாய்வுக் குழுக்கள் இந்தக் கொலையுடன் தொடர்புபட்டுள்ளன என்கிற ஊகமும் கூட உலாவுகின்றது. கொலையை நேரில் கண்ட சாட்சியான மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற நபர், சுட்டவர்களில் ஒருவரைத் தான் பொலிஸ் நிலையங்களில் கண்டிருக்கிறார் என்றும் அவர் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர் என்றும் பலரிடம் கூறியிருக்கிறார். ஆனால், அது பற்றி விசாரணை நடப்பதாகவோ சந்தேகநபர்கள் யாராவது இனங்காணப்பட்டிருப்பதாகவோ எந்தப் பகிரங்கத் தகவல்களும் இதுவரையில் கிடையாது.

இந்தச் சமயத்தில்தான் ஒரு வருடத்துக்கு முன்னர் நடந்த சம்பவம் நினைவில் ஊசலாடுகிறது. பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்ட நிலையில், அவர்கள் இருவரும் விபத்தில் உயிரிழந்தார்கள் என்றே பொலிஸார் ஆரம்பத்தில் தகவல்களை வெளியிட்டார்கள்.

இப்போது மணியந்தோட்டக் கொலையில் புலனாய்வாளர்களின் தொடர்பு குறித்து அரசல் புரசலாகக் கதைகள் அடிபடும் நிலையில், பல்கலைக்கழக மாணவர்கள் கொலையின் போது பொலிஸார் நடந்துகொண்ட விதத்தைச் சீர்தூக்கிப் பார்ப்பது தவிர்க்க முடியாதது.

அத்தோடு எங்கேயோ இடிக்கும் மற்றொரு விடயம், நல்லூரில் நீதிபதி இளஞ்செழியனின் மெய்ப் பாதுகாவலர் சுட்டுக்கொல்லப்பட்டபோதும், கொக்குவிலில் பொலிஸார் இருவர் வாளால் வெட்டப்பட்டபோதும் குற்றவாளிகளைப் பிடிப்பதில் பொலிஸார் காட்டிய வேகமும் அவசரமும் இந்தக் கொலையில் ஏன் இல்லை என்பது தான்.

எந்தக் கொலையாக இருந்தாலும் சட்டம் ஒழுங்குக் காவலர்கள் அதனை ஒரே மாதிரியாகத்தானே அணுகியிருக்க வேண்டும். அப்படியில்லாமல் சாட்சிகள் தெளிவான தகவல்களை வழங்கினால்தான் சந்தேகநபர்களை இனங்கண்டு நடவடிக்கை எடுக்கமுடியும் என்பது போன்று பொலிஸார் இந்த வழக்கில் நடந்துகொள்வது நியாயமான சந்தேகங்களை எழுப்புகிறது.

அரியாலைச் சம்பவத்தில் கொல்லப்பட்ட இளைஞன் மற்றும் அவருடன் கூடச் சென்றவர் என இருவருமே குற்றப் பின்னணி கொண்டவர்கள் அல்லர் என்கின்றன தகவல்கள். அவர்கள் மீது பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளோ, நீதிமன்றங்களில் வழக்குகளோ இல்லை. அப்படியிருக்கும்போது அவர்களில் ஒருவர் கொல்லப்பட்டதும், அவர்கள் சட்டத்துக்குப் புறம்பான பல்வேறு சம்பவங்களுடன் தொடர்புபட்டிருக்கிறார்கள் என்கிற கதைகள் பரப்பப்படுவதன் பின்னணியும் கவனிக்கப்பட வேண்டியதே!

குற்றங்களுடன் தொடர்புபட்டவர்கள் என்பதால் உயிர் வாழத் தகுதியற்றவர்கள் என்கிற மறைமுகமான நியாயப்படுத்தல் இதற்கூடாக சமூகத்தின் ஏனைய கூறுகளுக்குக் கடத்தப்படுகின்றதா என்ற கேள்வியைத் தவிர்க்க முடியவில்லை.

ஏனெனில் கொலை நிகழ்ந்து இரண்டு நாள்கள் கடந்த பின்னரும்கூட மனித உரிமை அமைப்புகளோ, பொது அமைப்புகளோ எதுவும் இந்தக் கொலை தொடர்பில் மூச்சுக்கூட விடவில்லை. அரசியல் கட்சிகளும் வாய்மூடி மௌனிகளாகவே இருக்கின்றன. குற்றங்களோடு தொடர்புபட்டவர்கள் என்றால் கேட்டுக் கேள்வியின்றிக் கொல்லப்படலாம் என்பதுதான் நியாயம் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா? இது மிக மிக ஆபத்தான போக்கு. அதற்கு எதிராக ஒட்டுமொத்தச் சமூகமும் கிளர்ந்து எழவேண்டும்.

---

**‘அகதிகள்’ என்ற அடைமொழி யுடன் வாழ்கின்ற பல்லின மக்களின் வாழ்வு என்பது வார்த்தைகளினால் சொல்ல முடியாதது. அது, துன்பம், சோகம், வேதனை, உயிரிழப்பு, சொத்துக்கள் இழப்பு, இருப்பிடமின்றி அலைதல், உறவுகளை இழத்தல், அந்நிய வாழ்வு போன்றவற்றோடு ஆழமாய்க் கலந்தது.**

# அகதிகள் உருவாக்கம் எழுதப்படாத விதியா?

மு.ஈழத்தமிழ்மணி

உலகம் முழுவதிலும் மனிதகுலம் அமைதியாக வாழ்ந்து வருகின்றதா? மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனநாயக அரசுகளாக இருந்தாலும் சரி, மன்னராட்சி அரசுகளாக இருந்தாலும் சரி, சர்வாதிகார ஆட்சிகளாக இருந்தாலும் சரி மக்கள் சகல உரிமைகளையும் பெற்று வாழ்கின்றனரா? பஞ்சம், பசி, பட்டினியின்றி உலக மக்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பதை எவராலும் ஏற்றுக் கொள்ள முடியுமா?

நாட்டுக்கு நாடு ஏற்படுகின்ற போர், உள்நாட்டுப் போர்கள், இனத்தின் மேலான அரசின் ஒடுக்குமுறைகள், மதப் பிணக்குகள் எனப் பல்வேறு பிரச்சினைகள் உலகத்தின் கண்முன்னால் தினமும் நடந்தேறி வருகின்றன. சொந்த வீட்டில், சொந்த நாட்டில் இருக்கவோ வாழவோ முடியாது அந்தந்த நாட்டு அரசுகள், இராணுவ ஆட்சிகளினால ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற அடக்குமுறைகள், கொடிய போர்கள் காரணமாக தமது வாழ்விடங்களை விட்டுவிட்டு வெளியேறி ஏதிலிகளாக வாழ முற்படுகின்ற மக்களின் அவலங்களுக்கு முடிவு தெரியாது தவிக்கின்ற பரிதாப நிலையிலேயே உலகப்பந்து சுழன்று கொண்டிருக்கின்றது.





### அகதியாதல் என்பது கொடிதிலும் கொடிது

‘அகதிகள்’ என்ற அடைமொழியுடன் வாழ்கின்ற பல்லின மக்களின் வாழ்வு என்பது வார்த்தைகளினால் சொல்ல முடியாதது. துன்பம், சோகம், வேதனை, உயிரிழப்பு, சொத்துக்கள் இழப்பு, இருப்பிடமின்றி அலைதல், உறவுகளை இழத்தல், அந்நிய வாழ்வு போன்றவற்றோடு ஆழமாய்க் கலந்தது. பிறரிடம் அகதியானவன் கையேந்த வேண்டும். அல்லது சொந்த நாட்டு அரசிடமாவது ஒரு நேர உணவுக்காவது கையேந்த வேண்டும். 21ஆம் நூற்றாண்டிலும் இத்தகைய கொடுமைகளையெல்லாம் பல லட்சக்கணக்கானவர்கள் அனுபவித்துக்கொண்டுதான் உள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் 2015ஆம் ஆண்டு கருத்துக் கணிப்பின்படி உலக மக்கள் தொகையில் 65.3 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். 2015, 2016 ஆம் ஆண்டுகளில் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து (ஈராக், சிரியா, துருக்கி) வெளியேறிய மக்களும் கடந்த சில வாரங்களாக மியன்மார் நாட்டிலிருந்து தினந்தினம் வெளியேறிக் கொண்டிருக்கின்ற மக்களும் இந்த கருத்துக் கணிப்பில் இல்லை. அவர்களையும் சேர்த்தால் இந்த எண்ணிக்கை பல்கிப்பெருகி தலை சுற்ற வைக்கும். நூற்றாண்டுக்கும் மேலாக அகதிகள் பிரச்சினை எட்டிச் செல்வதற்குப் பற்பல காரணங்கள் உள்ளன. அகதிகள் என்ற கோட்பாடுகள் சில நாடுகளில் இறுக்கமாகக் கைக்கொள்ளப்படுவதனால் சில இனங்கள் அரசிழந்து, நாடிழந்து, மொழியிழந்து பிற நாடுகளில் ஏதிலிகளாக தஞ்சமடைகின்ற அவல நிலைக்கு உட்படுகின்றன.

### அகதிகளின் தோற்றுவாயாக இன ஒடுக்கு முறைகள்

ஓர் இனம் மட்டுமே சகல உரிமைகளோடு வாழவேண்டும். ஏனைய இனமக்கள் அல்லது குழுமங்கள் தங்கள் ஆட்சிக்குக் கீழ் அடிமையாக வாழ்ந்து சாக வேண்டும் என்ற எண்ணப்பாங்குடன் இன்று ஏராளமான அரசுகள் செயற்பட்டு வருகின்றன. உரிமைக்காகப் போராடினால் இராணுவ நடவடிக்கை மூலம் ஒடுக்கப்பட்டு அழிக்கப்படுவார்கள். இதனால் உயிருக்குப் பாதுகாப்புக் கருதி பிற நாடுகளுக்கு அகதிகளாக மக்கள் தப்பி ஓடினார்கள். ஓடிக்கொண்டிருக்கிறார்கள். இதனாலேதான் இன்று உலகளாவிய பிரச்சினையாக அகதிகள் பிரச்சினை பூதாரமாகியுள்ளது. ஆசிய, ஆபிரிக்க, ஐரோப்பிய மற்றும் சில முஸ்லிம் நாடுகளில் அகதிகள் தஞ்சமடைந்துள்ளதுடன் அவர்களின் பிரச்சினைகள் அந்தந்த நாடுகளுக்கு பெரும் தலையிடியாகவும் மாறியிருக்கின்றது. அகதிகள் என்பவர்கள் இன்று உலகத்தில் சாதாரண ஏழை மக்களைவிட கீழான நிலையிலேயே கணிக்கப்படுகின்றனர். அடிப்படை வசதிகள் இல்லாது வாழ்கின்றதொரு நரக வாழ்க்கையே அவர்களுக்குத் தஞ்சமாகிவிட்டது.

அகதிகள் பிரச்சினை என்பது இரண்டாம் உலகப் போருடன் பலஸ்தீனம், பிரிட்டனின் காலணித்துவத்தின் கீழ் வந்ததில் இருந்து மத்திய கிழக்கில் ஆரம்பித்திருந்தது. யூத தேசத்தை நிறுவுவதற்கும் பலஸ்தீன மக்களின் நிலங்களை அபகரிப்பதற்கும் பலஸ்தீனியர்களைப் படு



கொலை செய்கின்ற நிகழ்ச்சி நிரலுடன் ஆரம்பமானதே அகதிகள் உருவாகிய வரலாறாகும்.

ஸியோனிஸ்டுகள் தமது கொலை வெறியாட்டத்தில் ஈடுபட்டு ஒன்றன் பின் ஒன்றாக படுகொலைகளைக் கட்டவிழ்த்துவிட பலஸ்தீனியர்கள் பாதுகாப்புத் தேடி வீடுகள், இடங்களையும் விட்டு ஜோர்தான், லெபனான், சிரியா மற்றும் எகிப்து நாடுகளில் தஞ்சமடையத் தொடங்கினர். இதையடுத்து 1948ஆம் ஆண்டு யூதர்களுக்கான நாடு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. பலஸ்தீனிய மக்களிடத்தில் ஆரம்பமான பேரவலமானது ஈழத் தமிழர்கள் வரை நீடித்து தற்போது மியன்மார் முஸ்லிம்கள் வரை அது வியாபித்துள்ளது. லட்சக்கணக்கான சிறுபான்மையினமான ரொஹிங்ய முஸ்லிம் மக்களை இராணுவநடவடிக்கை மூலம் மியன்மார் அரசு கொன்றொழிக்கிறது. பலஸ்தீன மக்களின்பிரச்சினை போல்ரொஹிங்ய முஸ்லிம்களின் பிரச்சினையை ஒப்பிட்டுப் பார்க்கக்கூடியதாக உள்ளது.

**அகதிகள் உருவாக்கத்தில் ஆயுதக்குழுக்களின் பங்கு**

அகதிகள் உருவாக்கத்தில் ஆயுதக் குழுக்களின் பங்கு தற்போது மிக முக்கியமானதாக அமைந்துவிட்டது. ஈராக், சிரிய நாடுகளைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனிநாடு என்று அறிவித்திருந்த ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் அடாவடித்தனங்களாலும், அந்த அமைப்புக்கு எதிராக ரஷ்யா மற்றும் அமெரிக்காவின் தலைமையில் உலக நாடுகள் மேற்கொண்ட கூட்டுப் போர்களாலும் மில்லியன் கணக்கானவர்கள் மத்திய கிழக்கில் இருந்து கடந்த மூன்று வருடங்களுக்குள் இடம்பெயர்ந்துள்ளனர். ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்து ஈராக் முழுவதுமாக மீட்கப்பட்டுள்ளது. சிரியாவின் 90 சதவீதமாக பகுதிகள் மீட்கப்பட்டுள்ளன. இதனால் அடுத்தடுத்த ஆண்டுகளில் மத்திய கிழக்கில் இருந்து உருவாகும் அகதிகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறையும். என்றாலும் ஏனைய பகுதிகளில் நடைபெறும் போர் அல்லது ஏனைய பகுதிகளில் நிலவும் போர்ச்சூழல் அகதிகளின் உருவாக்கத்துக்கு அதிகளவான வாய்ப்புக்களை வழங்கக்கூடிய சாத்தியக்கூறை வெளிப்படுத்தியுள்ளன. ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பை விடுத்து ஆப்கானிஸ்தானில் செயற்படும் தலிபான் உள்ளிட்ட அமைப்பு, சோமாலியாவின் இயங்கும் அல்சபாப் உள்ளிட்ட ஆயுதக் குழுக்களும் அகதிகளின் தோற்றத்துக்கு எதிர்காலத்தில் ஆணிவேராக இருக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் மிகையாகவே உள்ளன. ஆப்கானிஸ்தான், சோமாலியா ஆகிய நாடுகளில் அண்மையில் நூற்றுக் கணக்கானவர்களை காவு வாங்கிய இரட்டைக் குண்டுத் தாக்குதல்கள் இதற்கு தக்கசான்று.

**அகதி வாழ்வில் ஈழத் தமிழர்கள்**

இலங்கையில் ஈழத் தமிழ் மக்கள் மீது இலங்கை இராணுவம் நடத்திய 30 வருடகாலப் போரில் லட்சக்கணக்கான தமிழ் மக்கள் நாட்டை விட்டு உயிருக்குப் பாதுகாப்புத் தேடி இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று அகதி வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். இந்தியாவின் தமிழகத்தில் மட்டும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ஈழத் தமிழர்கள் பத்தாண்டுகளுக்கு மேலாக அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

வன்னியில் இறுதிப் போர் முடிந்த பின்னர் இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான தமிழ்க் குடும்பங்கள் பல வருடங்களாகியும் சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாமல் இன்றும் பிற இடங்களில் அகதி வாழ்க்கை வாழ்கின்றனர். ஈழத் தமிழ் மக்களை அகதிகளாக்கிய வரலாற்றை ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியே 1985ஆம் ஆண்டு காலத்தில் கிழக்கு மாகாணத்தில் ஆரம்பிந்திருந்தது. தமிழ் மக்களை சொந்த வசிப்பிடங்களிலிருந்து இராணுவநடவடிக்கை மூலம் வெளியேற்றி படைமுகாம்களை அமைத்துக் கொண்டது. கிழக்கு மாகாணத்தில் மட்டுமன்றி வடக்கு மாகாணத்தில் தமிழர்களின் பாரம்பரிய நிலங்களை படையினர் அபகரித்தது மட்டுமன்றி

> வன்னியில் இறுதிப் போர் முடிந்த பின்னர் இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான தமிழ்க் குடும்பங்கள் பல வருடங்களாகியும் சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாமல் இன்றும் பிற இடங்களில் அகதி வாழ்க்கை வாழ்கின்றனர். ஈழத் தமிழ் மக்களை அகதிகளாக்கிய வரலாற்றை ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியே 1985ஆம் ஆண்டுகாலத்தில் கிழக்கு மாகாணத்தில் ஆரம்பிந்திருந்தது. தமிழ் மக்களை சொந்த வசிப்பிடங்களிலிருந்து இராணுவ நடவடிக்கை மூலம் வெளியேற்றி படைமுகாம்களை அமைத்துக் கொண்டது.

ஐக்கிய தேசியக் கட்சி அரசு, சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசு, மகிந்த ராஜபக்சவின் கொடிய ஆட்சிகள் தமிழர்களை விரட்டி யடித்து அவர்களது நிலங்களில் தென்னிலங்கையிலுள்ள சிங்கள மக்களை குடியேற்றியிருந்தனர், குடியேற்றிக் கொண்டுமிருக்கின்றனர். சொந்த மண்ணில் இருந்து விரட்டப்பட்ட தமிழ் மக்கள் போர் முடிவடைந்த பின்னரும் சொந்த நாட்டில் அகதிகளாகவே வாழ்ந்துவருகின்றனர்.

**அகதிகள் உருவாக்கம் எழுதப்படாத விதியே?**

உலகத்தில் உள்ள 65 மில்லியன் மக்களின் அகதி வாழ்க்கைக்கு எப்போது முடிவு கிடைக்கும். அகதிகள் வரலாறுகளுக்கு பின்னணியாக அன்றும் இன்றும் ரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் உள்ளிட்ட வல்லரசு நாடுகள் இருந்துள்ளன. ஈழத் தமிழர்கள் அதிகளாக்கப்பட்டதற்குப் பின்னணியிலும் ஏகப்பட்ட நாடுகள் உள்ளன. உலகத்தில் ஏழ்மையும் வறுமையும் எப்போதுமே ஒழிக்க முடியாதது போல் அகதிகள் உருவாக்கப்படுவதும் தவிர்க்க முடியாததுமாகும். இதுவே எழுதப்படாத விதியாகும்.






## பஸ் நிலைய வளாகத்தில் இடம்பெறும் விபத்துக்களைத் தடுக்க உதவுவீர்களா?

யாழ்ப்பாண மாவட்டத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் சாவகச்சேரியும் ஒன்றாகும்.

அதுபோல சாவகச்சேரி பேருந்து நிலையமும் முக்கியத்துவம் மிக்க இடமாகும்.

இது சந்தைக்கு முன்பாக அமைந்துள்ளது. இந்த பேருந்து நிலையத்தை பல்லாயிரக்கணக்கான பயணிகள் தினமும் பயன்படுத்து கின்றனர். இதனால் இந்தப் பகுதி சனநெரிசலாக உள்ளது.

மேற்குப் புறத்தில் இருந்தும் கிழக்குப் புறத்திலிருந்தும் பல வாகனங்கள் வேகமாக வந்து பேருந்து நிலையத்தை அடைவதால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. சில விபத்துக்களும் ஏற்பட்டுள்ளன. இ.போ.ச. பேருந்துகளும் , தனியார் பேருந்துகளும் மாத்திரமே பேருந்து நிலையத்துக்குள் உள்நுழைய வேண்டிய தேவை உள்ளது. ஆனால் கண்டபடி மோட்டார் சைக்கிள், டிப்பர், உள்ளிட்ட ஏனைய வாகனங் களும் பேருந்து நிலையத்துக்குள் நுழைக்கின்றன. இதனாலும் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புண்டு. பயணிகளும் பற்பல அசௌகரிங்களைச் சந்திக்கிறார்கள். யாழ்ப்பாணப் பேருந்து நிலையத்தில் உள்ளது போன்று சாவகச்சேரி பேருந்து நிலையத்துக்கும் பாதுகாப்பு வேலி அமைப்பதுடன் ஒரு பாதுகாப்பு உத்தியோகத்தரையும் நியமித்து பஸ் நிலையத்தில் இ.போ.ச. பேருந்து, தனியார் பேருந்து போன்றவற்றை அனுமதித்து ஏனைய வாகனங்களை உள்நுழைவதைத் தடை செய்ய வேண்டும்.

அத்துடன் பேருந்துநிலையத்தில் நீரில்லாத கிணறு ஒன்று உள்ளது. அதனால் சிறு பிள்ளைக்கும் வயோதிபர்களுக்கும் ஆபத்துண்டு. எனவே அதையும் மூடிவிட்டு அல்லது அதற்கு அருகில் பாதுகாப்பு வேலியை அமைத்து பயணிகளின் சிறப்பான போக்குவரத்துக்கு அதிகாரிகள் உரியநடவடிக்கை எடுப்பார்களா?

த.யோகராசா,
சாவகச்சேரி.

# அமெரிக்காவின் முன்னாள் அதிபர்கள் ஒரே மேடையில்

வொஷிங்டன், ஒக். 24
புயல்களால்பாதித்தமக்களுக்கு நிதி திரட்டுவதற்காக அமெரிக்காவின் முன்னாள் அதிபர்களான ஒபாமா, ஜோர்ஜ்டபிள்யுபுஷ், பில் கிளிண்டன், ஜோர்ஜ்எச். டபிள்யு. புஷ், ஜிம்மி கார்ட்டர் ஆகிய 5 பேரும் மேடையில் ஒன்றாக தோன்றினர்.

கடந்த இரண்டு மாதங்களில் மூன்று பெரும் புயல்களாள் அமெரிக்கா தாக்குப்பட்டுள்ளது. ஹார்வே, இர்மா, மரியா என்று பெயரிடப்பட்ட இந்தப் புயல்களால் பலர் உயிரிழந்தனர். பில்லியன் டொலர் பெறுமதியான சொத்துக்கள் சேதமடைந்துள்ளன. இந்த நிலையில், புயலால் பாதிக்கப்பட்ட மாகாணங்களுக்கு உதவி செய்வதற்காக அங்கு தொடர்ந்து பல இசை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. டெக்சாஸ் மாகாணத்தில் அண்மையில் நடந்த இசை நிகழ்ச்சியொன்றில் அமெரிக்காவின் முன்னாள் அதிபர்களான ஒபாமா, ஜோர்ஜ்டபிள்யுபுஷ், பில் கிளிண்டன், ஜோர்ஜ்எச். டபிள்யு. புஷ், ஜிம்மி கார்ட்டர் ஆகிய 5 பேரும் மேடையில் ஒன்றாக தோன்றினர். இவர்களில் ஜோர்ஜ்டபிள்யுபுஷ், ஜோர்ஜ்எச். டபிள்யு. புஷ் ஆகிய இருவரும் குடியரசு கட்சியினர். மற்ற 3 பேரும்ஜனநாயகக்கட்சியினர். பொது நலனுக்காக அவர்கள் கட்சிவேறுபாடுகளுக்குஅப்பால் ஒன்று சேர்ந்தது பன்னாட்டு ஊடகங்களால் வெகுவாகப் பாராட்டப்பட்டுவருகிறது. (ம)

# தலைமை அமைச்சராக மீண்டும் சின்சோ அபே

டொக்கியோ, ஒக். 24
ஜப்பான்நாடாளுமன்றத்தேர்தலில் சுதந்திர ஜனநாயகக் கட்சி அமோக வெற்றிபெற்றுள்ள நிலையில், தலைமை அமைச்சராக மீண்டும் சின்சோ அபே தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.



ஜப்பான் நாடாளுமன்றின் பதவிக்காலம் அடுத்த வருடத்துடன் முடிவுக்கு வருகிறது. வடகொரியாவுக்கு எதிரான நகர்வுகளுக்காக ஜப்பான் தலைமை அமைச்சர் சின்சோ அபேக்கு மிகப்பெரும் ஆதரவு அங்குள்ளது. இதனால்சுமார் ஒரு வருடத்துக்கு முன்னதாகவேதேர்தலை நடத்தி ஆட்சியைத் தக்க வைக்க அபே முடிவுசெய்தார். இதன்படி கடந்த மாதம் ஜப்பான் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது.

நாடாளுமன்றத்துக்கான தேர்தல் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமைநடைபெற்றது. 465 ஆசனங்களில் 312இடங்களில்வெற்றி பெற்று ஆட்சியைத் தக்கவைத்தது சுதந்திர ஜனநாயகக்கட்சி.


இந்த வெற்றியை அடுத்து சின்சோ அபே தொடர்ந்தும் ஜப்பான் தலைமை அமைச்சராகச் செயற்படுவது உறுதியாகியுள்ளது. (ம)



# அழிவின் விளிம்பில் றோட்டன்

ஹொண்டுராஸ்நாட்டுக்கு அருகில், றோட்டன்தீவுப்பகுதியில் உள்ள கடலில்பிளாஸ்டிக்கழிவுகள்ஏராளமாகமிதக்கின்றன. கடலில்இப்படி ஒரு மோசமான சூழலை இதுவரை யாரும் கண்டிருக்க வாய்ப்பில்லை என்று கோடிட்டுக் காட்டியுள்ளன பன்னாட்டு ஊடகங்கள். சமீபத்தில் ஹொண்டுராஸ் நாட்டில் பெய்த அதீத மழையால், குப்பைகள் அடித்துவரப்பட்டு ஆறுகளில் கலந்தன. ஆற்றுநீர் குப்பைகளைக் கடலில் சேர்த்துவிட்டது. அதனால் கற்பனை செய்ய முடியாத அளவுக்கு கடல்மாசு அடைந்துவிட்டது. பிளாஸ்டிக்போத்தல்கள், பைகள், குப்பைகள் என்று அனைத்தும் ஒன்று திரண்டு சூரிய ஒளியைக் கடலுக்குள் செல்லவிடாதபடி அடைத்துக் கொண்டிருக்கின்றன.

'கடலுக்குள்ளும் ஆயிரக்கணக்கான பிளாஸ்டிக் போத்தல்கள் மிதந்து கொண்டிருந்தன. பிளாஸ்டிக்துண்டுகள் துகள்களாக மாறினால் மீன்களும் ஏனைய உயிரினங்களும் இவற்றைச் சாப்பிட நேரும். இதனால் உணவுச் சங்கிலியே பாதிக்கப்படும். முன்பொரு காலத்தில் சுற்றுலாத்தலமாக இருந்த றோட்டன் தீவு தற்போது அழிவின் விளிம்பில் உள்ளது' என்று பன்னாட்டுத் தொண்டு நிறுவனங்கள் பரப்புரை மேற்கொண்டு வருகின்றன. (ம)



# ரோபோக்களின் நடனத்தில் வியக்கவைத்த வடகொரியா

பியாங்யாங், ஒக். 24
வடகொரியாவில் ஆயிரத்து 69 ரோபோக்கள் ஒரே மாதிரி நடனம் ஆடி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தின. பாடலொன்றுக்கு ஒரே மாதிரியாக நடனமாடிய ரோபோக்களின் எண்ணிக்கையில் வடகொரியா கின்னஸ் சாதனையையும் படைத்தது. ஒன்றின் பின்னர் ஒன்றாகத் தொடர்ந்து ஒலிபரப்பான பாடலுக்கு இவ்வாறு ஒரே மாதிரியாக ரோபோக்கள் நடனமாடிய காணொலி சமூக வலைத்தளங்களில் விரைவாகப் பரவி வருகிறது. அறிவியலாளர் இவான் முஸ்க் என்பவரின் ஏற்பாட்டிலேயே இந்தச்சாதனை படைக்கப்பட்டுள்ளது. (ம)

# உலகின் இளம் அரச தலைவராக செபஸ்ரியன்

ஆஸ்திரிய நாட்டின் பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற 31 வயதான செபஸ்டியன் குர்ஸ், உலகின் இளம் அரசதலைவர் என்ற பெருமையைப் பெறுகிறார்.

ஆஸ்திரியாவில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் குர்ஸின் மக்கள் கட்சி 31.5 வீதமான இடங்களைக் கைப்பற்றி முதலிடத்தைப் பெற்றது. அடுத்ததாக சமூக ஜனநாயகக் கட்சி 26.9 வீதமான இடங்களைப் பிடித்துள்ளது. ஐரோப்பிய யூனியனைக் கடுமையாக விமர்சித்து வரும் சுதந்திரக் கட்சி 26 வீதமான இடங்களைப் பெற்றது. தற்போது செபஸ்டியன் குர்ஸ் சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கூட்டணிப் பேச்சு நடத்தி, ஆட்சி அமைக்க உள்ளார். தேர்தல் குறித்துக்கருத்துத்தெரிவித்த செபஸ்டியன், "நான் புதிய அரசியல் கலாசாரத்தை விரும்புகிறேன். அதன்மூலம் தைரியமும் உறுதியும் மிக்க ஆஸ்திரிய அரசை அமைக்க ஆசைப்படுகிறேன்" என்றார். (ம)





மெக்சிக்கோத் தலைநகர் மெக்சிக்கன் சிற்றியில் கடந்த மாதம் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி சுமார் 350 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாகவும் அவர்களை நினைவுகூரும் விதமாகவும் அங்கு தொடர்ந்து பல நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. (ம)

# செக்குடியரசின் அதிபராக ஆண்ட்ரெஜ் பேபிஸ்

பராக், ஒக். 24
ஐரோப்பியக் கண்டத்தில் உள்ள செக் குடியரசு நாட்டில் புதிய அதிபராக ஆண்ட்ரெஜ் பேபிஸ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

200இடங்களுக்குநடந்த இந்தத்தேர்தலில் ஏஎன்ஓ(யெஸ்) கட்சியும், சிவிக்டெமாக்ரடிக் மற்றும்திசெக்பைரேட்கட்சி உள்ளிட்ட கட்சிகள் போட்டியிட்டன. ஏஎன்ஓ (யெஸ்) கட்சி அமோக வெற்றி பெற்றது. இக்கட்சியின் தலைவராக ஆண்ட்ரெஜ் பேபிஸ் உள்ளார். அவர் செக்குடியரசின் புதிய அதிபராகத்தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார். (ம)



எஸ்.யேசுதாஸ்



# இடிக்கு இரையாகும் யாழ்.குடாக்கடல் மீனவர்கள்

## அச்சமின்றித் தொழில்புரிவதற்கான வேண்டுகை

கடற்கரையோரங்களில் வாழும் மக்களின் முதன்மைத் தொழில் முயற்சியாக விளங்குவது மீன்பிடித் தொழிலாகும். கடல் வளத்தை நம்பியே இவர்களின் வாழ்வாதாரம் அமைகிறது. இவர்கள் பொங்கும் அலையோடு போராடி, இரையும் காற்றோடு எதிர்த்தாடி, கும்மிருளோடு களமாடிச் சுட்டெரிக்கும் வெயிலோடு காய்ந்தோடி, கடுங்குளிரோடு விறைப்பேறி கடல் அன்னை மடி வழங்கும் வளத்தைப் பெற்றிருக்கின்றனர். இவ்விதம் ஒரு சாண் வயிறு நிரம்ப மீனவர்கள் படும் துன்பமும் உடல் உழைப்பும் அதிக வலுவுடையவை.


**கவியுறும் மீனவர் வாழ்வு**

தரைமேல் பிறக்க வைத்தான் - எங்களை
தண்ணீரில் மிதக்க வைத்தான்
கரைமேல் இருக்க வைத்தான் - பெண்களை
கண்ணீரில் குளிக்க வைத்தான்.
வெள்ளி நிலாவே விளக்காய் எரியும்
கடல்தான் எங்கள் வீடு
முடிந்தால் முடியும் தொடர்ந்
தால் தொடரும்
இதுதான் எங்கள்
வாழ்க்கை....!"

என்று தொடரும் கண்ணதாசனின்பாடல் வரிகள், மீனவர்களின் வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

**மீன்பிடித் தொழில் அமைவு**

இந்த அசைவியக்கத்தின் பயணத்திற்கு யாழ்.குடாக்கடல் மீனவர்களும் விதிவிலக்கல்ல. வாழ்வாதாரத்துக்கான தொழில் ஸ்தானமாக யாழ்.கடல்நீர் ஏரியை நம்பி ஆயிரக்கணக்கான குடும்பங்கள்வாழ்ந்துவருகின்றன. குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை, அரியாலை, கோவிலாக்கண்டி, தனங்கிளப்பு, சாவகச்சேரி, கச்சாய், பூநகரி, நல்லூர், மண்ணித்தலை மற்றும் மண்டைதீவு மீனவர்கள் இந்தக் குடாக்கடலின் ஊடாக ஆழ்கடல் மற்றும் சிறுகடல் மீன்பிடித்தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர்.



**பாதுகாப்பற்றுப் போயுள்ள தொழில் நிலை**

இவர்களது கடற்போக்குவரத்தை இலகுபடுத்தவோ, பாதுகாக்கவோ முறையான ஏற்பாடுகள் எவையும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. மழை, இடி, மின்னல் என்பன இயற்கையின் பண்பானவை தான்.

ஆனால் இவற்றின் தாக்கங்களைத் தவிர்க்கக்கூடிய நவீன தொழில்நுட்பங்கள் எவையும் இந்தப் பகுதியில் ஏற்படுத்தப்படவில்லை. ஏற்கனவே இருந்த வெளிச்சவீடு, இடிதாங்கி என்பன மீண்டும் நிறுவப்படாமையால் இதுவரைகாலமும் 7 மீனவர்கள் மின்னல் தாக்கி இந்தக் கடற்பகுதியில் உயிரிழந்துள்ளனர். அண்மையில் குருநகரைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் மின்னல் தாக்கி சாவடைந்தார்.

**வரலாறும் அவலமும்**

மீனவர்களுக்கு திசைகாட்டி கரைசேர்க்கும் கலங்கரை விளக்கும் இடிதாங்கியும் பல நூற்றாண்டுகளாக இந்தப் பகுதியில் இருந்து வந்துள்ளது. ஐரோப்பிய ஆட்சியாளர்களின் கடல் வாணிபத் தேவைகளுக்கு அனுகூலமாக கரையாற்றுக் கால்வாயின் முகப்பில் கரையிலிருந்து அண்ணளவாக ஒன்றரைக் கடல் மைல் தொலைவில் முற்றிலும் பொழிகற்களைக் கொண்டு இவை அமைக்கப்பட்டிருந்தன. அதன் உச்சியில் இடிதாங்கியும் பொருத்தப்பட்டிருந்தது. இந்தப் பகுதி மீன்பிடிப் படகுகள் சென்றுவரும் ஆற்றுக்கால்வாய்கள் வெளிச்சவீட்டைச்சுற்றி வந்தே பயணிக்கக் கூடியதாகவே இவை அமைக்கப்பட்டுள்ளன. அக்காலத்தில் பாலைதீவுக் கடற்பரப்பில் தரித்து நிற்கும் கப்பல்களில் இருந்து தொடுவைப் படகு மற்றும் டிங்கிகள் மூலம் அலுப்பாந்தி துறைக்கு கொண்டு வருவதற்காக இந்தக் கால்வாய்கள் அமைக்கப்பட்டதாக கூறப்படுகிறது. 'அலுப்பாந்தி" என்பது போர்த்துக்கீசச் சொல்லாகும்.

வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காற்று வீசும் காலங்களில் காங்கேசன்துறைக் கடற்பகுதி கொந்தளிப்பாக காணப்படுவதனால் மாற்றுதுறைமுகச் செயற்பாடாக இந்தப்பகுதிகள் பயன்படுத்தப்பட்டு வந்தன. "கடற்பகுதியில் அமைந்திருந்த வெளிச்சவீட்டுக்கு மின்னிணைப்பு இன்றி ஒட்சிசன் வாயுச்சிலிண்டர் (gas) தொகுப்புடன் கூடிய 'வாழ்வு' முறையில் ஒளிரும் விளக்குகள் பொருத்தப்பட்டிருந்ததாகவும், மூன்று வாயுச் சிலிண்டர்கள் உள்ளே வைக்கப்பட்டிருந்ததாகவும், உச்சியில் இடிதாங்கி பொருத்தப்பட்டிருந்தாகவும்" கூறுகிறார் மூத்த மீனவர் ஒருவர்.

வரலாற்றுச் சின்னமாகிய கலங்கரை விளக்கும் இடிதாங்கியும் கடந்த கால உள்நாட்டுப் போரில் ஈடுபட்ட தரப்பினரால் அழிக்கப்பட்டதுடன் கடல் மட்டத்துக்கு கீழுள்ள பகுதி மட்டும் தற்போது எஞ்சி நிற்கின்றது. மீனவர்கள் இரவில் கலங்கரை விளக்கு ஒளியின்றி திசையிடுவதில் சிரமப்படுவதுடன் வருடாவருடம் மின்னல் தாக்கத்திற்கு ஆளாகி உயிரிழந்து போகும் பரிதாப நிலையும் காணப்படுகின்றது.

**வேண்டப்படும் பணி**

"ஆடிவரும் படகேறி கூடிவரும் தோழருடன் மடியிழந்து வருவோரை இடிவிழுங்கும் கொடிய நிலை" அடியோடு மாற வேண்டும். நீடுபுகழ் கூறும் வரலாற்றுச் சின்னத்தை நாளைவரும் தலைமுறைகள் கண்கொண்டு களிக்க வேண்டும். அந்தவகையிலே இவற்றைப் புனரமைத்துப் பாதுகாப்பது காலத்தின் தேவையாகும்.

குருநகர் மக்கள் முன்னேற்ற முன்னணி மற்றும் பொது அமைப்புக்கள், கடல்சார் சங்கங்கள் இந்தக் கோரிக்கையை நீண்ட காலமாக முன்வைத்து வருகின்றன. நீரியல் வளத் திணைக்களம் அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் இது குறித்து கவனமெடுப்பார்களா..? மீனவர்கள் அச்சமின்றித் தொழில்புரியும் நிலை ஏற்படுமா...?

"குருநகர் மக்கள் முன்னேற்ற முன்னணி மற்றும் பொது அமைப்புக்கள், கடல்சார் சங்கங்கள் இந்தக் கோரிக்கையை நீண்ட காலமாக முன்வைத்து வருகின்றன. நீரியல் வளத் திணைக்களம் அரசியல் வாதிகள், அரச அதிகாரிகள் இது குறித்து கவனமெடுப்பார்களா..? மீனவர்கள் அச்சமின்றித் தொழில்புரியும் நிலை ஏற்படுமா?

---

# இயற்கை வழி விவசாயம்

## மண் வளத்தை செழிப்பாக்கும் திட்டம்

கனக நமநாதன்


இரசாயனத்தாக்கங்களுக்கு உட்பட்டுள்ள நிலமண்ணை விடுவித்து செழிப்பானதாக்க வேண்டும். அதற்கான முதல் முயற்சியாக அமைவது மாட்டெருவின் (சாணகம்) கூடிய தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதே. அவ்வாறாயின் மாடு வளர்ப்பினை மக்களிடையே அதிகரிக்கச் செய்யவேண்டும்.

போதிய வருமானமின்றி வாழும் மக்களிடத்தில் வீட்டு வளவில் ஒரு தொழில் ஆளுமை முயற்சியாக மாடு வளர்ப்பை ஊக்குவிக்கலாம். தற்போது மாடு வளர்ப்பவர்கள் பகல்பொழுதில் தரிசாகவுள்ள புல், பூண்டு முளைத்திருக்கும் இடங்களில் மாடுகளைக் கட்டி மேய விடுகின்றனர். பின்பு வைக்கோல், தவிடு, புண்ணாக்கு வேறு சில தீன்வகைகளையும் உணவாக கொடுக்கின்றனர். ஒரு சில மாடு வளர்ப்பவர்கள் வளவிலேயே இருக்கக்கூடிய நிலப்பரப்பில் வெட்டுப்புல் நாட்டி கிணற்றிலிருந்து நீர் இறைத்து அத்தண்ணீரில் சாணகத்தையும் கரைத்து நீர்ப்பாய்சி இரண்டு மாதத்திற்கு ஒரு முறை வெட்டக் கூடியதாக புல்லை உற்பத்தி செய்கின்றார்கள்.

மாடு வளர்ப்பில் ஈடுபடும் அத்தனை பேரிடமும் புல் வளர்க்கக் கூடிய நிலமிருக்காது. இதை நிவர்த்தி செய்ய புற்தோட்டங்கள் அமைக்கும் திட்டம் வகுக்கப்படுகின்றது. எங்கெல்லாம் புற்தோட்டம் அமைக்கக்கூடிய நிலம் மற்றும் நீர் வசதியுள்ள இடங்கள் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் தனியார் புற்தோட்டங்கள் அமைக்கப்பட வேண்டும். வெட்டுப்புல்லை கட்டுகளாக்கி கிலோ கணக்கில் விற்பனை செய்ய முடியும். வெட்டுப்புல் தோட்டங்களை புது உற்பத்தி முயற்சியாக உருவாக்கலாம். வேலை வாய்ப்பின்றி வாழும் இளம் குடும்பங்கள் ஈடுபடக் கூடியதாக இந்த தொழில்முயற்சியை அமைத்துக் கொள்ளலாம். வெட்டுப் புல் விற்பனை மாடு வளர்ப்பவர்களுக்கு ஒரு சிறந்த அனுகூலமாக அமையும். வங்கிகள் மூலமாக கடன்களைப் பெற்று இந்த முயற்சியைத் தொடரலாம். மண்ணை செழிப்பாக்குவதன் மூலம் நல்ல உணவு ஊட்டங்களை மாடுகளுக்கு வழங்கி பால் உற்பத்தியை அதிகப்படுத்தலாம். இதன்வழி குழந்தைகளினதும் பிள்ளைகளினதும் ஆரோக்கியம் மேம்படும். பெரியவர்களும் ஆரோக்கியமாக வாழலாம்.



கட்டுரையாளர்: தலைவர்,
சிறுதானிய பயிர் உற்பத்தியாளர் சங்கம்.



# மங்களம் தரும் துளசி

சங்கசூடன் என்ற அசுரன் தான் பெற்ற அருந்தவத்தை தவறாக பயன்படுத்தி, மக்களை பல வகையில்இம்சித்தான். அவனது கொடுமைகளைத் தாங்க முடியாமல் மூவுலகமும் கலங்கின. அவர்கள் மும்மூர்த்திகளிடம் சென்று தங்கள் குறை களை முறையிட, அதனால் கோபமடைந்த மும்மூர்த்திகளுக்கும் சங்கசூடனுக்கும் போர் நடந்தது.

கடுந்தவம் புரிந்த பயனாய் சங்கசூடன் தன் கழுத்தில் ஸ்ரீகிருஷ்ண கவசத்தை அணிந்திருந்தான். இந்த கவசம் இருந்த காரணத்தால் சங்க சூடனை எவராலும் வெல்ல முடியவில்லை. அந்தக் கவசம் அவனுடன், இருக்கும் வரை அவனை எவராலும் வெல்லவோ, அழிக்கவோ முடியாதென்று மும்மூர்த்தி களும் உணர்ந்தனர்.

சங்கசூடனின் மனைவி துளசி மகாபதி விரதை, கற்புக்கரசி, அவளின் கற்பின் திறனும், கணவனுக்கு அரனாக விளங்கியது. துளசியின் கற்பின் மகிமையை உணர்ந்த பரந்தாமன் துளசியை புகழ்ந்துரைத்து துதித்தார்.எல்லோரும் வணங்கும், வைகுந்த வாசனே தன்னைத் துதித்ததை எண்ணி துளசி தன்னை மறந்து நெஞ்சம் நெகிழ்ந்தாள், அன்பைப் பொழிந்து, அவரை வாயாரப் போற்றிப் பாடி ஆடினாள், வேண்டிய வரங்களைக் கேள் என்றார் பரந்தாமன்.

அதற்கு அவள் மீண்டும் பிறவா வரமும், பிறந்தால் நாராயணரை மறவா மனமும் வேண்டும் என்றாள். பிறகு ஸ்ரீமகாவிஷ்ணுவின் பாதார விந்தங்களில் பணிந்த அவளின் உயிர் மகாவிஷ்ணுவின் பாதங்களில் ஒளி வடிவாகச் சென்றடைந்தது. அவளது உடல் கண்டகி என்னும் நதியாக மாறியது. அவளது கேசம், துளசி செடியாக, துளசி வனமானது. ஸ்ரீமஹாவிஷ்ணு அந்த துளசியை மாலையாக்கி அணிந்து காட்சியளித்தார். மனைவியைப் பிரிந்த சங்கசூடன் சக்தியற்றவனானான்.அவனை ஸ்ரீமஹாவிஷ்ணு எளிதில் வதம் செய்து, மக்களை காத்தருளினார்.

மகா லட்சுமியின் உருவமே ஸ்ரீதுளசி என்பது நம்பிக்கை. துளசி இல்லாத பூஜையை மஹாவிஷ்ணு ஏற்றுக் கொள்வதில்லை.துளசி உள்ள இடத்தில் ஸ்ரீமகாவிஷ்ணு எப்போதும் வாசம் செய்கிறார் என்பது ஐதீகம்.

ஸ்ரீசங்கர நாராயணரான ஈசனையும் துளசியினால் அர்ச்சிக்கலாம். சுமங்கலிகள் துளசியினைப் பூஜித்தால் தீர்க்க மாங்கல்யத்தையும், சகல சவுபாக்கியங்களையும் பெறுவார்கள். பெருமை வாய்ந்த துளசி சரித்திரத்தை மனமுவந்து படிப்பவருக்கும், படிப்பதை கேட்பவருக்கும், ஸ்ரீதுளசி மாதாவின் பெருங்கருணையும் ஸ்ரீமஹாவிஷ்ணுவின் பரிபூர்ண அருளும் கிடைக்கும்.

இத்தகைய மகிமை வாய்ந்த ஸ்ரீதுளசியை நம் வீடுகளில் வளர்த்து, பக்தி சிரத்தையுடன் பூஜித்தால் வாழ்க்கையில் சர்வ மங்களங் களையும் பெறலாம். கன்னிப் பெண்கள் பூஜித்தால் நல்ல கணவனைப் பெறுவார்கள்.துளசியின் இலைகள் மட்டுமின்றி விதை, தண்டு, வேர் முதலான எல்லாமே பூஜைக்கு உரியவைதான். ஞாயிறு, செவ்வாய், வெள்ளியில் துளசி பறிக்கக்கூடாது. சதுர்த்தசி, அஷ்டமி, பவுர்ணமி, ஏகாதசி திதிகளில் பறிப்பதையும் தவிர்க்க வேண்டும்.

மகாப் பதிவிரதையான துளசி மாதாவை பணிந்து அவள் அருள் பெறுவோம்.

## வரலாற்றில் இன்றைய தினம் 24.10.2017

2016 - யாழ்ப்பாணப்பல்கலைக்கழக மாணவர்களின் கொலைக்கு நீதி கேட்டு பல்கலைக் கழக மாணவர்கள் தேசிய ரீதியில் பெரும் போராட்டம்.




1861 - அமெரிக்கா ஊடாக கண்டங்களுக்கு இடையிலான தந்தி இணைப்பு.

1945 - ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்பட்டது.

1946 - வி-2 ஏவுகணையில் பொருத்தப்பட்ட கமராவால் விண்வெளியில் இருந்து முதன்முதலாக பூமி ஒளிப்படம் எடுக்கப்பட்டது.

1949 - ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்துக்கான அடிக்கல் நடப்பட்டது.

1980 - போலந்து அரசு ஒன்றிணைந்த தொழிற் சங்கத்தைச் சட்டபூர்வமாக்கியது.

1992 - ஓமந்தையில் மனித குலத்துக்கு எதிராக கடும் தாக்குதலொன்றை நடத்த அரசு சதி என்று புலிகள் குற்றச்சாட்டு.

2007 - புலிகளுடனான பேச்சுக்கு அரசின் கதவு திறந்து உள்ளது என்று அயலுறவுத்துறை செயலர் பாலித ஹோகன்ன தெரிவிப்பு.

2016 - ஓமந்தை அல்லது தாண்டிக்குளத்தில் பொருளாதார வலயம் என்று வவுனியா ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் வலியுறுத்தல்.

**நாளை**

**25.10.2017**

புதன்கிழமை

**ஐப்பசி 08**

திதி: பஞ்சமி மு.ப. 8.22 வரை
நட்சத்திரம்: மூலம் மு.அ. 8.05 வரை
சுபநேரம்: 04.32–06.02 வரை
ராகுகாலம்: 12.02–01.32 வரை

# பத்தி எழுத்து

## தாமாக திருந்த வேண்டும்

குடாநாட்டில் அடாவடிக் குழுக்களின் அட்டகாசம் மீண்டும் தலை தூக்கியுள்ளது. சில நாள்கள் ஓய்ந்திருந்த வாள்வெட்டுச் சம்பவங்கள் மீண்டும் ஆரம்பித்துள்ளதால் மக்களின் நிம்மதி இழக்கப்பட்டுவிட்டது. வாள்வெட்டுக் கும்பலைப் பொலிஸார் முற்றாகக் களைந்து விட்டனர் என்று தெரிவிக்கப்பட்டபோதிலும் அதைப் பொய்ப்பிக்கும் வகையில் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்தச் சம்பவங்களின் பின்னணியில் உள்ளவர்கள் முற்றாகக் கைது செய்யப்படும் போதுதான் குடாநாட்டின் அமைதியைப் பேணிப் பாதுகாத்துக் கொள்ள முடியும். இதில் சட்டத்துக்கும் ஒழுங்குக்கும் பொறுப்பான பொலிஸாரின் பங்கு முக்கியமானதாகும். ஒரு சிலரின் நடவடிக்கைகளால் ஒட்டு மொத்தச் சமுதாயமும் பாதிக்கப்படக் கூடாது. நாகரிகமான ஒரு சமுதாயத்தில் வன்முறைக்கு இடமேயில்லை.

அண்மையில் பிரபல நடிகர் ஒருவரின் படம் திரையிடப்படுவதையொட்டி வைக்கப்பட்டிருந்த 'கட் அவுட்கள்' சேதமாக்கப்பட்டும் எரியூட்டப்பட்டும் இருந்தன. இது வெட்கத்துக்குரியது. இதனால் தமிழ் நாட்டிலுள்ள எமது உறவுகள் ஈழத் தமிழர் மீது வெறுப்புக் கொள்ளவும் வாய்ப்பு ஏற்பட்டுவிடும். ஏனெனில் அங்கு திரையுலகு தான் எல்லாமும். ஈழத் தமிழர்களுக்கு இன்னல் நேரும் போதெல்லாம் தமிழ் நாட்டிலுள்ள உறவுகள் அதற்கு எதிராகக் குரல் கொடுப்பதை எம்மவர்கள் மறந்துவிட்டமை வேதனைக்குரியது. அத்துடன் இந்தச் சம்பவங்கள் தொடர்பாக இளைஞர்கள் ஒருவருக்கொருவர் மோதிக் கொள்ளும் போது பாதிக்கப்படுபவர்கள் எம்மவர்தான்.

இங்குள்ள சில இளைஞர்கள் வன்முறைகளில் நம்பிக்கை கொண்டு செயற்படுவதை இனிமேலும் அனுமதிக்க முடியாது. தமது இனத்தின் உயர்வுக்காக உழைக்க வேண்டிய அவர்கள் அந்த இனத்தையே அச்சத்தில் ஆழ்த்துவது எந்த வகையிலும் நியாயமானதல்ல. கொடிய போர் ஒன்று இடம்பெற்றபோது இளைஞர்கள் தமது உயிரைத் துச்சமென மதித்து ஆயுதங்களை ஏந்திப் போரிட்டனர். பல ஆயிரக்கணக்கானவர்கள் தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்தனர். ஆனால் இன்றுள்ள இளைஞர்கள் பொறுப்பற்ற வகையில் நடந்து கொள்வதை என்னவென்று சொல்வது.

குடாநாட்டு மக்களின் அமைதியை மட்டுமல்லாது அவர்களது கலாசாரத்தையும் சீரழிப்பதற்கு எவருக்குமே உரிமை கிடையாது. முன்பெல்லாம் பெரியவர்களுக்கு இளையோர் மதிப்புக் கொடுத்து நடந்ததைக் கண்டோம். ஆனால் இன்று அந்த நிலை காணப்படவில்லை. இளைஞர்கள் தான்தோன்றித் தனமாகச் செயற்படுவதைத் தான் காண முடிகின்றது. இவர்கள் தாமாகத் திருந்தாதவரை எவராலும் எதுவுமே செய்துவிட முடியாது.

## சினிமா

# ரசிகர்களுக்கு நன்றி தெரிவித்தார் விஜய்



பல்வேறு இடையூறுகளை தாண்டி திரைக்கு வந்து பெரும் வரவேற்பை பெற்றிருக்கும் விஜய்யின் 'மெர்சல்' படத்தை, வெற்றிப் படமாக்கிய அனைவருக்கும்நன்றிதெரிவித்துள்ளார் விஜய். மெர்சல் படத்துக்கு அடுத்தடுத்து பல தடைகள், சிக்கல்கள் வந்தன. நீதி மன்றம் கூட மெர்சல் தலைப்புக்கு தடை விதித்து பின்னர் அதை நீக்கியது. எனினும் இந்தத் தடைகளைத் தாண்டி வெளியான மெர்சல், சினிமா ரசிகர்கள், விமர்சகர்கள் இடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. அதே போல் வசூலிலும் சில சாதனைகளை மெர்சல் படைத்துள்ளது.



இந்த நிலையில் மெர்சல் படத்தை மாபெரும் வெற்றிப் படமாக்கிய அனைவருக்கும் நன்றி என்று நடிகர் விஜய் தனது சமூக வலைத்தளங்களில் குறிப்பிட்டுள்ளார்.

ஒருவரின் சுயலாபத்துக்காக மட்டுமே நாம் பயன்படுத்தப் பட்டிருக்கிறோம் எனத் தெரிய வரும்போது இருக்கும் மனநிலை மிகவும் கொடியது...



காரணம்
இல்லாத
பிரிவுகள்
நறுமணம்
இல்லாத பூக்களுக்குச் சமம்

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சுயநலத்துடன் சிலர் உதவி செய்ய முன் வருவர். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டாகும். நிலுவைப் பணம் கிடைக்கும்.

**இடபம்:** முக்கிய பணியை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில் வியாபாரம் சீர்பெற கூடுதல் உழைப்பு தேவைப் படும். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**மிதுனம்:** பலரும் உங்கள் மீது நல்ல எண்ணம் கொள்வர். தொழில் வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். வருமானம் அதிகரிக்கும்.

**கடகம்:** வாக்குறுதி நிறைவேற தாமதமாகலாம். பொறுமையுடன் செயற்படுவது நல்லது. தொழிலில் சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்களுக்கு வீட்டுச் செலவு அதிகரிக்கும்.

**சிங்கம்:** நல்லவர்களின் நட்பால் உதவி கிடைக்கும். புதிய முயற்சியில் வெற்றி காண்பீர்கள். தொழில் வியாபாரம் செழிக்கும். மேலதிக வருமானம் கிடைக்கும்.

**கன்னி:** வாழ்வில் குறுக்கிடும் சிரமத்தைச் சரிசெய்ய முயல்வீர்கள். குடும்பத்தினரின் ஒத்துழைப்புக் கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் பணவரவு அதிகரிக்கும்.

**துலாம்:** நண்பர்களின் செயலால் அதிருப்தி உருவாகலாம். தொழில் வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். இலாபம் சுமாராக இருக்கும்.

**விருச்சிகம்:** சொந்தப்பணிகளில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. தொழில் வியாபாரத்தில் இலக்கை அடைய விடாமுயற்சி தேவைப்படும். வருமானம் சுமார்.

**தனுசு:** சிறிய முயற்சியிலும் பெரிய நன்மை காண்பீர்கள். விலகிச் சென்ற நண்பரும் அன்பு பாராட்டுவார். தொழில் வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும்.

**மகரம்:** கடந்த கால உழைப்பின் பயனைப் பெற்று மகிழ்வீர்கள். பெண்கள் புத்தாடை நகை வாங்க யோகம் உண்டு. பிள்ளைகளின் செயற்பாடு பெருமையளிக்கும்.

**கும்பம்:** வழக்கத்திற்கு மாறாக பணிச்சுமை அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். நண்பரால் உதவி உண்டு.

**மீனம்:** பிறருக்காக தகுதி மீறிய வாக்குறுதி வழங்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வருமானம் சராசரி அளவில் இருக்கும்.

# மறு பெயர்கள்



எமது மனையில் வெற்றிகரமாக வீற்றிருப்பவள் என்பதால் - மனைவி

எமது வாழ்வில் கடைசிவரை துணையாய் வருபவள் என்பதால் - து ணைவி

ஆபரணங்களை வாங்கித் தருமாறு எம்மை ஆட்டி வைப்பதால் -பொண்டாட்டி

எம்மை அவ்வப்போது பஞ்சராக்கும் ஜாதி என்பதால் - பெண் ஜாதி

கோப்பியை ஆத்திக் கொடுத்தே தனது காரியத்தை சாதித்து விடுவதால் - ஆத்துக்காரி

ஷாப்பிங் போய் விட்டு வீட்டுக்கு வந்ததும் எம்மை பார்த்து, அவள் கேட்டதை எல்லாம் வாங்கித்தர முடியாத துப்பு கெட்டவன் என்று காரி துப்புவதால் - வீட்டுக்காரி

என்றும் அழைக்கிறார்களாம்.

# சுடோக்கு

## என் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | 4 | | 5 | 7 | | | |
| | | | 8 | | | | 4 | |
| | | | 1 | | 4 | | 7 | 8 |
| 9 | | | 6 | | | | 5 | |
| 4 | | 5 | | | | 6 | | 3 |
| | 8 | | | | 5 | | | 9 |
| 5 | 2 | | 4 | | 1 | | | |
| | 4 | | 5 | | 8 | | | |
| | | | 3 | 9 | | | | |

### நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 9 | 6 | 7 | 1 | 4 | 3 | 2 | 8 |
| 2 | 7 | 3 | 8 | 5 | 9 | 1 | 4 | 6 |
| 8 | 1 | 4 | 2 | 3 | 6 | 7 | 5 | 9 |
| 9 | 6 | 7 | 4 | 2 | 8 | 5 | 1 | 3 |
| 1 | 2 | 5 | 3 | 9 | 7 | 6 | 8 | 4 |
| 4 | 3 | 8 | 1 | 6 | 5 | 9 | 7 | 2 |
| 3 | 5 | 1 | 6 | 8 | 2 | 4 | 9 | 7 |
| 7 | 8 | 9 | 5 | 4 | 3 | 2 | 6 | 1 |
| 6 | 4 | 2 | 9 | 7 | 1 | 8 | 3 | 5 |


சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பபட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

மீனை ஆத்தில வைச்சு பார்க்கிறதை விட



சோத்தில வைச்சு பார்க்கிறது தான் நல்லா இருக்கு...

கண்ணாடியும் மாட்டி விட்டிருக்காங்க....





# படிப்பினை (நாடகம்)

**காட்சி-1**

கீதாவும் மாலாவும் 5ஆம் தரம் படிக்கும் மாணவிகள். பாட இடைவேளை நேரம் இருவரும் தாம் வீட்டிலிருந்து எடுத்து வந்த சிற்றூண்டிகளை உண்டு கொண்டிருக்கிறார்கள்.

கீதா : மாலா வாழைப்பழம் சாப்பிடுகிறாய். தோலை மட்டும் கண்ட படி வீசாதே

மாலா : வேறு எங்குதான் வீசுவது?

கீதா : குப்பைத் தொட்டி அல்லது 'குப்பைக் கூடைக்குள் போடு'

மாலா : குப்பைத் தொட்டியிலா? அவ்வளவு தூரம் சென்று என்னால் வீச முடியாது.

கீதா : சரி குப்பைத் தொட்டிதான் கொஞ்சம் தூரத்தில் உள்ளது. வகுப்பறைக்கு வெளியே உள்ள குப்பைக் கூடைக்குள் போடலாமே!

மாலா : குப்பைக் கூடைக்குள் வாழைப்பழத்தோலைப் போடலாமா?

கீதா : வேடிக்கையாக இருக்கிறது உன் பேச்சு. எனக்கு உன்னை நினைத்தால் சிரிப்புத்தான் வருகிறது.

மாலா : ஏன் சிரிக்கிறாய்?

கீதா : குப்பைக் கூடைக்குள் கடதாசிக் கழிவுகள் மட்டுமல்ல, வாழைப்பழத் தோலையும் போடலாம். ஆனால் பாடசாலை முடிவடைந்ததும் பாடசாலை விளையாட்டு வெளியின் எல்லையில் வைக்கப்பட்டிருக்கும் குப்பைத் தொட்டிக்குள் குப்பைக் கூடைக்கழிவுகளை இட்டு விடவேண்டும்.

மாலா : சரி... சரி வா கைகளைக் கழுவி வருவோம்
(இருவரும் வகுப்பறையை விட்டு வெளியேறல்)

**காட்சி-2**

வகுப்பில் படிக்கும் தீபனும் அமலனும் உணவு எடுத்த பின்னர் கை கழுவி முடித்து வகுப்பறைக்குத் திரும்பி வந்து கொண்டிருக்கின்றனர்.

தீபன் : ஐயோ... அம்மா (வாழைப்பழத் தோல் சறுக்கி தீபன் கீழேவிழுகிறான். சூழ நின்ற மாணவர்கள் கைகொட்டிச் சிரிக்கிறார்கள்)

அமலன் : தீபன் எழுந்திரு... தலையில் அடிபட்டதா? (ஆதாரவாக தீபனைத் தொட்டு எழ வைக்கிறான் அமலன்)

கீதா : நீ வாழைப்பழத்தோலை நான்சொன்னபடி கூடையில் போட்டிருந்தால் தீபன் விழுந்திருப்பானா?

மாலா : நீ பேசாமல் இரு. என்மீது பழிபோடாதே!

கீதா : உன் மீது நான் பழி போடவில்லை. நாம் செய்யும் சிறு சிறு தவறுகள் மற்றவர்களுக்கு பெரும் பாதிப்பை உருவாக்கி விடுகின்றன. இப்போது தீபனின் மண்டை உடைந்திருந்தால், நல்ல வேளை அப்படி எதுவும் நடக்கவில்லை.

**காட்சி-3**

வகுப்பறையுள் மாணவர்கள் எல்லோரும் எழுந்து மௌனமாக நிற்கின்றனர்.

ஆசிரியை : யார் வாழைப்பழத்தோலை நடைபாதையில் வீசியது.

மாணவர்கள் : (மௌனம்)

ஆசிரியை: கீதா நீயா வீசினாய்?

கீதா : இல்லை ரீச்சர்.

ஆசிரியை : மாலா நீயா?

மாலா: நான் தான் ரீச்சர்.

ஆசிரியை : சுத்தம் பேணுவதற்காக வகுப்பறைக்கு வெளியே குப்பைக் கூடை, குப்பைத்தொட்டி என்பன வைக்கப்பட்டுள்ளன. அப்படி யிருந்தும் உங்களது தப்பான செயல்களால் இத்தகைய விபரீதங்கள் நடக்கின்றன. இந்தச் சம்பவம் எல்லோருக்கும் இனி ஒரு பாடமாகட்டும். தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போன மாதிரி வழுக்கி விழுந்ததில் தீபனின் தலை தப்பியதே பெரிய புண்ணியம். வழுக்கி தரையில் விழுந்த தீபனைப் பார்த்து எல்லோரும் கைகொட்டிச் சிரித்தீர்கள். இது தவறாகும். இன்று மற்றவருக்கு நடப்பது நாளை உங்களுக்கும் நடக்கலாம். எவரையும் ஏளனம் செய்யக்கூடாது.

மாலா : என்னை மன்னியுங்கள் ரீச்சர். இனி ஒருபோதும் நான் இப்படிச் செய்ய மாட்டேன்.

மாணவர்கள் : (எல்லோரும்) நாங்களும் இனி விழுந்தவர்களைப் பார்த்துச் சிரிக்க மாட்டோம்.

# வழித்துணையாகும் வெள்ளைப் பிரம்பு



- பார்வை இழந்தவர்கள் எவருடைய உதவியுமின்றி சமூகத்தில் நடமாடுவதற்கு வழிதேடியதில் உருவானதே வெள்ளைப் பிரம்பாகும்.
- விழிப்புலனற்றோர் நடமாடும் போது அல்லது ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்கு நகரும்போது அவர்கள் கைகளில் பக்கத் துணையாக வெள்ளைப் பிரம்பைப் பயன்படுத்துகின்றனர்.
- கண்பார்வையுள்ளவர்கள் வெள்ளைப் பிரம்பைப் பயன்படுத்தி வரும் ஒருவரை விழிப்புலனற்றவர் என்று இனம் கண்டு கொள்ளவும், அவர்களுக்கு மற்றவர்கள் முடிந்த உதவிகளைப் புரிவதற்கும் வெள்ளைப் பிரம்பு உதவுகிறது.
- 1931ஆம் ஆண்டு அமெரிக்க தேசத்திலுள்ள அரிமாக் கழகம் (லயன்ஸ் கழகம்) முதன் முதலில் இந்த வெள்ளைப் பிரம்பை அறிமுகப்படுத்தியது.
- 1969ஆம் ஆண்டிலிருந்து விழிப்புலனற்றோர் சம்மேளனம் ஒக்ரோபர் 15ஆம் நாளை வெள்ளைப் பிரம்பு தினமாகக் கடைப்பிடித்து வருகிறது.
- உடல் உறுப்புக்களில் கண்கள் முதன்மையானவை. இந்த உலகத்தைக் கண்டு ரசிப்பதற்கு எமக்கு அளிக்கப்பட்டிருக்கும் உறுப்பு கண்ணாகும்.
- இந்தக் கண்களில் ஏற்படும் பாதிப்புகளே பார்வையீனத்தை ஏற்படுத்துகின்றன.
- இத்தகைய பார்வையீனம் நாமாகத் தேடிக்கொள்வது அல்ல. இயற்கையாக அமையலாம். அன்றேல் விபத்துக்கள், நோய்களால் ஏற்படலாம்.
- விழிப்புலனற்றோர் மாற்றுத் திறனாளிகள் என்ற வரிசையில் இடம்பெறுகின்ற போதிலும், ஏனையவர்களை விட கல்வித்துறை உட்பட இதர பல துறைகளிலும் ஏற்றம் பெற்று வருகின்றனர்.
- சிறப்புத் தேவையுடையவர்களை ஏனையோர் குறைவான நிலையில் மதிப்பிடுவதைவிடுத்து, மனிதாபிமான உணர்வோடு அவர்களாலும் உயர் நிலைக்கு வரமுடியும் என்ற எண்ணக் கருக்களை சமூகத்தில் விதைக்க வேண்டும்.
- வெள்ளைப்பிரம்புடன் சகோதர சகோதரிகள் வீதிகளில் வரும்போது, நாம் எம்மாலான உதவிகளை அவர்களுக்கு வழங்குவோம். குறிப்பாக வீதிகளைக் கடந்து செல்வதற்கும் அவர்களது தேவைக்கான நிறுவனங்களை இனம் காட்டவும் எம்மால் முடியும்.
- அதேபோன்று வீதிகளில் இவர்களைக் காணும் போது வாகனச் சாரதிகள் வாகன வேகத்தைக் குறைத்தும் அல்லது நிறுத்தியும் இவர்களது போக்குவரத்துக்கு உதவுவதோடு, தங்கள் வாகங்களில் இவர்களை ஏற்றிச் செல்லும் போது அவர்களை உரிய விதமாக அனுசரணையுடன் நடத்தி அவர்கள் சென்றடைய வேண்டிய இடங்களில் அவர்களைக் கவனமாக இறக்கி விட்டும் உதவி புரிய முடியும்.
- விதி கெட்டு வாழ்வைத் தொலைத்தவர் அல்லர் மாற்றுத் திறனாளிகள். இவர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வலுவுள்ளவர்களே!
- "வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்". வல்லமையற்றவனுக்கு ஆயுதமும் புல் என்ற உண்மையை உணர்ந்து செயற்படும் இவர்களுக்கு, சக தோழர்களாகிய நாமும் கொஞ்சம் அனுசரணையாளராய் இருப்போம்.



# வழிகாட்டுவோம்





# மழையே மழையே! மாமழையே!

பொழிக பொழிக மழையே நீ!
பூமி எங்கும் குளிர்ந்திட
வருக வருக மழையே நீ!
வாடிய பயிர்கள் செழித்திட

பெய்க பெய்க மழையே நீ!
பெரும் பயிர்கள் வளர்ந்திட
விரைக விரைக மழையே நீ!
விரைவாய் குளங்கள் நிரம்பிட

வழிக வழிக மழையே நீ!
வயல் நிலங்கள் விரிந்திட
விரைந்து வருக மழையே நீ!
வறிய மக்கள் குறை தீர

# நுண்ணூட்டச் சத்து சுரங்கம்



மனிதன் முதன் முதல் பயிரிட ஆரம்பித்த தாவரங்களுள் முதன்மையானதாக பேரீச்சம் மரங்கள் விளங்குகின்றன. ஏறத்தாழ 8ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக மொசப்பத்தேமியாப் பகுதியில் வாழ்ந்து வந்த மனிதன் முதன் முதலில் பேரீச்ச மரங்களைப் பயிரிட ஆரம்பித்தான் என ஆய்வுகள் கூறுகின்றன. முதலில் மொசப்தேமியா, எகிப்து ஆகிய நாடுகளில் பயிரிட்டு வந்த இந்த பேரீச்சை மரங்கள் பின்னதாக பல நாடுகளுக்கும் பரவின. ஆயினும் இவை பல ஆயிரம் ஆண்டுகள் முன்னதாகவே அரேபியப் பாலை வனங்களில் பயிரிடப்பட்டு வந்தமைக்கும் சான்றுகள் உள்ளதென கூறப்படுகிறது.

இந்த மரங்கள் மிகவும் பசுமையானவை. மிகக் குறைந்த அளவான நீரிலும் வளரக் கூடியவை. ஓராண்டின் பேரீச்சம்பழ உற்பத்தியை நோக்கினால் அண்ணளவாக முப்பது லட்சம் தொன்களாக இருக்குமென கூறப்படுகிறது. பேரீச்சம் பழங்கள் மிகவும் சத்தானவை. உடலுக்கு அதிக சக்தியையும் ஆரோக்கியத்தையும் அளிப்பவை. ஒரு கிலோ பேரீச்சம் பழமானது அண்ணளவாக 3ஆயிரம் கலோரிக்கும் அதிகமான சக்தியைத் தரக் கூடியதெனவும் இந்தத் தொகையானது பிற உணவுகளையும் பழங்களையும் விட பல மடங்கு அதிகமானதாக இருப்பதாகவும் ஆராய்சியாளர்கள் கூறுகின்றனர். இந்தப் பழத்தில் மாச்சத்து பலவிதமான சர்க்கரை ரகங்களாகக் காணப்படுகிறது. சில சக்கரை வகைகள் முழுவதுமே மாப்பொருள்களாக உடல் எளிமையாகவே எடுத்துக்கொள்ளக் கூடியதான விதத்தில் கிடைக்கின்றது. இந்தப் பழத்தில் அதிகளவில் மக்னீசியம் காணப்படுகிறது. இது உடல் ஆரோக்கியத்துக்கு மிகவும் உகந்தது. இந்தப் பழங்களில் எண்ணற்ற ஊட்டச்சத்துக்கள் காணப்படுவதால் இந்தப் பழத்தை நுண் ஊட்டச் சத்து சுரங்கம் என்றும் அழைக்க முடிகிறது.

# தினமும் பிஸ்தா சாப்பிடுங்கள் புற்றுநோயே வராது

நட்ஸ்களில் மிக முக்கியமான ஒன்று பிஸ்தா, இதில் 30 வகையான விற்றமின்கள், நார்ச்சத்துகள், நல்ல கொழுப்பு போன்ற ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன.

மத்திய கிழக்கு பகுதியில் முதன் முதலாக கண்டுபிடிக்கபட்ட பிஸ்தா மரம், உலகின் மிக பழமையான பருப்பு வகை மரங்களுள் ஒன்றாகும். ஏனெனில் இதில் காப்பர், பொட்டாசியம், இரும்புச்சத்து, மக்னீசியம், செலினியம் மற்றும் ஜிங்க் போன்ற கனிமச்சத்துக்கள் உள்ளன. அதுமட்டுமின்றி இதில் மாப்பொருள், புரோட்டீன்கள், கொழுப்புக்கள், நார்ச்சத்துக்கள், பீட்டாக ரோட்டீன், கல்சியம், விற்றமி 'கே', விற்றமின் 'ஏ' மற்றும்



நியாசின் போன்றவை உள்ளதால் இதனை தினமும் சிறிது உட்கொண்டு வருவது உடலுக்கு நன்மையை தரக்கூடியது.

தினமும் பிஸ்தா சாப்பிட்டு வந்தால் நுரையீரல் புற்றுநோய் உள்ளிட்ட பிற புற்றுநோய்கள் வராமல் தடுக்கலாம்.

கையளவு பிஸ்தா உட்கொண்டு வந்தால் குருதியில் சர்க்கரையின் அளவு அதிகரிப்பு கணிசமாகக் குறையும். மேலும், பசியைத் தூண்டி விடும்.

பிஸ்தாவில் குறைந்த அளவு கலோரி, குறைந்த அளவு கொழுப்புடன் அதிக அளவில் நார்ச்சத்து இருப்பதால் உடல் எடை அதிகம் கொண்டவர்கள், பிற உணவை குறைத்து அதற்கு பதிலாக பிஸ்தாவை உட்கொள்ளலாம்.

ஒன்று அல்லது இரண்டு கை நிறைய தினமும் பிஸ்தா சாப்பிட்டு வந்தால் உடலில் உள்ள கெட்ட கொழுப்பு களின் அளவு குறையும். இதிலுள்ள விற்றமின் 'பி' குருதியில் ஈமோகுளோபின் உற்பத்திக்கு மிகவும் அவசியமானது. அதோடு மட்டுமல்லாது கலங்களுக்கு ஒக்ஸிஜனை கொடுக்கிறது. பிரசவித்த பெண்கள் பிஸ்தா பருப்பை பாலுடன் வேகவைத்தோ அல்லது நெய்யில் பொரித்தோ சாப்பிட தாய்ப் பால் நன்கு சுரக்கும். இதிலுள்ள ஆன்டி ஒக்சிஜன்கள் கண்களில் உள்ள திசுக்களுக்கு பாதுகாப்பு வழங்கி கண்களைப் பாதுகாக்கின்றன.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2946 திகதி 23.10.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 08 40 47 75 E
போனஸ் இல. 29
புதன் கிழமை ஜக்பொட் 47, 645 200/=
தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk
2017.10.25 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள் சீட்டிழுப்பு வாரம் 719
சீட்டிழுப்பு திகதி 23.10.2017 திங்கட்கிழமை
G 46 69 70 71
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 43,079,620/-
தொ.பே : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
பச்சை நிற டிக்கட்டுகள் 2017.10.26 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1409 சீட்டிழுப்பு திகதி 2017.10.23
வெற்றி இலக்கங்கள் 17 41 46 53 ஆங்கில எழுத்து B
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 10,920,996/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 54
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2017.10.23
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 65,293,110/-
வெற்றி இலக்கங்கள் 09 14 41 75 ஆங்கில எழுத்து X
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

## 42ஆவது பிறந்தநாளில் 165 ஆம் நாள் நினைவை நினைத்து



தோற்றம் 24 . 10 . 1975

மறைவு 13 . 05 . 2017

சைவப்புலவர், சைவசிந்தாந்த பண்டிதர், சைவ சித்தாந்த முதுகலைமாணி [M.A], ஆன்மீகச் சொற்பொழிவாளர், பிரபல ஆசிரியர்

### நித்தியானந்தன் தசீதரன்

[நித்தியதசீதரன், N.T.தரன்]

நூறென்ன நூறாயிரம் நாள்கள்தான் கடந்து போனாலும்
உங்களை இழந்த தவிப்பு மாறாது
கத்தாமல் கதறாமல்
சத்தம் சந்தடியில்லாமல்
சந்நிதியான் பாதமதில்
மௌனமாய்....
கணமெல்லாம் துடிக்கின்ற
நீ நேசித்த உறவுகளின் மனக் குமுறல்கள்
உனக்கு மட்டும்தான் புரியும்..
எம் குடும்பத்து ஆறுதலே நீதானே...?
இனி யார்தான் ஆறுதல் எமக்கு????
உங்கள் ஆத்மா இறைநிழலில்
பேரின்பப் பெருவாழ்வுடன் எம்மையும் ஆசீர்வதிப்பீர்களா?

பன்னாலை, தெல்லிப்பழை.
021 221 5702

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

மண்ணில் 28 . 02 . 1968



விண்ணில் 22 . 10 . 2017

### கந்தையா செந்தூரன்

மாரீசன் கூடல், இளவாலையைச் சேர்ந்த கந்தையா செந்தூரன் (22.10.2017) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் கனகாம்பிகை தம்பதியரின் சிரேஸ்ட புத்திரரும் காலஞ்சென்றவர்களான துரைராசசிங்கம் தம்பதியரின் மருமகனும் சுகந்தி அவர்களின் அன்புக்கணவரும் சமீரணன் (யா/மகாஜனக்கல்லூரி) அவர்களின் பாசமிகு தந்தையும் சி.றோகினி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்), உ. மாதினி ( ஆசிரியர்), க. காசிநாதன் (பொறியியலாளர்) ஆகியோரின் சகோதரரும் து. கிருபாகரன் (பொறுப்பதிகாரி பிரதேச செயலகம், சங்கானை), சி. வசந்தி ,இ. ஜெயந்தி, து. கருணாகரன் (ப.நோ.கூ.ச.மானிப்பாய்), த. சிவலிங்கம் (ப.நோ.கூ.ச. சங்கானை), வீ. உதயகுமார் (ஆசிரியர்), நிருபா (கலாசார உத்தியோகத்தர்), சி.சிவசண்முகநாதன் (ஓய்வு பெற்ற கிளை முகாமையாளர் ப.நோ.கூ.சங்கம்), கி. ஜெயதாரணி (ஆசிரியர்), க. இராசரத்தினம், க. சுமதி (ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2017)செவ்வாய்க்கிழமை மு.ப.9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டியவளை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

## மரண அறிவித்தல்கள்

### சரவணமுத்து சடாட்சரம் பத்தர்(செட்டியார்)



பிறப்பு 22.10.1938 இறப்பு 23.10.2017

951, K.K.S.Road, தட்டா தெரு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சரவணமுத்து சடாட்சரம் பத்தர் (செட்டியார்) நேற்று (23.10.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தவமணிதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இராசேந்திரம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் புவனேந்திரன் (ரவி - சடாட்சரம் நகைஅகம்), ரவிச்சந்திரன் (சந்திரன் - வட்டக்கச்சி கோமகள் நகைஅகம்) சுலோசனாதேவி (சுசீலா), தவரஞ்சினி (ரஞ்சி - டென்மார்க்), தங்கராணி (ராணி), பரமேஸ்வரி, இராஜேந்திரன் (ரங்கன் - ரங்கன் நகைஅகம்), யசோதாராணி (யசோ - ஹொலன்ட்) ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்ற ஜெயலட்சுமி (லதா) சிவமணி (ரோகினி), முரளிதரன், திருச்செல்வம் (டென்மார்க்), கருணாகரன், இராசநாயகம், சர்மிளா (சர்மி), செல்வராசா (ஹொலன்ட்) ஆகியோரின் அன்புமாமனும் கந்தசாமி, காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் மகேஸ்வரி, தங்கராசா ஆகியோரின் சகோதரனும் நிவேஜிதன் (விரிவுரையாளர்), பானுப்பிரியா, அமல்ராஜ், சுஜன், ஹரிசாந், சர்மிகா, சபரிசன், தனுசுஜன், துவாரசாந், சாருகேஷ், ஹரி, வினோத், ஹரினி, அஜீ, பிறிம்ஜா ஆகியோரின் பேரனும் வனிஷ்காவின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2017) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
-077 978 9332

திருமதி

### யோகேஸ்வரி சிவதாசன்



யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதியைப் பிறப்பிடமாகவும் ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி சிவதாசன் கடந்த 21.10.2017 சனிக்கிழமையன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜதுரை (முன்னாள் பிள்ளையார் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்) - சிவயோகம் (கிளி) தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான குகதாசன் சிவபாக்கியம் தம்பதிகளின் மருமகளும் குகதாசன் சிவதாசனின் (முகாமைத்துவ உதவியாளர் யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபார சங்கம்) அன்பு மனைவியும் நிலக் ஷனின் பாசமிகு தாயாரும் ரஞ்சிதமலர்(லண்டன்), இரட்னேஸ்வரன் (பிள்ளையார் ஸ்ரோர்ஸ் பிள்ளையார் இன் உரிமையாளர்), செந்தமிழ்ச்செல்வி (லண்டன்) காலஞ்சென்ற சாந்தநாயகி மற்றும் வதனி(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகராஜா(லண்டன்), அமுதினி(இலங்கை), தனஞ்செயன் (லண்டன்), ரட்னசோதி(லண்டன்), சட்குனேஸ்வரன்(கனடா), கமலதாசன் காலஞ்சென்ற ஈசன் மற்றும் விமலதாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனியும் கமலாதேவி, கலாவதி, சத்தியவதி ஆகியோரின் சகோதரியும் ஜனனி, ஆரனி(லண்டன்), ரிஷிகேஷன், ஆரனி(இலங்கை) ஆகியோரின் சித்தியும் சர்மிளா, பவனா, நிஷா, சிவகாமி, அபிராமி, ராகவன், ஜதிகா, யாதவன், கம்சிகா, பிரியங்கா, விபூஷ்னா, உரேஷ், ஶ்ரீகணன், யதுகுலன் ஆகியோரின் பெரியதாயும் பிரியங்கா, மயூரிப்பிரியா, காவியன் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(25.10.2017) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (இல 368, உஸ்மானியர் கொலேஜ் வீதி, ஓட்டுமடம்) இல் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குகதாசன் சிவதாசன் (கணவர்) - 077 658 9443
இ.இரட்னேஸ்வரன் (சகோதரன்) - 077 722 2715

## பெறுகை அறிவித்தல்
## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.
## குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை - 2017

1) தலைவர், உள்ளூராட்சி மன்றப் பெறுகைக்குழு, வலி தென்மேற்கு பிரதேச சபையினால் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளிற்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
2) கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் சீடா (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்
3) தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் பொதுநிதிச்சுற்றறிக்கை இல 04/2016(1) இற்கமைவாக இவ் விலைமனுக்கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை வடக்கு மாகாணத்திற்குள் கொண்டுள்ள கேள்வியாளருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4) தேவையான தகைமைகள்,கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule ) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5) ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை, மானிப்பாய் (தொலைபேசி இல - 021-2255381) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
6) ஆங்கில மொழியிலான பூரணமான கேள்வி ஆவணமொன்றை தலைவர், உள்ளூராட்சி மன்றப் பெறுகைக் குழு, வலி தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் எனும் இடத்தில் 24 ஒக்டோபர் 2017 ம் திகதியிலிருந்து 06 நவம்பர் 2017 வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் பார்வையிடவும், மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000/- மற்றும் வரி செலுத்தி பெற்றுக்கொள்ளவும் முடியும்.
7) கேள்வி இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படவேண்டும். தலைவர், உள்ளூராட்சி மன்றப் பெறுகைக்குழு, வலி தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு 07 நவம்பர் 2017 ம் திகதி பி.ப 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும்.
8) கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் / அவரது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9) கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
10) கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் 31 ஒக்டோபர் 2017ம் திகதி பி.ப 14.30 மணிக்கு வலி தென்மேற்கு பிரதேசசபை மண்டபத்தில் நடைபெறும்.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் - 2017

| இல | வேலைவிபரம் | மதிப்பீட்டு தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு(ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| 01 | கூழாவடி வீதி புனரமைத்தல் | 4.74 | 1 ½ மாதம் | C8 (வீதி வேலை) | 47,000.00 | 22.12.2017 |

தலைவர்,
உள்ளூராட்சிமன்றப் பெறுகைக்குழு,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய், வடக்குமாகாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கல்லூரியின் ஆசிரியை

**திருமதி இராகினி விஜயரத்தினம்**

அவர்கள் கல்வி அமைச்சினால் 2017 ஆம் ஆண்டுக்கான சிறந்த ஆசிரியருக்கான குரு பிரதீபா பிரபா விருதினை 23.10.2017 அன்று பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பெற்றதையிட்டு அவரை மனமகிழ்ச்சியுடன் வாழ்த்தி மகிழ்கின்றோம்.

Best Wishes

கல்லூரிச்சமூகம்,
யா /கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி கொடிகாமம்.

## மரண அறிவித்தல்

### திருமதி தனலட்சுமி ஆறுமுகம்



பதுளையைப் பிறப்பிடமாகவும் 6/11, கன்னாதிட்டி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனலட்சுமி ஆறுமுகம் நேற்று (23.10.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாசாரி-தெய்வானை தம்பதியரின் மகளும் வைத்திலிங்கம் - மீனாட்சி தம்பதியரின் மருமகளும் ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் ராயு, சிங்காரம், நடராச், அமராவதி, முருகேஸ், நவரட்ணம், ஆனந்தன் ஆகியோரின் சகோதரியும் திலகவதி, ஜெயராச், றயனி ஆகியோரின் தாயும் விக்னேஸ்வரன் சிறிதேவி, தயாபரன் ஆகியோரின் மாமியும் சவர்சன், ஜீவிதா விஜயராச் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2017) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் கன்னாதிட்டியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**6/11, கன்னாதிட்டி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 476 6357**

## மரண அறிவித்தல்



# முத்துலிங்கம் யோகராணி

**(றதி அக்கா)**

குளங்கரை ஒழுங்கை, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் காந்தி மாவத்தை, வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துலிங்கம் யோகராணி நேற்று (23.10.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துலிங்கம் மற்றும் சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் ராதாகிருஷ்ணன் (ஜேர்மன்), ரகுச்சந்திரன் (சுவிஸ்), நந்தினி (ஜேர்மன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுநாள் (26.10.2017) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**குளங்கரை ஒழுங்கை,**
**கொக்குவில் கிழக்கு.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 404 9567, 076 624 3121**

## மரண அறிவித்தல்.

**தோற்றம்**
**20 . 04 . 1943**



**மறைவு**
**20 . 10 . 2017**

# சிவஞானம் பேரின்பநாதன்

(ஓய்வு பெற்ற விவசாய உத்தியோகத்தர் (விரிவாக்கம்)
தர்மகர்த்தா, கொண்டலடி வைரவர் தேவஸ்தானம் நல்லூர்)

ஆடியபாத செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் பேரின்பநாதன் (20.10.2017) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவஞானம் (உரிமையாளர் - ஈஸ்வரி மில், கல்வியங்காடு) சிவபாக்கியம் (முன்னாள் ஆசிரியை) தம்பதியரின் அன்பு இரண்டாவது மகனும் காலஞ்சென்ற செல்லத்துரை (முன்னாள் அதிபர்) மற்றும் புவனேஸ்வரி தம்பதியரின் அன்புமருமகனும் செல்வராணியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற இராஜேஸ்வரன் மற்றும் ஜெயகௌரி, பாலஸ்கந்தா (கனடா), ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்புச்சகோதரரும் மைதிலி (இந்தியா - முன்னாள் விவசாயப் போதனாசிரியை), சிவதர்ஷினி (ஆசிரியை, கிளி/ கனகாம்பிகைக்குளம் அ.த.க. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஷவராஜ் (கணினிப் பொறியியலாளர் இந்தியா), பாலகுமார் (பல் வைத்தியர் - கிளிநொச்சி வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற ஸ்ரீகாந்தா மற்றும் ஜெயகுமார் (ஓய்வு பெற்ற உதவிக்கல்விப்பணிப்பாளர்), வசந்தகுமார் (ஜேர்மனி), சாந்தகுமார் (பதில் பணிப்பாளர் SLSI) ,கமலாதேவி (ஓய்வு பெற்ற ஆசிரியை), செல்வராஜு, சுகந்தி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் கல்யாணி - ஜெகன்மோகன் (கனடா), மயூரன் - தர்ஷகா (கனடா), வசீகரன் (கணக்குப் பதிவாளர் நிதிக்கிளை யாழ். பல்கலைக்கழகம்) - கல்யாணி (ஆசிரியை), பரதன்(Cost Control Engineer) ஆகியோரின் சித்தப்பாவும் சிவஜீவிதன் காலஞ்சென்ற சிவகானன், வைஷ்ணவி (கனடா) ஆகியோரின் பெரியப்பாவும் ஜனனி - சிவரூபன் (சிங்கப்பூர்), விபூஷன் (Do - கிளி/ கச்சேரி) - விஜிதா ஆகியோரின் மாமனும் கிருஷிக்கா, அஞ்சனா, அர்ஜுன், பிரவின், அபிநயன், அபிநயா, விதுரன், ஜெய்ஷ்ணவி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (26.10.2017)வியாழக்கிழமை ந.ப. 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.216 /5, ஆடியபாத செங்குந்தா வீதி,**
**திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## ஐ.நா...

பொறுப்புக்கூறல் வாக்குறுதியை வழங்கியது. இலங்கை இணை அனுசரணை வழங்கிய ஐ.நா. தீர்மானத்திலும் அந்த வாக்குறுதி உள்ளது. பொறுப்புக்கூறல் பொறிமுறையை முன்னெடுப்பதில் இலங்கை அரசின் தாமதமானது பல்வேறு துறைகளில் கேள்விகளை எழுப்புவதாக உள்ளது. நம்பகத்தன்மையை குறைப்பதாகவும் காணப்படுகின்றது.

பொறுப்புக்கூறல் பொறிமுறையின் செயற்பாட்டில் தாமதமானது ஆபத்துக்களை ஏற்படுத்தும் என்பதையே பல்வேறு நாடுகளின் அனுபவங்கள் கற்றுத்தருகின்றன.

நிலைமாறுகால நீதி தொடர்பான பொறிமுறை என்பது வேட்டையாடுவது அல்ல. இது களையெடுப்பும் அல்ல. பாதுகாப்புத் தரப்பினரை நீதிமன்றம் முன் கொண்டுவரமாட்டோம் என்று பல்வேறு தரப்பினர் கூறுவதை அவதானிக்கின்றோம். இது நிலைமாறு கால நீதி தொடர்பான ஒரு தவறான நோக்கத்தை மக்களுக்கு வழங்கிவிடும் அபாயத்தைக் கொண்டுள்ளது. பாதுகாப்பு நிகழ்ச்சி நிரலுக்கு எதிரான ஒரு பொறிமுறை இது என்று காட்டப்படுவதற்கு முயற்சிக்கப்படுகிறது.

கால அட்டவணையுடன் கூடிய பரந்துபட்ட மற்றும் சுயாதீனமான நிலைமாறுகால நீதிப்பொறிமுறையை அரசு உடனடியாக முன்வைக்க வேண்டும். அந்தப் பொறிமுறையானது உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீள் நிகழாமையை உறுதிப்படுத்தலை உள்ளடக்க வேண்டும். நல்லிணக்கப் பொறிமுறை தொடர்பாக மக்க ளின் கருத்துக்களைப் பெறுவதற்காக நியமிக்கப்பட்ட செயலணியின் பரிந்துரைகளை அரசு கவனத்திற் கொள்ளவேண்டும் - என்றார். (உ-5,31)

## பயங்கரவாத...

இவ்வாறு ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் பப்லோ தெரிவித்தார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ள நிலையிலும், தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் மற்றும் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்ற குரல்கள் வடக்கு கிழக்கில் பலமாக ஒலித்துவரும் நிலையிலும், ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் நேற்று மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

கொழும்பில் பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இராணுவத்தினர் வர்த்தகச் செயற்பாடுகளில் ஈடுபடுவதை நிறுத்தவேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணப்படுகின்ற இராணுவப் பிரசன்னத்தைக் குறைக்கவேண்டும்.

இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ள காணிகள் தொடர்பான ஒரு வரைபடத்தை உடனடியாகத் தயாரிக்கவேண்டும். மீளளிக்கப்படாத காணிகளுக்கு இழப்பீடு வழங்குவது அவசியமானதாகும். இது தொடர்பில் இராணுவத்தரப்பினர் மட்டும் முடிவெடுக்காத வகையிலான திட்டம் வேண்டும்.

பாதிக்கப்பட்ட சமூகங்களின் நன்மை கருதி உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு நிறுவப்படவேண்டும். இதற்கு ஒரு பரந்துபட்ட ஆணை வழங்கப்படவேண்டும். இதற்கான சட்டவரைவு விரைவாகக் கொண்டு வரப்பட வேண்டும். உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவுக்கான ஆணையாளர் நியமனத்தில் பாதிக்கப்பட்டோர் இடம்பெறுவதை உறுதிப்படுத்தவேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்கள் தமது உயிரிழந்த உறவுகளை நினைவுகூருவதற்கான உரிமையை உறுதிப்படுத்த வேண்டும். நினைவுகூரும் செயற்பாடானது இழப்பீடு பெறுவதைப் போன்ற ஒரு உணர்வைக் கொண்டது. அரசமைப்பு மறுசீரமைப்புச் செயற்பாடானது சரியான முறையில் முன்னெடுக்கப்படுகின்றது.

எனது அறிக்கையில் நீதித்துறை மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் தொடர்பாக பல பரிந்துரைகளை முன்வைக்கவுள்ளேன் - என்றார். (உ-5,31)

## 4 கிலோ...

கிளிநொச்சி, ஒக். 24

4 கிலோ 65 கிராம் கஞ்சாவைக் கடத்தினார் என்ற குற்றச்சாட்டில் ஆழியவளையைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

பளை இயக்கச்சிச் சந்தியில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார். வடமராட்சி கிழக்கு ஆழியவளையிலிருந்து அவர் திருகோணமலைக்கு கஞ்சாவைக் கடத்திச் சென்றுகொண்டிருந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர் இத்தகைய செயற்பாடுகளுக்கு உடந்தையாக இருந்துவருகிறார் என்றும் பொலிஸார் கூறினர்.

கைதாகியிருக்கும் பெண்ணுக்கு 2 பிள்ளைகள் உள்ளனர். கணவன் வேறுதிருமணம் செய்துள்ளார். குறித்த பெண்ணே குடும்பத்தைக் கொண்டு நடத்துகிறார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கட்டுப்பாட்டிலுள்ள உடனடி முறியடிப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி உபபொலிஸ் பரிசோதகர் க.ஜெயந்தன் தலைமையிலான குழுவினரே பெண்ணைக் கைது செய்து கடத்தலை முறியடித்தனர். குழுவில் குலதீபன், ந்துல, குமணன் ஆகியோரும் இணைந்திருந்த ார்.

விசாரணை மற்று ம் நீதிமன்ற நடவடிக்கைக்காகக் கஞ்சாவுடன் அ ர் பளைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார் என்று பொலிஸார் கூறினர். (உ-4,6)

## கணித...

என்ற இடத்தில் உள்ள கல்வி தலைமை அபிவிருத்திப் பயிற்சி மையத்தில் இந்தப் போட்டிகள் நேற்று இடம்பெற்றன. ஒரே வினாக்கள் இரண்டு மொழிகளிலும் கேட்கப்படும் அவற்றுக்கு வடக்கு மாகாண மாணவர்கள் குறிக்கப்பட்ட விநாடிக்குள் உரிய பதிலளித்து முதலிடம் பெற்றனர்.

நேற்றைய போட்டியில் ஏ.ஜி.டிரோன் யாழ்ப்பாணம் சென்.பற்றிச் ஸ் கல்லூரி, எம்.பரத்ராஜ் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, எஸ்.தர்சா - வவுனியா இறம்பைக்குளம் பெண்கள் மகா வித்தியாலயம், பி.யதுநந்தனசர்மா - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கே.வாகீசன் - வவுனியா விபுலானந்தாக் கல்லூரி, ஜே.நிலவன் - பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, ஆர்.எஸ்.டினோசன் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, ஏ.கேசவி - யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

அவர்கள் வடக்கு மாகாண கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஏ.சி. வலன்ரைன் தலைமையில் சென்றிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் இடம்பெற்றிருந்த ஏனைய இரண்டு பிரிவினருக்கான போட்டியிலும் வடக்கு மாகாணம் முதலிடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-4)

## மகாநாயக்கர்களை...

ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் நடத்தப்படும் என்று அரசும், அமைச்சர்களும் நாளாந்தம் அறிவிப்பு விடுக்கின்றபோதிலும் அது நடந்தபாடில்லை. அச்சம் காரணமாகவே இழுத்தடிக்கிறார்கள். எப்போது தேர்தல் அறிவிக்கப்பட்டாலும் அதை எதிர்கொள்வதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம். தேர்தலில் பெரும் வெற்றியையும் பெறுவோம்.

புதிய அரசமைப்பு அவசியமில்லை என்று மல்வத்த, அஸ்கிரிய, அமரபுர, ராமாண்ய பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் தெரிவித்துள்ளனர். புதிய அரசமைப்புத் தயாரிப்புக் குறித்து விழிப்பாக இருக்குமாறு கத்தோலிக்க பீடமும் ஆலோசனை வழங்கியுள்ளது.

கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் பலவந்தமாக புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதன் மூலம் நல்லிணக்கத்தை ஏற்படுத்திவிட முடியுமா என்பது கேள்விக்குறியே.

அதிகாரப் பகிர்வு ஊடாக நல்லிணக்கத்தை ஏற்படுத்தவே புதிய அரசமைப்பு கொண்டுவரப்படுகின்றது என்று அரசு கூறுகின்றது. பெரும்பான்மை மக்கள் அதைக் கடுமையாக எதிர்க்கின்றனர் -என்றார். (உ-5)

## நேரடி...

தொடர் நாடகத்தைப் போல் ஊடகங்கள் செயற்படுவது வெறுக்கத்தக்கதாகும். வேடிக்கையான அரசியல் காட்சிகளைக் காட்டி மக்களைப் போலியான அரசியலின் பக்கம் திருப்பவே முயற்சிக் கின்றனர்.

தொலைக்காட்சியில் ஒரு மணிநேரம் ஆழமான அரசியல் கலந்துரையாடல் செய்யவேண்டும். பத்திரிகைகளும் மக்கள் மத்தியில் சென்றடையும் அரசியல் பத்திகளை வெளிப்படுத்த வேண்டும். ஊடகங்களில் சிறிது காலம் தொடர்ச்சியாக ரவி கருணாநாயக்கவை மட்டும் தலைப்புச் செய்தியாக வைத்திருந்தனர். அதன் பின்னர் விஜயதாச ராஜபக்சவை பிடித்துக் கொண்டனர்.

இப்போது அரசமைப்புப் பற்றி பேசிக் கொண்டுள்ளனர். எமது நாடு பொருளாதார ரீதியாக படு வீழ்ச்சியடைந்துள்ளது. அதை யாரும் கண்டுகொள்ளவில்லை. நாடு பெரிய கடன் நெருக்கடியில் உள்ளது. முன்னைய ஆட்சியின் போது வாங்கிய கடன்களின் தொகை மிக அதிகமாக உள்ளதாக இந்த அரசு கூறுகின்றது. ஆனால் ஆட்சியைப் பிடிக்கும்போது பன்னாட்டு நிதிகள் குவிகின்றன, நன்கொடைகள் வருகின்றன என்று இவர்கள் கூறினார்கள். அவை அனைத்தும் எங்கே?

இன்று மக்கள் நோயாளிகளாக மாறி வருகின்றனர். கல்வியற்ற சமூகம் உருவாகி வருகின்றது. ஊழல், குற்றங்கள் அதிகரித்து வருகின்றன. இந்தத் தலைவர்கள் மூலம் உருவாக்கப்பட்டுள்ள சமூகம் இவ்வாறே அமைந்துள்ளது. இவற்றை எல்லாம் விட்டு வெறுமனே நாடக அரசியலில் அனைவரும் மூழ்கியுள்ளனர்.

புதிய அரசமைப்பு நாட்டினைப் பிரிப்பதாகவும், இனவாதத்திற்கு வாய்ப்புகளைக் கொடுப்பதாகவும் கூறுவதுடன் மக்கள் விடுதலை முன்னணி அதற்குத் துணை போவதாகவும் கூறுகின்றனர்.

எம்மை பிரிவினைவாதிகள் என்று கூறிக்கொண்டு மகிந்த, விமல் போன்றவர்களே பிரிவினைவாதிகளின் பக்கம் சேர்ந்துள்ளனர். அரசமைப்புக் குறித்து விவாதத்துக்கு எம்மை அழைக்கின்றனர்.

அரசமைப்புக் குறித்து விவாதம் செய்ய நான் தயார். மகிந்த ராஜபக்ச என்னுடன் விவாதத்துக்கு வரவேண்டும். அதற்கான தைரியம் இருக்கும் என்றால் அவர் என்னுடன் விவாதத்திற்கு வரலாம். தேசப்பற்றாளர்கள் என்று கூறிக்கொண்டு அவர்கள் இந்த நாட்டின் சொத்துக்களை கொள்ளையடித்து நாட்டை நாசமாக்கிய அனைத்துமே எமக்கு நன்றாகத் தெரியும். கொலைகள், கொள்ளைகள் இவர்கள் செய்த அனைத்துமே எமக்கு நன்றாகத் தெரியும். இவை அனைத்தையும் வெளிப்படுத்தி இவர்களை மக்கள் முன்னிலையில் நிர்வாணப்படுத்தி முகமூடிகளை கிழித்தெறிய நாம் தயார். அதற்காக எந்த மேடையிலும் இவர்களுடன் நாம் விவாதிக்கத் தயாராக உள்ளேன் - என்றார். (உ-5,31)

## பாதாள...

பாதாள உலகக் குழு உறுப்பினரான நாவலகே குசான் தக்சில குரே கொல்லப்பட்டார்.

மேல் மாகாணசபை உறுப்பினர் ரந்தீர் றொட்ரிக்கோ உள்ளிட்ட 7 பேர் பாதாள உலகக் குழுவுடன் இணைந்து தாக்குதலுக்குத் தயாராக நின்றிருந்த னர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் பயணித்த வான் ஒன்றும், இரு கைத்துப்பாக்கிகள், ஒரு விளையாட்டுத் துப்பாக்கி, கைக்குண்டொன்று என்பன மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார். கொல்லப்பட்ட பாதாள உலகக் குழு உறுப்பினர் குரே, பாரத பிரேமசந்திர படுகொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பாதாள உலகக் குழு உறுப்பினர் தெமட்டகொட சமிந்தவை கொலைச் செய்ய வருகை தந்த முக்கியநபர் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

நேற்றைய அதிரடித் தாக்குதல் தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது:

நேற்று நண்பகல் பாடசாலை அருகில் பாதாள உலகக் குழு உறுப்பினர்களின் நடமாட்டம் இருப்பதாக பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையின் பாதாள உலக ஒழிப்புப் பிரிவுக்கு தகவல் கிடைத்தது. சிறப்பு பொலிஸ் குழு சம்பவ இடத்துக்கு விரைந்தது.

பாதையில் இருவர் நின்றுகொண்டிருக்க, வாகனம் ஒன்றில் மேலும் சிலர் அந்தப் பகுதிக்கு வந்துள்ளதை சிறப்பு அதிரடிப் படையினர் அவதானித்தனர். அதிரடிப் படையினரும் அந்த இடத்தை அண்மிக்கவே, அலுத்பொல குரே எனும் பாதாள உலகத் தலைவன் பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினர் மீது கைத் துப்பாக்கியால் சுட்டுள்ளார். துப்பாக்கிச் சன்னம் அதிரடிப் படையின் கொன்ஸ்டபிள் ஒருவர் அணிந்திருந்த பாதுகாப்புக் கவசம் மீதும் பட்டுள்ளது. அதிரடிப் படையினர் பதில் தாக்குதல் நடத்தினர். குரே கொல்லப்பட்டார்.

வானில் வந்த அறுவரும், வீதியில் நின்றிருந்த ஒருவருமாக 7 பேரை அதிரடிப் படையினர் கைது செய்தனர். அவர்கள் திவுலப்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (உ-5,31)

## ஜயசூரிய...

னையாக உருவெடுக்கக்கூடும். இது கலப்புப் பனிப்பாறையின் முனைப் பகுதியைப் போன்றது. இவ்வாறு ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிரிப் எச்சரித்துள்ளார்.

இலங்கைக்கான இரு வாரப் பயணத்தின் முடிவில் கொழும்பில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜெகத் ஜயசூரிய எதிர்கொண்டது போன்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு இல்லையேல் மிகவும் பாரதூரமானதாக அமைந்து விடும். இராணுவத்தின் முன்னாள் அங்கத்தவரொருவருக்கு எதிராக பிரேசிலில் அண்மையில் தொடரப்பட்ட வழக்கானது பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவதற்கு உள்நாட்டிலோ அன்றேல் வெளிநாட்டிலோ நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை காண்பிக்கின்றது.

என்னுடைய அபிப்பிராயத்திற்கு அமைவாக இலங்கை அரசானது ஆயுதப்படையினரின் முழுமையான ஆதரவுடன், ஏன் வினைத்திறனுடன் கூடிய நம்பகத்தன்மைமிக்க நிலைமாறு கால நீதிக் கொள்கையை நிறுவ வேண்டும். இதற்கான மற்றுமொரு காரணமாக இது அமைந்துள்ளது. இதன் மூலமாக ஆயுதப்படையினர் அதிகமான அனுகூலங்களைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன - என்றார். (உ-5,31)

## அரியாலை...

மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் கே.ஈ. ஆர். எல்.பெர்ணான்டோவின் உத்தரவுக்கு அமைய, யாழ்.பொலிஸ் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பாலித்த பெர்ணான்டோவின் நேரடிக் கட்டுப்பாட்டில் யாழ். மூத்த பொலிஸ் அத்தியட்சர் விஜித்த குணரத்னவின் ஆலோசனையின் கீழ் செயற்படும் வகையில் யாழ். தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் மூன்று பொலிஸ் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை முதல் இந்த மூன்று பொலிஸ் குழுக்களும் வெவ்வேறு கோணங்களில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார். (உ-5,31)

## ஒருமித்த...

ஒன்றரை மணி நேரம் நடைபெற்றது. 'ஏக்கிய ராஜ்ஜிய', 'ஒருமித்த நாடு' ஆகிய சொற்பதங்கள் சம்பந்தமாக கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது.

'ஏக்கிய ராஜ்ஜிய' என்ற சிங்களச் சொற்பதத்தின் சரியான மொழிபெயர்ப்பு 'ஒருமித்த நாடு' அல்லவெனச் சுட்டிக்காட்டப்பட்டது. இடைக்கால அறிக்கையில் அவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பது தவறு என்றும் கூறப்பட்டுள்ளது.

'ஒருமித்த நாடு' என்பது பல பிராந்தியங்களை இணைந்த நாட்டையே குறிக்கும். இடைக்கால அறிக்கையில் கூறப்பட்டுள்ள ஒருமித்த நாடு என்பது ஏக்கிய ராஜ்ஜியவுக்குப் பொருந்தாது. இது ஒற்றையாட்சியை நீக்கும் அரசின் செயற்பாடு. இது தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்துவோம் என்று சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (உ-5)

## புலனாய்வாளர்களே...

என்று இது தொடர்பில் உதயன் பத்திரிகைக்குப் பதிலளித்த யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி காமினி ஹேவாவிதாரண தெரிவித்தார்.

அரியாலையில் நேற்றுமுன்தினம் மாலை நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் இளைஞன் ஒருவன் உயிரிழந்திருந்தான். புலனாய்வுப் பிரிவின் துப்பாக்கிச் சூட்டிலேயே இளைஞன் உயிரிழந்தாகப் பெரும் குற்றச்சாட்டு ஒன்று முன்வைக்கப்படுகிறது. இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் உதயன் வினவியது.

"இந்தப் பிரதேசத்தில் மணல் அகழ்வு நடைபெறுவது வழக்கம். மணல் அகழ்வு சுற்றிவளைப்புக்கு எமது அதிகாரிகள் சென்றனர். அதனை மக்கள் தவறாக எண்ணியுள்ளனர். ஆனால், இந்தச் சம்பவம் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டதா என்பதை ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ மாட்டேன். மேலும், துப்பாக்கிச் சூடு தொடர்பில் சில தட்யங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. விசாரணைகளை முன்னெடுத்துள்ளோம்" - என்றார்.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் தவிர்ந்த வேறு படைகளின் புலனாய்வு அணி ஒன்று இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளதா என்பது குறித்த விசாரணைகள் ஏற்கனவே நடந்து வருகின்றன என்று உதயன் அறிந்தான். ஹெறோயின் போதைப் பொருள் கடத்தப்படுவதாகக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து அந்தப் பகுதிக்கு வந்த புலனாய்வாளர்கள் இந்தச் செயலில் ஈடுபட்டிருக்கலாம் என்கிற ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன. ஆனால், பொலிஸ் தரப்பிலிருந்து இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. (உ-5)

# நாவாந்துறை றோ.க.வித்தி. மிகவும் இலகுவான வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 24
மைலோ கிண்ணத்துக்காக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலய அணி வெற்றி பெற்றது.
சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாவந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலய அணியை எதிர்த்து சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி மோதியது. ஆட்டநேர முடிவில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலய அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)





## வென்றது கலைமதி

நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரில் கலைமதி அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
காமாட்சி அம்பாள் வி.கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் புத்தூர் வளர்மதி வி.கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதியது. 3:1 என்ற செற் கணக்கில் கலைமதி அணி வெற்றிபெற்றது. (ம-23)

# நெல்லியடி மத்தி. வென்றது வெள்ளி

யாழ்ப்பாணம், ஒக். 24
கன்னங்கரா ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான தேசிய மட்ட கால்பந்தாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி வெள்ளிப் பதக்கத்தைச் சுவீகரித்தது.
கொறன தக்சிலா மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு விக்கிரமபாகு மத்திய கல்லூரி அணி மோதியது. ஆட்டத்தில் ஆரம்பத்தில் நெல்லியடி மத்தி சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்தியது. நீண்ட நேரத்தின் பின்னர் கொழும்பு விக்கிரமபாகு அணியின் சார்பாக முதலாவது கோல் பதிவானது. முதல் பாதியின் முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் விக்கிரமபாகு அணி முன்னிலை பெற்றது. இரண்டாம் பாதியின் ஆரம்பத்தில் பதிலடி கொடுத்து கோல் கணக்கை சமன்செய்தது நெல்லியடி மத்தி. ஆட்டம் முடிவடைவதற்கு இரண்டு நிமிடங்கள் இருக்கும்போது கொழும்பு விக்கிரமபாகு மத்திய கல்லூரி அணியின் சார்பாக மற்றுமொரு கோல் பதிவாக அந்த அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. நெல்லியடி மத்திய கல்லூரி அணிக்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது. (ம-422)

# அரையிறுதியில் அம்பாள் அணி

நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் வழக்கம்பரை அம்பாள் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வழக்கம்பரை அம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதியது. ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் இரண்டு செற்களையும் 25:17, 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது அம்பாள் அணி. மூன்றவது செற்றை சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி 23:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது. நான்காவது செற்றை வழக்கம்பரை அம்பாள் அணி 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியதை அடுத்து அந்த அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட தடகளத் தொடரில் 14 வயது ஆண்களுக்கான நீளம் பாய்தலில் தங்கப் பதக்கம் வென்ற உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி மாணவன் செ.செந்தீஸ் கல்லூரிச் சமூகத்தால் அண்மையில் மதிப்பளிக்கப்பட்டார். கல்லூரி அதிபர் சு.கிருஸ்ணகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சிவன் பவுண்டேசன் நிறுவுநர் வேலாயுதம் கணேஸ்வரன், வடமராட்சி வலய உடற்கல்விப் பணிப்பாளர் க.செல்வக்குமரன், ஆசிரிய ஆலோசகர் க.பாக்கியநாதன் மற்றும் அயல்பாடசாலை அதிபர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-108)

# மைலோ கிண்ண கால்பந்து முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக். 24
மைலோ கிண்ணத்துக்காக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில், வலிகாமம் லீக்குக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையே நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சில ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு.
சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கல்வயல் விநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பிறைட் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் இரண்டு அணியினரும் தலா ஓர் கோலைப் பெற்றதால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த ஆட்டத்தில் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பிறைட் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் பிறைட் ஸ்ரார் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.



மகாத்மா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் மகாத்மா அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சில்வெஸ் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. 3:0 என்ற கோல் கணக்கில் யங்ஹென்றிஸ் அணி வெற்றிபெற்றது.
வட்டுக் கோட்டை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அண்ணா விளையாட்டுக் கழக அணி மோதிய ஆட்டத்தில் அண்ணா விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
நவாலி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கண்ணகி விளையாட்டுக் கழக அணி மோதிய ஆட்டத்தில். நவாலி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
சில்வெஸ் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அராலி மாவத்தை விளையாட்டுக் கழக அணி மோதிய ஆட்டத்தில், நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த ஆட்டத்தில் அராலி மாவத்தை விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மாதகல் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதிய ஆட்டத்தில், மாதகல் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. காக்கை தீவு ஆதவன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பாரதி விளையாட்டுக் கழக அணி மோதிய ஆட்டத்தில் காக்கைதீவு ஆதவன் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# வர்ண இரவு விருதுக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஒக். 24
வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் வர்ண இரவுகள் விருது வழங்குவதற்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
வடமாகாண விளையாட்டுத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்தோடு வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் சார்பில் உயர் விருதாகிய 'வடக்கின் தாரகைவிருது' வருடாந்தம் வழங்கப்பட்டு வருகின்றது. இந்த வருடத்துக்கான வர்ண இரவு நிகழ்வை எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த விருதுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடைய பாடசாலை வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் மாகாண கல்வி திணைக்களத்தினூடாகவும், ஏனையவர்கள் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் ஊடாகவும் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-108)

# இன்றைய மோதல்கள்

### திக்கம் மத்தியின் கால்பந்தாட்டம்

திக்கம் மத்திய சனசமுக நிலையம் வடமாகாண ரீதியாக நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரின் இன்று செவ்வாய்க் கிழமை இரவு 7 மணிக்கு இடம் பெறும் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மன்னார் ஜோசவாஸ் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

### அம்பாள் வி.கழக கரப்பந்துத் தொடர்

நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க் கிழமை இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் 'ஏ' பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை மத்திய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

### யாழ்ப்பாணம் மத்தியின் கூடைப்பந்துத் தொடர்


யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபை அமரர் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்தமாக வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையில் நடத்தும் கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் 20 வயதுப் பிரிவு அணிகளுக்கான ஆட்டங்கள் சில இன்று இடம்பெறவுள்ளன. இதன்படி இன்று பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் திருக்குடும்பக் கன்னியர் மட அணியை எதிர்த்து வேம்படி மகளிர் உயர்தரப் பாடசலை அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது. (ம-23)

## ஸ்பெயின், பிரேசில் அரையிறுதிக்கு தகுதி பெற்றன

17 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரில் ஸ்பெயின், பிரேசில் அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெற்றன.
ஸ்பெயின் அணி தனது காலிறுதியில் ஈரானை 3:1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. பிரேசில் அணி காலிறுதியில் பலம் வாய்ந்த ஜேர்மனியை 2:1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம)

# இலங்கைத் தொடரில் கோக்லி களமிறங்கார்

### இந்திய ஊடகங்கள் பரபரப்பு



இலங்கை - இந்தியா அணிகளுக்கு இடையிலான மூன்றுவகைத் தொடர்களும் அடுத்த மாதம் நடைபெறவுள்ள நிலையில், இந்தத் தொடரில் கோக்லி களமிறங்க வாய்ப்பில்லை என்று இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.
இந்திய அணி இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டதை அடுத்து, இலங்கை அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது. மூன்று டெஸ்ட், மூன்று ஒருநாள், மூன்று ரி-20 ஆட்டங்களைக் கொண்டதாக இந்தத் தொடர்கள் நடைபெறவுள்ளன. டெஸ்ட் தொடர் முதலாவதாக நடைபெறவுள்ளது. இந்தத் தொடர் எதிர்வரும் 16ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த நிலையில் சில தனிப்பட்ட காரணங்களுக்காக இலங்கைக்கு எதிரான தொடர்களில் இருந்து விலகும் முடிவை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் கோக்லி தெரிவித்துள்ளார் என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன.
இலங்கைக்கு எதிரான தொடரை முடித்துக் கொண்டு அடுத்ததாக இந்திய அணி தென்னாபிரிக்காவுக்குச் செல்கிறது. இந்தத் தொடரில் புத்துணர்ச்சியுடன் களமிறங்குவதற்காகவே இலங்கைக்கு எதிரான தொடரில் இருந்து கோக்லி விலகுகிறார் என்றும் இந்திய ஊடகங்கள் மேலும் குறிப்பிட்டன.
எனினும் இந்தத் தொடருக்காக நேற்று அறிவிக்கப்பட்ட இந்திய அணியில் விராட் கோக்லி தலைவராகப் பெயரிடப்பட்டார். (ம)




ஐரோப்பியக் கால்பந்துக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் மேர்சியா, பார்சிலோனா அணிகளுக்கு இடையிலான ஆட்டம் இன்று நடைபெறவுள்ள நிலையில், இந்த ஆட்டத்துக்காக நேற்று கடும் பயிற்சியில் ஈடுபட்டது பார்சிலோனா. (ம)

# அணியில் ஷபியுல், ஹொசைன்

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான ரி-20 தொடருக்கான பங்களாதேஷ் அணியில் ஷபியுல், ரூபல் ஹொசைன் இருவரும் இடம்பிடித்துள்ளனர்.
பங்களாதேஷ் அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரை 2:0 என்ற அடிப்படையிலும், மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரை 3:0 என்ற அடிப்படையிலும் தென்னாபிரிக்க அணி கைப்பற்றியது. இந்த நிலையில் இரண்டு ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் நாளைமறுதினம் ஆரம்பமாகிறது. இந்தத் தொடருக்கான பங்களாதேஷ் அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. வேகப்பந்து வீச்சாளர்களான ஷபியுல் இஸ்லாம், ரூபல் ஹொசைன் இருவருக்கும் அணியில் இடம்கொடுக்கப்பட்டது.
**பங்களாதேஷ் அணி விவரம்:** சகிப் அல் ஹசன் (தலைவர்), மொமினுல் ஹக்யூ, சவுமியா சர்கர், இம்ருல் கைய்ஸ், ரகிம், ரகுமான், மகமதுல்லா, லித்தோன் தாஸ், நசிர் ஹொசைன், மெகடி ஹசன் மிராஸ், ரூபல் ஹொசைன், சபியுல் இஸ்லாம், தஸ்கின் அகமட். (ம)

# எய்பரை வீழ்த்தியது ரியல் மட்ரிட் அணி

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணி அபார வெற்றி பெற்றது.
ரியல் மட்ரிட்டை எதிர்த்து எய்பர் மோதியது. ஆட்டத்தின் 18ஆவது நிமிடத்தில் பவுல்லோ மட்ரிட்டின் சார்பாக முதல் கோலைப் பதிவுசெய்தார். அசென்சியோ 28ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் பதிவு செய்ய முதல் பாதியின் முடிவில் 2:0 என்று ஆதிக்கம் செலுத்தியது மட்ரிட். இரண்டாவது பாதியின் 82ஆவது நிமிடத்தில் மார்செலோ கோலொன்றைப் பதிவுசெய்ய முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் ரியல் மட்ரிட் வெற்றிபெற்றது. (ம)




# ஊடகப் பணிப்பாளரராக அன்ரோ டினேஸ் நியமனம்




யாழ்ப்பாணம், ஒக். 24
இலங்கை தேசிய கராத்தே சம்மேளனத்தின் ஊடகப் பணிப்பாளராக வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அன்ரோ டினேஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக் கடிதம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற வடக்கு மாகாண கராத்தே சங்கத்தினால் நடத்தப்பட்ட கராத்தே தொடரில் வைத்து வழங்கப்பட்டது. இலங்கை கராத்தே சம்மேளனத்தின் தலைவர் சிசர குமார நியமனக் கடிதத்தை வழங்கினார். (ம-23)

# 30 ஓட்டங்கள் குறைவாக எடுத்துவிட்டோம்; தோல்வி குறித்த கோக்லியின் கண்டுபிடிப்பு

"நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் இந்திய அணி தோல்வியடைந்தமைக்கு 30 ஓட்டங்கள் குறைவாக எடுத்ததே காரணம்" என்று இந்திய அணியின் தலைவர் கோக்லி தெரிவித்தார்.
நியூசிலாந்து அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் இந்திய அணி நிர்ணயித்த 280 ஓட்டங்கள் என்ற இலக்கை 6 பந்துகள் மீதமிருக்க 4 இலக்குகளை இழந்து எட்டியது நியூசிலாந்து. ஆட்டம் முடிவடைந்த பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தோல்வி குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே கோக்லி இவ்வாறு தெரிவித்தார்.
"எனது ஆட்டம் (கோக்லி சதம் கடந்தார்) திருப்தி அளிக்கும் வகையில் இருந்தது. நியூசிலாந்து அணி தொடக்கத்திலேயே எங்களுக்கு நெருக்கடி



கொடுத்தது. 280 ஓட்டங்கள் போதுமானவை என்று நாங்கள் எண்ணினோம். ஆனால் ரெய்லரும், லாதமும் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ரன்அவுட் தவிர அவர்கள் எங்களுக்கு வேறு எந்த வாய்ப்பையும் கொடுக்கவில்லை. இரு வரும் இணைந்து 200 ஓட்டங்களைக் குவித்தமை எங்களைப் பலவீனப்படுத்தியது. நாங்கள் கூடுதலாக 30 ஓட்டங்களை எடுத்திருந்தால் ஆட்டம் எமக்குச் சாதகமாக மாறியிருக்க வாய்ப்புண்டு" என கோக்லி மேலும் தெரிவித்தார்.
கோக்லியின் இந்தக் கருத்து, அவர் இன்னும் ஒரு முதிர்ச்சியடைந்த தலைவராக உருவெடுக்கவில்லை என்பதையே வெளிப்படுத்துகிறது. ஏனெனில் நியூசிலாந்து அணி கடினப்பட்டு இந்தியாவை வீழ்த்தவில்லை. 4 இலக்குகளை மட்டுமே இழந்து மிகமிக இலகுவாக வெற்றி பெற்றது. கோக்லி சொல்வதைப் போல் கூடுதலாக 30 ஓட்டங்களைப் பெற்றிருந்தாலும் நியூசிலாந்து அணி இலக்கை கச்சிதமாகக் கணித்து வெற்றிபெற்றிருக்கும் வகையிலேயே நேற்றுமுன்தினம் துடுப்பெடுத்தாடியது.
நியூசிலாந்து அணி, கடைசிக் கட்டத்தில் பெரியளவில் அடித்தாடவில்லை. லாதம் சதம் கடந்த பின்னர் ரெய்லர் சதத்தை நெருங்கியிருந்தார். எனவே தன்னால் ஓட்டங்கள் பெறப்பட்டு ஆட்டம் முடிக்கப்பட்டால் ரெய்லரின் சதம் வீணாகிவிடும் என்று லாதம் அதிரடியைக் கைவிட்டிருந்தார். எனின், இந்தியா குறைவான ஓட்டங்களைப் பெற்றது உண்மையே. ஆனால் அது கோக்லி சொல்வதைப் போல் 30 ஓட்டங்கள் அல்ல. சுமார் 60 - 70 ஓட்டங்கள். (ம)

# இலங்கைக்கு மீண்டும் படுதோல்வி வழித்துத் துடைத்தது பாகிஸ்தான்



இலங்கைக்கு எதிராக நேற்று நடைபெற்ற ஐந்தாவதும் இறுதியுமான ஆட்டத்திலும் பாகிஸ்தான் வெற்றிபெற்று ஐந்து ஆட்டங்களைக் கொண்ட தொடரை 5:0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது. முடிவடைந்த முதல் நான்கு ஆட்டங்களிலும் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றிருந்தது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஐந்தாவதும் இறுதியுமான ஆட்டம் நேற்று நடைபெற்றது. 0:5 என்று தொடரை இழக்காமல் குறைந்தபட்சம் ஒரு ஆட்டத்திலேனும் வெற்றிபெற வேண்டும் என்ற நெருக்கடி இலங்கைக்கு இருந்தது.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக தரங்க மற்றும் சமரவிக்கிரம.
ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழந்தார் சமரவிக்கிரம. தான் எதிர்கொண்ட முதல் பந்திலேயே ஆட்டமிழந்தார் சந்திமல். தரங்கவையும் பவிலியனுக்கு அனுப்பினார் உஸ்மன் கான். திரிமன்ன பெற்ற 19 ஓட்டங்களே மத்திய வரிசையில் அதிகபட்சம். டிக்வெல்ல ஓட்டமெதையும் பெறாத நிலையிலும், சிறிவர்த்தன 6 ஓட்டங்களுடனும் உஸ்மன் கானின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர். திசர பெரேரா 25 ஓட்டங்களைப் பெற்றார். இதுவே ஆகச்சிறந்த தனிநபர் பெறுபேறு. முடிவில் 103 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது இலங்கை.
பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு ஆரம்ப இணையே வெற்றிக்கான அடித்தளத்தைப் பலமாக அமைத்தது. இமாம் உல் ஹக், சமன் இருவரும் இணைந்து சிறந்த ஆட்டத்தை வழங்கினர். இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களைத் தொட்டது பாகிஸ்தான்.
48 ஓட்டங்களுடன் சமன் ஆட்டமிழந்தார். எனினும் தொடர்ந்தும் சிறந்த ஆட்டத்தை வழங்கினார் இமாம் உல் ஹக். பிறிதொரு இலக்கை இழக்காமல் 178 பந்துகள் மீதமிருக்க 9 இலக்குகளால் வெற்றிபெற்றது பாகிஸ்தான்.
(ம)

## வேலைவாய்ப்பு
எமது DYNAMIC நிறுவனம் இலங்கை வடக்கில் ஆரம்பிக்கவிருக்கும் புதிய கிளைகளுக்கு O/L, A/L படித்த இளைஞர்கள் தேவை.
பயிற்சி அளிக்கப்பட்டு நிரந்தர தொழில் வாய்ப்பும் வெளிநாட்டு வேலைவாய்ப்பும் வழங்கப்படும்.
வயதெல்லை 18 - 35
தங்குமிட வசதி உண்டு.
தொடர்பு - 077 408 3273, 0215679002

## K.M.M
பதிவு செய்யப்பட்ட திருமணசேவை
திருமணப் பொருத்தம் பார்த்தல், திருமணங்கள் நிச்சயித்தல், ஜாதகம் எழுதுதல் (ருது) போன்ற சேவைகள் திருப்திகரமாக செய்து கொடுக்கப்படும். உங்களது வாழ்க்கையில் நடந்த, நடக்கின்ற, நடக்கப் போகின்ற கால பலன்கள் 40 வருடத்திற்கு மிகத்துல்லியமாக கணித்து கொடுக்கப்படும்
குறிப்பு - பதிவுக்கட்டணம் இல்லை
Phone Number - 021 223 2222, 076 835 1932
Viber Number - 076 9416 424
வெளிநாட்டு தொடர்பு - 0041 617 618 756 (House)
Swiss Number - 0041 768 185 443 (Office)
Manager - K. Suhanthan

## திக்கம் மத்திய சனசமூக நிலையம் நடத்தும் வடமாகாண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி
வைரவிழாக் கிண்ணம் - 2017
அரையிறுதி ஆட்டங்கள்
மின்னொளியில் 24.10.2017


அன்ரனீஸ் (பாசையூர்)
நேரம் 7.00 pm
VS

நவஜீவன்ஸ் (உடுப்பிட்டி)


விண்மீன் (பலாலி)
நேரம் 8.00 pm

ஜோசப்வாஸ் ஐக்கியம் (மன்னார்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
நடைபெறும் இடம் :
திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானம்.
ஊடக அனுசரணை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## யங்ஹென்றிஸ்-மாதகல் ஐக்கியம் அணிகளின் ஆட்டத்தில் கைகலப்பு

வலிகாமம் லீக்குக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையிலான மைலோ கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற இளவாலை யங்ஹென்றிஸ், மாதகல் ஐக்கியம் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் ரசிகர்கள் கைகலப்பில் ஈடுபட்டதை அடுத்து ஆட்டம் கைவிடப்பட்டது.
இளவாலை சென். ஹென்றிஸ்கல்லூரிமைதானத்தில் நேற்று மாலை 4 மணிக்கு இந்த ஆட்டம் ஆரம்பமானது. முதல் 25 நிமிடங்கள் நிறைவடைந்த நிலையில் 2:0 என்ற கோல் கணக்கில் யங்ஹென்றிஸ் அணி முன்னிலை வகித்தது. அதன்பின்னரேயே குழப்பம் ஏற்பட்டதாக அறியமுடிகிறது.
இந்த விடயம் தொடர்பில், வலிகாமம் லீக்குடன் தொடர்பு கொண்டு கேட்டபோது ,"இளவாலை யங்ஹென்றிஸ் வீரர்கள் அமர்ந்திருந்த இடத்தில் ஐக்கியம் அணியின் ஆதரவாளர் என்று கருதப்படும் நபர் சென்று வாக்குவாதத்தில் ஈடுபட்டதை அடுத்து, அது கைகலப்பாக மாற ஆட்டம் கைவிடப்பட்டது. இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக வீரர்களும் தாக்குதலுக்கு உள்ளானார்கள். இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மீதும் கற்களாலும் போத்தல்களாலும் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது" என்று தெரிவிக்கப்பட்டது.
(ம)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு
நல்ல தண்ணீர் கிணற்றுடன் வீடு, காணி விற்பனைக்கு உண்டு.
இடம் :- கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.
076 785 1067

## வீடு வாடகைக்கு தேவை
2 or 3 Bed Rooms உடன் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு தேவை.
இடம் - சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு அண்மையில்.
தொடர்பு - 077 010 7262

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.10.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.